பக்கங்கள்: 24

தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:04 21.05.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

அற்புதம்மாளின் அறவளிப் போராட்டம்
வர்மா
பக்கம் 04

திசை மாறும் அரசியல்
அ.நிக்ஸன்
பக்கம் 08

நினைவேந்தல் அடக்குமுறைகளும் அரசியலும்

பி.மாணிக்கவாசகம்

போரில் இறந்தவர்களையும் வலிந்து கொல்லப்பட்டவர்களையும் பெரும் அச்சத்துடனேயே தமிழ்மக்கள் நினைவுகூர்ந்து வருகின்றார்கள். இறந்தவர்களை நினைவுகூர்வது அடிப்படை உரிமை. தனிப்பட்ட ஒருவருக்கும், ஒரு குடும்பத்தினருக்கும் மட்டுமல்லாமல் ஒரு சமூகத்திற்கும் அந்த உரிமை இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் கூட்டுப் படுகொலைகளுக்கு ஆளாகிப் போன ஒரு சமூகத்தின் அல்லது ஓர் இனத்தின் நினைவுகூர்தலாகிய நினைவேந்தல் என்பது ஓர் அடிப்படை கூட்டுரிமையாகும். அதனை எவரும் தடுக்க முடியாது. தடை செய்யவும் முடியாது. ஆயுத ரீதியிலான அச்சுறுத்தல்கள் அல்லது அடக்குமுறை வலிமையுள்ள சட்டத்தின் துணையுடன் அந்த உரிமையைத் தடைசெய்யவும் தடுத்து நிறுத்தவும் முடியாது.

அது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். ஓர் இனத்தின் மீதான கூட்டுப் படுகொலைகள் எவ்வாறு ஓர் இனப்படுகொலையாக நோக்கப்படுகின்றதோ அதேபோன்று இந்தக் கூட்டுரிமையை மீறுவதும் இனப்படுகொலை சார்ந்த ஒரு குற்றச் செயலாகவே கருதப்பட வேண்டும்.

நினைவேந்தல் என்பது வெறும் பிரச்சாரத்துக்கான செயற்பாடல்ல. வெறும் புகழுக்கான ஒரு நடவடிக்கையுமல்ல. அது ஒரு பண்பாட்டுப் பாரம்பரிய கடமை. சமய கலாசார வழிவந்த மரபு ரீதியிலான ஓர் உரிமை. அதற்கு ஓர் ஆன்ம சக்தியுண்டு. தெய்வீகத் தன்மையும் உண்டு. இந்த வகையில் அது, இரத்த உறவு நிலை உரிமைசார்ந்த நன்றிக்கடன்களை நிறைவேற்றுகின்ற தவிர்க்க முடியாத ஒரு கடமையாகும். .

இது தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் பல்வேறு மதங்களைப் பின்பற்றுகின்ற அனைத்து இன மக்களுக்கும் உரியது. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், யுத்தத்தில் இறந்தவர்களுக்கும்

20

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

சுவீடனையும் பின்லாந்தையும் கடுமையாக எதிர்க்கும் துருக்கி

வானதி

ரஷ்ய - உக்ரைன் போர் முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில் சுவீடனுக்கும் பின்லாந்துக்கும் எதிராக துருக்கி கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. நேட்டோவில் சேர்வதற்கு சுவீடனும் பின்லாந்தும் விருப்பம் தெரிவித்துள்ளன. இதற்கு துருக்கி ஆட்சேபனை தெரிவித்துள்ளது. துருக்கிக்கு தலையிடியைக் கொடுக்கும் குர்திஷ் போராளிகளுக்கு அவை ஆதரவளிப்பதாகக் கூறப்படுவதால், அணிசேராத நோர்டிக் நாடுகளைக் கூட்டணிக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று துருக்கி வலியுறுத்தியது.

நேட்டோவில் சேர்வதற்கு உக்ரைன் முயற்சி செய்ததால்தான் ரஷ்யா படையெடுத்ததாக நம்பப்படுகிறது. ஏனைய நாடுகளுக்கு ரஷ்யாவின் எச்சரிக்கை உக்ரைன் மீதான யுத்தம். அந்த எச்சரிக்கையையும் மீறி சுவீடனும் பின்லாந்தும் நேட்டோவை நோக்கிச் செல்கின்றன

“துருக்கியின் அறிக்கைகள் சமீப நாட்களில் மிக விரைவாகவும் கடினமாகவும் மாறிவிட்டன. ஆனால், நிலைமையை ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைப்போம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்” என்று சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமுக்கு விஜயம் செய்த பின்லாந்து ஜனாதிபதி சவுலி நினிஸ்டோ தெரிவித்தார்.

ஏப்ரல் தொடக்கத்தில் எர்டோகனுடன் பேசியதாக நினிஸ்டோ கூறினார், “அவர் ஆதரவளிப்பவர் என்பது தெளிவாகத் தெரிந்தது மேலும், பின்லாந்து உறுப்பினர்களைச் சாதகமாக மதிப்பிட வேண்டும் என்று அவர் கூறினார். இப்போது வெவ்வேறு கருத்துகள் இருப்பதாகத் தெரிகிறது. நாங்கள் தொடர்ந்து விவாதிக்க வேண்டும்.”

செவ்வாயன்று பின்லாந்து பாராளுமன்றம் 188- 8 வாக்கெடுப்பில் உறுப்பினர் பதவியைக் கோரும் அரசாங்கத்தின் முடிவை ரப்பர் முத்திரை குத்தியது. பிரஸ்ஸல்ஸில் உள்ள கூட்டணியின் தலைமையகத்தில் புதன்கிழமை கூட்டாக ஒப்படைக்கப்படும் முறையான விண்ணப்பக் கடிதங்களில் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் கையெழுத்திட்டனர்.

ஆனால், எர்டோகனின் ஆட்சேபனைகள் வெள்ளிக்கிழமையும் மீண்டும் திங்களன்றும் விண்ணப்ப செயல்முறை எவ்வளவு விரைவாக முன்னேறும் என்ற கேள்விகளை எழுப்பியது, ஏனெனில், புதிய உறுப்பினர்கள் சேர 30 நேட்டோ நாடுகளிடையே ஒருமித்த கருத்து தேவை. துருக்கிய தலைவர் நோர்டிக் நாடுகள் “பயங்கரவாதிகளுக்கு” பாதுகாப்பான புகலிடத்தை வழங்குவதாகவும் துருக்கி மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதாகவும் குற்றம் சாட்டினார். குர்திஷ் போராளிகளைத் தாக்குவதற்காக அங்காரா வடக்கு சிரியாவிற்கு துருப்புக்களை அனுப்பிய பின்னர் 2019 இல் சுவீடன் மற்றும் பின்லாந்து ஆயுத ஏற்றுமதியை நிறுத்தியதற்கான வெளிப்படையான குறிப்பு உள்ளதாக துருக்கி தெரிவித்தது.

துருக்கியின் ஆட்சேபனைகள் வாஷிங்டனிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகத் தோன்றியது, சமீபத்திய ஆண்டுகளில் அங்காராவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவின் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பை வாங்கும் துருக்கியின் முடிவை எதிர்த்து அமெரிக்கா அதன் F - 35 போர் ஜெட் திட்டத்தில் இருந்து துருக்கியை இடைநீக்கம் செய்தது.

துருக்கிய வெளியுறவு மந்திரி புதன்கிழமை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் அன்ரனி பிலிங்கெனை சந்திப்பதற்காக நியூயோர்க்கிற்குப் பயணம் செய்தார். இதற்கிடையில், ஜனாதிபதி ஜோ பைடன் வியாழன் அன்று வாஷிங்டனில் நினிஸ்டோ ஆண்டர்சன் ஆகியோரைச் சந்தித்து அவர்களின் நேட்டோ விண்ணப்பங்கள் மற்றும் உக்ரைனுக்கான ஆதரவைப் பற்றி விவாதிக்க இருப்பதாக வெள்ளை மாளிகை அறிவித்தது.

நேட்டோவில் இணைவது இரண்டு நோர்டிக் நாடுகளுக்கு மிகப்பெரிய மாற்றமாக இருக்கும். இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனால் தோற்கடிக்கப்பட்ட பின்லாந்து நடுநிலையை ஏற்றுக்கொண்ட அதே வேளையில், சுவீடன் 200 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவக் கூட்டணியில் இருந்து விலகியிருந்தது.

ரஷ்யா தனது நோர்டிக் அண்டை நாடுகள் கூட்டணியில் சேருவது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று பலமுறை எச்சரித்துள்ளது. குடிமக்கள் ரஷ்யாவின் சாத்தியமான சீர்குலைக்கும் நடவடிக்கைகளுக்கு தங்களைத் தாங்களே தயார்படுத்திக் கொள்ளுமாறு சுவீடன் பிரதம மந்திரி எச்சரித்தார். இதில் தவறான தகவல் மற்றும் நாட்டை மிரட்டி பிளவுபடுத்தும் முயற்சிகள் அடங்கும்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் செவ்வாயன்று இரண்டு பின்லாந்து இராஜதந்திரிகளை வெளியேற்றுவதாகவும் பால்டிக் கடலில் கவனம் செலுத்தும் ஒரு பன்னாட்டு அமைப்பை விட்டு வெளியேறுவதாகவும் கூறியது. ரஷ்யாவிற்கு எதிரான சர்வதேசப் பொருளாதாரத் தடைகள் மற்றும் உக்ரைனுக்கு ஆயுத விநியோகம் ஆகியவற்றில் அதன் பங்கு உட்பட, “ரஷ்யா தொடர்பான பின்லாந்தின் மோதல் போக்கிற்கு” எதிரான ஒரு எதிர்ப்பை பின்லாந்து தூதர் வாசித்ததாகவும் அது கூறியது. அறிக்கையில் நேட்டோ பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

நேட்டோவில் இணைவது இரண்டு நோர்டிக் நாடுகளுக்கு மிகப்பெரிய மாற்றமாக இருக்கும். இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனால் தோற்கடிக்கப்பட்ட பின்லாந்து நடுநிலையை ஏற்றுக்கொண்ட அதே வேளையில், சுவீடன் 200 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவக் கூட்டணியில் இருந்து விலகியிருந்தது.

நேட்டோவில் பின்லாந்து, சுவீடன் உறுப்புரிமைக்கு துருக்கியின் ஆட்சேபனைகளைச் சமாளிக்க முடியும் என்று ஐரோப்பிய அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல், இரு நாடுகளும் “அனைத்து உறுப்பு நாடுகளிடமிருந்தும் வலுவான ஆதரவைப் பெறும். ஏனெனில், அது நமது ஒற்றுமையை அதிகரிக்கிறது. மேலும், அது நம்மை வலிமையாக்குகிறது” என்றார்.

தடைசெய்யப்பட்ட குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே.கே, இடதுசாரி தீவிரவாதிகள் மற்றும் அங்காரா 2016 இல் தோல்வியுற்ற இராணுவ சதி முயற்சியின் பின்னணியில் இருந்ததாக அங்காரா கூறும் முஸ்லிம் மதகுரு ஃபெத்துல்லா குலேனின் ஆதரவாளர்களுக்குப் பல ஐரோப்பிய நாடுகள் ஆதரவளிப்பதாகத் துருக்கி குற்றம் சாட்டுகிறது.

துருக்கியைத் தவிர ஏனைய நேட்டோ நாடுகள் பின்லாந்துக்கும் சுவீடனுக்கும் ஆதரவாக உள்ளன. ஆகையால், துருக்கியின் எதிர்ப்பு முளையிலேயே கருகிவிடும் என்பதால் சுவீடனும் பின்லாந்தும் தெம்பாக உள்ளன.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

மனதைத் தொட்ட மே – 18

முள்ளிவாய்க்காலில் 13 ஆண்டுகளுக்கு முன்னர் இனப்படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்கள் நினைவாக பல்லாயிரக்கணக்கானோர் ஒன்று திரண்டு நினைவஞ்சலி செலுத்தினர். அதேபோல் தலைநகர் கொழும்பில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு எதிராகப் போராட்டம் நடைபெறும் இடத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. இதுவரைகாலமும் இல்லாத மாற்றமாக இது பார்க்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டின் பின்னர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களை ராஜபக்ஷவின் அரசாங்கம் தடை செய்தது. புலிகளை அழித்த தினம் என்பதை விட தமிழ்மக்களை வென்ற தினமாகவே சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தப்பட்டிருந்தது. சிங்களமக்களின் தூக்கத்தைக் கலைத்த விடுதலைப் புலிகளை அழித்ததால் அரசியலில் தமக்கு வீழ்ச்சி இல்லை என ராஜபக்ஷ குடும்பம் நம்பியது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் கண்ணீர்க் கடலில் துவண்ட போது கொழும்பில் வெற்றி தினம் கொண்டாடப்பட்டது.

ஆட்சி பீடத்தில் இடஞ்சல் இன்றி வீற்றிருப்பதற்காக சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் பிரித்து வைக்கும் அரசியல் பெருவெற்றி பெற்றது. தமிழ்மக்கள் இந் நாட்டுக்குரியவர்கள் எனச் சொன்ன சிங்கள அரசியல்வாதிகள் சிலர் ஒரு காலத்தில் இருந்தனர். இன்று இனவாதம் பேசும் அரசியல்வாதிகள்தான் சிங்கள மக்களால் போற்றப்படுகிறார்கள்.

மைத்திரி ரணில் இரட்டைத் தலைமையிலான நல்லாட்சியில் முள்ளிவாய்க்காலுக்குத் தடை விதிக்கப்படவில்லை. அரச ஆட்சி மீண்டும் ராஜபக்ஷ குடும்பத்தின் கைகளுக்குச் சென்ற போது போரில் இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

கறுப்பு ஜூலை, ஆடிக் கலவரம் வெலிகடைப் படுகொலை, குமுதினிப் படகு படுகொலை போன்றவற்றைத் தமிழ்மக்கள் வருடாந்தம் நினைவு கூர்வார்கள். விடுதலைப் புலிகளின் கை ஓங்கிய போது மாவீரர் வாரம், கரும்புலிகள் தினம் என்பன முன்னிறுத்தப்பட்டன. இலங்கை அரச படைகள் வீதியில் குவிக்கப்படும் நாளாக அந்த நாட்கள் மாறின. பிரபாகரனின் பிறந்த நாளன்று பிறந்த தமிழ்மக்கள் தமது பிறந்த நாளைப் பெரிதாகக் கொண்டாடப் பயந்தனர். பிரபாகரன் என்ற பெயர் உள்ளவர்கள் கொழும்பில் நடமாடப் பயந்தார்கள்.

2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில்தான் தமிழ் மக்கள் தஞ்சமடைந்திருந்தனர். ஆனால், ஆட்சியாளர்கள் அத்தனை தமிழர்களையும் கொத்துக் கொத்தாக படுகொலை செய்தது. இன்னமும் தமிழினப் படுகொலைக்கு நீதி கிடைக்கவில்லை. இதற்கான போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13 ஆவது நினைவேந்தல் நிகழ்வு உலகம் முழுவதும் தமிழர்களால் அனுசரிக்கப்பட்டது. இலங்கையில் ஈழத்தமிழர் தாயகப் பகுதியில் கடந்த ஒரு வார காலமாக முள்ளிவாய்க்கால் நோக்கி பேரணி நடத்தினர். பல்வேறு பகுதிகளில் இருந்தும் முள்ளிவாய்க்காலுக்குச் சென்ற தமிழர்கள் அங்கு நினைவு முற்றத்தில் ஈகைச் சுடரேற்றி வணக்கம் செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கூட்டமைப்பின் ஏற்பாட் டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து ஏனைய உறவுகளும் தமது உறவுகளுக்காக சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 2009 ஆம் ஆண்டு இறுதிக் காலத்தில் உயிரிழந்தோர் நினைவாக கஞ்சியும் வழங்கப்பட்டது.

ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. 2022 ஆம் ஆண்டு மே 9 ஆம் திகதியுடன் இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இனப்படுகொலையான தமிழர்களுக்கு சிங்களவர்கள் முதல்முறையாக கொழும்பில் அஞ்சலி செலுத்தினர். தந்தை செல்வா தலைமையிலான தமிழ்த் தலைவர்களின் அஹிம்சைப் போராட்டத்தை இரத்தக் களறியாக்கிய கோல் பேஸில் யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழ் உறவுகளுக்காக நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது.

தமிழில் தேசிய கீதம் பாடக்கூடாது எனப் பிரகடனம் செய்த கோல் பேஸில் சிங்கள மக்கள் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடினார்கள். எந்த ஒரு அரசியல் தலைவரினதும் வழிகாட்டல் இல்லாமல் மக்களால் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நல்லதொரு அறிகுறியாகும்.

மாவீரர் நாளில் முறுகும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிங்கள மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அஞ்சலி செலுத்தினார்கள். மட்டக்களப்பு முஸ்லிம் மக்களும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.

மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். ஆனால், பாராளுமன்ற அதிகாரம் இன்னமும் அவரின் கையில் இருப்பதையே உபசபாநாயகர் தெரிவு வெளிப்படுத்தி உள்ளது. எனவே, ராஜபக்ஷாக்கள் விரும்பாமல் அரசியல் சட்டத் திருத்தம் சாத்தியமில்லை. மக்கள் இப்போது முகம் கொடுக்கும் பொருளாதார நெருக்கடிகள் வெறுமனே பெற்றோல், டீசல், எரிவாயு, உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு என்பவை மட்டுமல்ல. வேலையில்லாப் பிரச்சினை, பொருட்களின் பல மடங்கு விலை உயர்வு, அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் மிகக்குறைந்துள்ளமை, உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்களை இறக்குமதி செய்ய அந்நியச் செலாவணி இல்லை எனப் பல பிரச்சினைகள் உள்ளன.

இவை எல்லாம் உடைத்தெறியப்படும்போது தான் இலங்கை சொர்க்கபுரியாகும். ■



புதிய அமைச்சர்களுக்கு சலுகைகள், மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்களுக்கு அமைச்சுச் சம்பளம் வழங்குவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினரின் சராசரி சம்பளத்தையே அவர்கள் பெறுவார்கள்.

அமைச்சரவை, பிரதமர் உட்பட 20 உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்தப்படும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர், புதிய அமைச்சர்களின் மேலதிக கொடுப்பனவுகள், சலுகைகள் போன்றவை இரத்துச் செய்யப்படும். கூடுதல் ஊதியம் அல்லது கூடுதல் சலுகைகள் இன்றி பணியாற்றுவதற்குத் தனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அனைவரும் இணங்கியுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்குப் பாதுகாப்பாக முன்னாலும் பின்னாலும் செல்லும் வாகனங்களின் தொகையும் குறைக்கப்படும்.

தற்போது நிலவும் மக்கள் எதிர்ப்பின் கீழ், அமைச்சர்கள் ஒரே நேரத்தில் ஒரு பின்-இறுதி காரை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என்று பிரதமர் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளார்.

எந்தவொரு அமைச்சரும் முன் பக்க கார்களையோ அல்லது முன் பக்க பொலிஸ் வாகனங்களையோ பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் நிலவும் போராட்டங்கள் தணிந்ததையடுத்து அமைச்சர்களுக்கு வழங்கப்படும் பின் பக்கம் வாகனங்களை நிறுத்தவும் பிரதமர் தீர்மானித்துள்ளார். ■

அற்புதம்மாளின் அறவழிப் போராட்டம்

வர்மா

தனது மகனை மீட்க 1991 ஆம் ஆண்டு தொடங்கிய அற்புதம்மாளின் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட மகன் பேரறிவாளனை, தனது 31 ஆண்டுகால நீதிப் போராட்டத்தால் அற்புதம்மாள் மீட்டுள்ளார்.

தமிழகத்தில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டது உலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்தச் சம்பவம் தன் வாழ்க்கையை சிறைக் கூடமாக்கும் அறிவு என அறியப்படும் பேரறிவாளன் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்.

பேரறிவாளனின் வீட்டுக்குள் புகுந்த பொலிஸார் அவரை விசாரித்துவிட்டு விடுவித்து விடுவோம் எனக் கூறி கூட்டிச் சென்றனர். 19 வயது இளைஞனான பேரறிவாளன் 31 வருடங்கள் சிறையில் வாடினார். அவருடன் சேர்த்து ஏழு பேர் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தனர்.

ராஜீவ் காந்தியின் கொலையால் இந்திய அரசியலில் அதிர்ச்சி ஏற்பட்டது, கொலைகாரர்களைக் கண்டுபிடித்து நீதி மன்றத்தில் நிறுத்த வேண்டிய நிலை பொலிஸாருக்கு ஏற்பட்டது. இலங்கையில் இந்திய இராணுவம் செய்த அத்துமீறலுக்காக விடுதலைப் புலிகள் ராஜீவை கொன்ற கோணத்தில் இந்திய புலனாய்வுப் பிரிவு விசாரணையைத் தொடர்ந்தது. அது உண்மையாக இருக்கும் என உலகம் நம்பியது.

நேரு குடும்பத்தின் வாரிசு, இந்தியாவின் அடுத்த தலைவர் போன்ற புகழுக்குரிய ராஜீவின் கொலை வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த ஆதாரங்கள் எல்லாம் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கப் போதுமானதாக இருந்தது. ஆனால், நேர்மையாக விசாரணை நடைபெற வில்லை என நடுநிலையாளர்கள் கூறிய எவையும் கருத்தில் எடுக்கப்பட வில்லை துரிதமாக விசாரணை நடைபெற்றது. குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுக்கப்பட்டதுடன் பொலிஸாரினதும் குற்றப் புலனாய்வாளர்களினதும் கடமை முடிந்து விட்டது.

தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூரில் 1991ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி நடந்த தற்கொலைக் குண்டு வெடிப்பில் அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக பேரறிவாளன், நளினி, முருகன் உட்பட 25 பேர் கைதுசெய்யப்பட்டனர். இந்த வழக்கின் முக்கியக் குற்றவாளியான சிவராசனுக்கு, மனிதவெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்காக 9 வோல்டேஜ் கொண்ட இரண்டு பற்றீ வாங்கிக் கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் பேரறிவாளன் கைதுசெய்யப்பட்டார். 'சிறு விசாரணைக்காக' அழைத்துச் செல்லப்பட்ட பேரறிவாளனுக்கு இவ்வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9 இல் பேரறிவாளனுக்குத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படவிருந்த நிலையில், அது தள்ளிவைக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், பேரறிவாளன், சாந்தன், நளினி ஆகியோருக்கு மரணதண்டனையும் ஜெயக்குமார், ராபர்ட்பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

பின்னர், முருகன், பேரறிவாளன், சாந்தன், நளினி ஆகியோரின் மரணதண்டனையும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

ராஜீவை கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் விடுதலையின் பின்னணியில் அரசியல் உள்ளது. அப்போது ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியும், பின்னர் ஆட்சி பீடம் ஏறிய பாரதீய ஜனதாக் கட்சியும் தமது அதிகாரத்தை தமிழகத்தின் மீது திணித்தன. தமிழக ஆளுநரின் மூலம் ஏழு பேரின் விடுதலைக்கு தடை விதித்தன. தமிழக அரசியல் எதிரிகளான திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஏழு பேரின் விடுதலையில் ஒருமித்துக் குரல் கொடுத்தன.

ஆளுநர் என்பவர் தமிழக அரசின் தீர்மானங்களில் தலையிட முடியாது என்பதை நீதி மன்றத் தீர்ப்பு வெளிப்படுத்தி உள்ளது பயன்படுத்திய குண்டுக்கு பற்றீ வாங்கிக் கொடுத்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

சென்னை கல்லூரி ஒன்றில் படித்து வந்த 19 வயது மாணவனான பேரறிவாளனை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர், அவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அப்போது தொடங்கியதுதான் அற்புதம்மாளின் சட்டப் போராட்டம். அப்போது அற்புதம்மாளுக்கு 43 வயது.

பேரறிவாளன் சிறையில் இருக்க கணவர் குயில் தாசன். அன்பு, அருள் என்ற இரு பெண்களுடன் ஜோலார்பேட்டையில் வசித்து வந்தார். அப்போது அவரை பார்க்க வேண்டும் என்றால், ஜோலார்பேட்டையில் இருந்து சென்னைக்கு சென்று, சி.பி.ஐ அதிகாரிகளிடம் அனுமதி வாங்கி, மீண்டும் பூந்தமல்லி சென்று காத்திருந்து பார்க்க வேண்டும். இதற்காக அவர் நூற்றுக்கணக்கான மீற்றர் பயணங்களை மேற்கொண்டுள்ளார். பல நாட்கள் தனது மகனைச் சந்திக்காமலே திரும்பியிருக்கிறார்.

தனது மகனின் விடுதலைக்காக தமிழகம் முழுவதும் அற்புதம்மாள் அலைந்து திரிந்தார். அவர் கலந்து கொண்ட போராட்டங்கள் எண்ணிலடங்காதவை. தமிழக முதலமைச்சர்கள் அனைவரையும் சந்தித்து கோரிக்கை விடுத்தார். அவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

களைத்துப்போன முகமும் தோள்பட்டையில் பை, நரைத்த முடி, றப்பர் செருப்பு என வலம் வந்த அற்புதம்மாளின் விடா முயற்சிக்கு 31 ஆண்டுகளுக்குப் பிறகு விடிவு பிறந்திருக்கிறது.

பேரறிவாளன் நிரபராதி, அவருடைய வாக்கு மூலத்தை நான் தவறாகப் பதிவிட்டுவிட்டேன் என 2013 ஆம் ஆண்டு தியாகராஜன் ஐ.பி.எஸ் வெளிப்படையாகப் பேட்டி கொடுத்தார். இதேபோல் விசாரணை செய்த அதிகாரிகள் ஓய்வு பெற்ற பின்னர் குழறுபடிகளை வெளிப்படுத்தினர்.

1991

ஜூன், 11: பேரறிவாளன் கைது

1998 ஜூன், 28: ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத்தண்டனை உறுதி

1999 மே, 11: மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் சாந்தன், பேரறிவாளன், முருகன், நளினி ஆகியோருக்கு தூக்குத் தண்டனை உறுதி செய்தது. மற்ற 3 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

1999 ஒக்ரோபர், 8: தூக்குத் தண்டனையை மறு ஆய்வு செய்யக்கோரிய மனுவை தள்ளுபடி செய்தது உச்சநீதிமன்றம்.

1999, அக்டோபர், 17: தமிழக கவர்னருக்கு பேரறிவாளன் கருணை மனு அனுப்பி வைத்தார்.

2000, ஏப்ரல், 25: பேரறிவாளனின் கருணை மனுவை நிராகரித்த கவர்னர், நளினியின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார்.

2000, ஏப்ரல், 26: ஜனாதிபதிக்கு பேரறிவாளன் கருணை மனு அனுப்பி வைத்தார்.

2011, ஆகஸ்ட், 26: பேரறிவாளனின் கருணை மனுவை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நிராகரித்தார்.

2016: கருணை மனுவை ஜனாதிபதி தாமதமாக நிராகரித்ததாக உச்சநீதிமன்றத்தில் பேரறிவாளன் வழக்கு.

2022 மே, 18: பேரறிவாளனை விடுவித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு. சிறையில் இருந்த காலகட்டத்தில் சிறையிலிருந்தபடி பி.சி.ஏ, எம்.சி.ஏ முடித்த பேரறிவாளன் ஐந்துக்கும் மேற்பட்ட சான்றிதழ் படிப்புகளையும் முடித்துள்ளார். மேலும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் டெஸ்க்டாப் பப்ளிஷிங் டிப்ளோமா படிப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சிபெற்று தங்கப் பதக்கம் வென்றார். டிப்ளோமா படிப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சிபெற்று தங்கப் பதக்கம் வென்றார். தான் எழுதிய, 'தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்' என்ற நூலில், தான் நிரபராதி என்பதற்கான ஆதாரங்களைத் தர்க்கங்களின் அடிப்படையில் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தன் இளமை முழுவதையும் சிறையில் கழிக்க நேர்ந்த பேரறிவாளன் பல்வேறு உடல் நலக் கோளாறுகளுக்கு உள்ளானார்.

இப்போது பேரறிவாளன் விடுதலையாகி விட்டார். அவருடைய இளமையை மீண்டும் கொடுக்க யாராலும் முடியாது. 31 ஆண்டுகளுக்கு பிறகான பேரறிவாளன் விடுதலைக்கும், 161 சட்டப்பிரிவு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்ற உச்ச நீதிமன்றத்தின் அறிவிப்புக்கும் முக்கிய காரணகர்த்தா பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் எனக் கூறினால் மிகையாகாது. 2011 ஆம் ஆண்டு பேரறிவாளன் உள்ளிட்டோருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்ற நாள் குறித்ததைத் தொடர்ந்து, செங்கொடி என்ற 21 வயதான பெண், தீக்குளித்து மாண்டு போனார். மேலும், கலங்கி போனார் அற்புதம்மாள் மரண தண்டனைக்கு எதிரான முன்னெடுப்பு தீவிரமடைந்து சட்டப் போராட்டம் மூலம் அவர்கள் தூக்கில் போடப்படுவது தடுக்கப்பட்டது. அற்புதம்மாளின் போராட்டத்திற்குக் கிடைத்த முதல் வெற்றி என்பது முன்னாள் சி.பி.ஐ அதிகாரி தியாகராஜன் மிகவும் வெளிப்படையாக ஒப்புக் கொண்ட ஒரு தவறுதான்.

தியாகராஜனின் இந்த ஒப்புதல் வாக்கு மூலம் பிரமாண பத்திரமாகத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது. இது பேரறிவாளன் வழக்கில் மிகப்பெரிய அணுகுமுறை மாற்றத்தை அளித்தது.

பின்னர் மாநில முதலமைச்சர், அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் என அற்புதம்மாள் போகாத இடம் இல்லை. அ.தி.மு.கவோ, தி.மு.கவோ மாநிலத்தில் ஆளும் கட்சி எதுவாகினும் பேரறிவாளனின் விடுதலையை நோக்கியே அரசின் சட்ட நகர்வுகள் இருந்தன. இதற்கு முழுக் காரணம் அற்புதம்மாளின் அணுகுமுறை எனக் கூறலாம். தூக்குத் தண்டனைக் குறைப்பு, 30 ஆண்டுகளுக்கு பின்னர் பெற்ற பிணை, தற்போது விடுதலை என தனது மகனின் ஒவ்வொரு வெற்றிக்கும் பெரும் பின்புலமாக இருந்தது அற்புதம்மாளின் ஓயாத உழைப்புதான்.

நான் ஒரு அப்பாவி பையனின் தாய். 28 வருடங்களுக்கு முன் என்னிடமிருந்து பறிக்கப்பட்டான். அப்போது அவருக்கு 19 வயது. அன்று முதல் நான் அவர் பின்னால் ஓட ஆரம்பித்தேன்,

(23 ஆம் பக்கம் பார்க்க...)

அவதானி

30 நாட்களைக் கடந்த

03 இன மக்களின் போராட்டங்கள்

இலங்கையில் விலைவாசி உயர்வையடுத்து, எரிபொருளுக்கு நேர்ந்த பற்றாக் குறையையடுத்து மக்களின் கடுமையான எதிர்ப்பினை எதிர்நோக்கிய ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆக்கிரமித்திருந்த அரசு திக்குமுக்காடியது.

அரசில் செல்வாக்குச் செலுத்திய சில அமைச்சர்கள் நீக்கப்பட்டனர். நிதி அமைச்சர் பதவியே கேலிக்குரியதாகியது. பிரதி சபாநாயகர் தெரிவும் அவ்வாறே அமைந்தது. இராஜினாமாவின் அடையாளம்தான் ராஜபக்ஷவினரின் இலட்சணம் எனச்சொல்லும் அளவுக்கு இலங்கையை சர்வதேசத்தின் முன்னால் தலைகுனிய வைத்துவிட்டனர்.

காலிமுகத்திடலில் தொடங்கிய ஆர்ப்பாட்டம், முப்பது நாட்களையும் கடந்து தணிந்துவிடாமல் தொடருகின்றது. அதனை அடக்குவதற்கு முன்னாள் பிரதமரின் கைக்கூலிகள் மேற்கொண்ட முயற்சிகளும் முறியடிக்கப்பட்ட நிலையில் அதில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரும் உத்தரவிட்டுவிட்டார். பலருக்கு நாட்டை விட்டு வெளியேறவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரைநூற்றாண்டுக்கு முன்னர் பிரதமர் டட்லி சேனநாயக்கவின் பதவிக் காலத்தில் நடந்த ஹர்த்தால் எனப்படும் போராட்டத்திலிருந்து தற்போதைய ஆர்ப்பாட்டங்கள் முற்றிலும் வேறுபட்டிருந்தாலும், சமகால எழுச்சிகள் எந்தத் திசையில் செல்கின்றன என்பது குறித்து சமூக அக்கறை கொண்ட ஆர்வலர்கள் ஆங்காங்கே கவலையும் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக சர்வதேச மட்டத்தில் மெய்நிகர் கலந்துரையாடல்களும் நடைபெற்றுவருகின்றன.

ராஜபக்ஷாக்களுக்கு எதிரான காணொளிகள் வைரலாகப் பரவியிருக்கின்றன.

இவற்றுக்கு மத்தியில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படை முகாமில் இருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப்பதிவு எழுதும் வேளையில், அவரது நண்பர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகிய பின்னர் நடைபெறவிருக்கும் பாராளுமன்ற அமர்வில் அவர் கலந்துகொள்வார் என்ற செய்தியும் கசிந்தது.

கடந்த காலங்களில் மஹிந்தவும் ரணிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒருவரை ஒருவர் காப்பாற்றியவர்கள்தான். ஜனாதிபதி பதவியிலிருந்து மைத்திரிபால சிறிசேனவிடம் மஹிந்த தோற்றபோது, அந்த முடிவுகள் இறுதியானதும் அலரிமாளிகையை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் அந்த நடு இரவில் அவரால் அழைக்கப்பட்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க.

இவர்கள் இருவரையும் பற்றி தனியாகவும் விரிவாகவும் எழுதுவதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. அவை பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் எஸ்மண்ட் விக்கிரமசிங்கவின் புதல்வர். ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கு உறவு முறையில் மருமகன் பிரதமராக ஏற்கெனவே ஐந்து தடவைகள் பதவி வகித்தவர். மேற்குலக நாடுகளுடன் நெருக்கமான உறவைப் பேணியவர். விடுதலைப்புலிகளுடன் சமாதானமாகப்பேசி, அவர்களின் முக்கிய தளபதிகளுக்கும் வெளிநாடுகளைக் காண்பித்து, சாதுரியமாக காய் நகர்த்தி அவ்வியக்கத்தைப் பலவீனமடையச் செய்தவரும் இவர்தான்.

தற்போது பிரதமர் பதவி ஏற்றதும் அவர் வெளியிட்ட கருத்துகளிலிருந்தும் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றியதன் தொனிப்பொருளிலும் அவரது புத்திசாலித்தனத்தை அவதானிக்க முடியும்.

மறைந்தவர்களுக்கு நினைவேந்தல் நடத்துவதற்கான உரிமை சகலருக்கும் இருக்கிறது என்றும் காலிமுகத்திடல் போராட்டம் தொடரட்டும் எனவும், தான் பிரதமர் பதவி ஏற்றது ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவதற்கு அல்ல, மக்களின் பசியைப் போக்குவதற்குத்தான் எனச் சொன்னதும் பதச்சோற்றுப் பருக்கைகள்.

அரசாங்க மட்டத்தில் ஜனாதிபதி கோட்டபாயவினால் இவ்வாறெல்லாம் காய்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது காலிமுகத்திடலில் முப்பது நாட்களுக்கு முன்னர் தொடங்கப்பட்ட மக்களின் தன்னெழுச்சிப்போராட்டம், பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுவிட்டது.

காலிமுகத்திடலில் கோத்தா கோ கம தொடங்கி, கபுடா கோ... மைனா கோ எனத் தொடர்ந்து அலரிமாளிகை முன் பாக நோ டீல் கம ஆரம்பமானது.

அத்துடன் கடந்த 09 ஆம் திகதி அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன், அவர்களின் கூடாரங்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தி பலரையும் காயங்களுக்குள்ளாக்கிய மஹிந்தரின் தீவிர ஆதரவாளர்களை கைதுசெய்யுமாறும் போராட்டம் வேறு வடிவம் எடுத்துள்ளது.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தின் முன்பாகவும் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். கடந்த 09 ஆம் திகதிக்குப்பின்னர் வெகுண்டு எழுந்த மக்களினால் எரித்து சேதமாக்கப்பட்ட அமைச்சர்களின் வீடுகள், அரசாங்க பஸ் வண்டிகள் உட்பட வாகனங்கள் பல

கோடி ரூபா நஷ்டத்தை நாட்டுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர்கள் காப்புறுதிகள் மூலம் நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்வார்கள் எனச்சொல்லப்பட்டாலும், அதனால் வரக்கூடிய பொருளாதார நெருக்கடிச் சுமையையும் மக்கள்தான் தாங்கப் போகிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இங்குதான் இலங்கையின் எதிர்காலம் குறித்த கவலைகள் செறிவடைகின்றன. கோபம், வெறுப்பு, கொலை வெறி என்பன மனித மனங்களின் அடி ஆழத்தில் உறங்கிக்கிடக்கும் உணர்வுகள். அவை வெளிப்படுத்தப்படும்போது, தீர்க்கதரிசனம் மறைந்து விடுகிறது.

இராவணன் சீதாப்பிராட்டியாரைச் சிறைப்பிடித்து இலங்கை மலையகத்தில் அசோகவனத்தில் தடுத்துவைத்திருந்தபோது அவளை மீட்க புறப்பட்ட இராம பக்த அனுமான், இராவணனிடம் முதலில் சமாதானத் தூதுவனாகத்தான் வந்தார்.

“யார் இந்தக் குரங்கு..? எனக்கு கட்டளை இடுவதற்கு இது யார்..? இந்தக் குரங்கை கொன்றுவிடுங்கள்” என்றுதான் இராவணன் தனது சேவகர்களான அரக்கர்களிடம் பணித்தான். அந்தச் சபையிலிருந்த தம்பி விபீசணன் தான், தூதுவனாக வந்தவருக்கு அத்தகைய தண்டனை வழங்கலாகாது எனத் தடுத்தார். ஆனால், இறுதியில் அரக்கர்கள் அனுமானின் வாலில் தீ வைத்தனர். அவர் இலங்காபுரியை எரித்தார். அதனால், இராமாயணத்தில் லங்கா தகனம் பேசுபொருளானது.

அன்று அவரால் தொடங்கப்பட்ட எரிப்பு, இன்னமும் தொடருவதிலிருக்கும் மாயத்தைத்தான் புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் சிங்களப் பேரினவாதம் வெகுண்டு எழும்போது முதலில் தீ வைத்து எரிக்கும் கைங்கரியத்திலேயே ஈடுபட்டு வந்திருக்கிறது.

1958 கலவர காலத்தில் தென்னிலங்கையில் சிங்கள கடும்போக்குவாத தீய சக்திகள் தமிழர் வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் தீ வைத்து அழித்தன. இது 1977 இலும் 1981 - 1983 இலும் தொடர்ந்தது. மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் லயன் குடியிருப்புக்களையும் எரித்தனர். தென்கிழக்கு ஆசியாவிலேயே புகழ்பெற்றிருந்த யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு இலட்சக்கணக்கான நூல்கள் சாம்பல் மேடாகியது. யாழ்.ஈழநாடு, மற்றும் யாழ்.எம்.பி.யோகேஸ்வரன் இல்லமும் எரிந்தன. நாட்டை காக்க வேண்டிய சிங்கள பொலிஸ் காவலர்களே முன்னின்று இவற்றைச் செய்தனர்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பதவிக்காலத்தில் பல தடவைகள் லங்கா தகனம் நடந்திருக்கிறது. தமிழர்களுக்கு எதிராக சிங்கள கடும்போக்காளர்கள் மேற்கொண்ட தகனம் அவை.

ஆனால், இன்று கதை வேறுவிதமாக எழுதப்படுகிறது. அரசுக்கு எதிராகத் தமது கோபத்தை வெளிப்படுத்திய சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்கள் தம்மால் தெரிவுசெய்யப்பட்ட அரசின் சிங்களப்பிரதிநிதிகளின் வீடுகளையும் உடைமைகளையும் தீயிட்டு எரித்து சேதப்படுத்தியுள்ளனர். அத்துடன் மக்களின் பாவனையிலிருந்த பஸ் வண்டிகளையும் எரித்து சேதப்படுத்தியுள்ளனர்.

மக்களின் பயணப் பாவனைக்கிருந்த பஸ் வண்டிகளில், சில சிங்கள அரசியல் வாதிகள் தமது எஜமான் மஹிந்தவிடத்திலிருக்கும் விசுவாசத்தை காண்பிப்பதற்காக அடியாட்களை ஏற்றிவந்தனர். அந்த பஸ் வண்டிகள் தீக்கிரையாகியுள்ளன.

பஸ் வண்டிகள் என்ன பாவம் செய்தன..?

இந்த அரசு நாடெங்கும் புத்த விகாரைகளை அமைத்துவருகிறது. ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணிக்கு பல காரணங்களினால் புகழ்பெற்ற ஒரு பௌத்த பிக்குதான் தலைவராக ஜனாதிபதியால் நியமனம் பெற்றிருக்கிறார்.

காலிமுகத்திடல் மக்கள் எழுச்சிப் போராட்டங்களிலும் ஏனைய மதத் தலைவர்களுடன் பல பௌத்தபிக்குகளும் தலை காட்டியுள்ளனர். அத்துடன் ஊடகங்களில் எழுதமுடியாத கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் அரசின் தலைவர்களையும் பாதுகாப்பு பிரிவினரையும் தாக்குகின்றனர்.

அவ்வாறாயின் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்கள் வாழும் இலங்கையில் சாந்தியும் சமாதானமும் வெகு தொலைவில்தான் இன்னமும் நிற்கின்றனவா..?

அன்பு மார்க்கத்தைப் போதிக்க வேண்டிய பௌத்த தர்மம் இலங்கையில் தோல்வி கண்டுவிட்டதா..?

அதற்கு சிங்கள பௌத்த மேலாதிக்கம் கொண்டிருந்த ஆட்சியாளர்களே காரணமாகத் திகழ்கிறார்களா..?

■

பிலிப்பைன்ஸ் அரசியலில் மீள ஆதிக்கம் பெறுகிறதா? மார்கோஸ் குடும்ப அரசியல்?

ஐ.வி.மகாசேனன்

உலகமயமாக்கலின் எழுச்சி எந்தவொரு அரசும் தனித்து இயங்க இயலாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் ஒரு அரசின் இராஜதந்திர நகர்வுகளை வெளியுறவுக்கொள்கைகளை வடிவமைக்கவும் ஒரு அரசின் அரசியல் எதிர்கால போக்குகளை அணுகுவதற்கும் சர்வதேச நாடுகளின் அரசியல் நடத்தைகள் பற்றிய புரிதலும் அவசியமாகிறது. அதுசார்ந்தே சர்வதேச அரசியல் கற்கையும் வளர்ச்சி பெற்றுள்ளது. இலங்கை அரசியலில் ஏறத்தாழ இருவருடங்களுக்கு முன்னர் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து ராஜபக்ஷாக்களின் ஆட்சி 20 வருடங்களுக்கு அசைக்க முடியாதநிலை பெறப்போகின்றது என்ற ஆரூடங்கள் எழுந்தன.

இலங்கையின் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ராஜபக்ஷாக்கள் ஆட்சியின் எதேச்சதிகாரப்போக்கே காரணமெனச் சுட்டிக்காட்டி மக்கள் ராஜபக்ஷாக்களுக்கு எதிராக வீதியில் இறங்கியுள்ளனர். அவர்களை அதிகாரத்தை விட்டு வெளியேறக் கோரி ஒரு மாதத்துக்கு மேலாக காலிமுகத்திடலில் முகாமிட்டு போராட்டம் நடாத்தி வருகின்றார்கள். மே-09 அன்று பொது ஜன பெரமுன ஆதரவாளர்களால் காலிமுகத்திடல் போராட்டம் கலவரமாக மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷா உடனடியாகத் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். எனினும், மக்கள், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷாவும் பதவி விலகக் கோரி தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சமகாலத்தில் சர்வதேச அரசியலில் பிலிப்பைன்ஸில் 36 ஆண்டுகளுக்கு முன்னர் சர்வாதிகாரியாக மக்களால் நிராகரிக்கப்பட்ட பெர்டினாண்ட் மார்கோஸின் (மார்கோஸ் சீனியர்) மகன் பாங்பாங் மார்கோஸ் (மார்கோஸ் ஜூனியர்) ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து வெளியிட்ட அறிவிப்பில், “தனது குடும்பத்தின் கடந்த காலத்தை வைத்து தன்னை மதிப்பிட வேண்டாம்” என உலகைக் கேட்டுக் கொண்டுள்ளார். இது இலங்கையின் எதிர்காலத்திலும் இன்று நிராகரிக்கப்படுபவர்கள் நாளை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்புகளும் உண்டு என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது. இக்கட்டுரை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் மார்கோஸ் ஜூனியரின் அரசியல் நகர்வுகளைத் தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மே-09 அன்று பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி மற்றும் பிரதி ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. பிலிப்பைன்ஸ் நாட்டுக்கான 17 ஆவது ஜனாதிபதியும் 17 ஆவது பிரதி ஜனாதிபதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி தெரிவில் பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் சர்வாதிகாரியான பெர்டினாண்ட் மார்கோஸின் ஒரேயொரு மகனான பாங்பாங் மார்கோஸூம் தற்போதைய பிரதி ஜனாதிபதி லெனி ரொப்ரெடோவும் முன்னிலை வகித்திருந்தனர். மே-11 அன்று 98 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், பாங்பாங் மார்கோஸ் 31 மில்லியன் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அவரது நெருங்கிய போட்டியாளரான பிரதி ஜனாதிபதி லெனி ரொப்ரெடோ சுமார் 14 மில்லியன் வாக்குகளையே பெற்றிருந்தார். இதனூடாக 1986 ஆம் ஆண்டிற்குப் பின்னரான தேர்தலில் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதியாக முறையே பாங்பாங் மார்கோஸ் மற்றும் லெனி ரொப்ரெடோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், இத்தேர்தலூடாக மக்கள் அதிகாரப்புரட்சிக்குப் பிறகு முதல் முறையாக மார்கோஸ் குடும்பம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துள்ளது.

1986 ஆம் ஆண்டில், மார்கோஸ் ஆட்சியின் மீதான பொதுக் கோபத்தால் பெர்டினாண்ட் மார்கோஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் பிலிப்பைன்ஸிலிருந்து தூக்கி எறியப்பட்டு வெளியேற்றப்பட்டனர். 1965 இல், பெர்டினாண்ட் மார்கோஸ் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று பிலிப்பைன்ஸின் 10 ஆவது ஜனாதிபதியாகி 1986 வரை 20 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்தார். அவரது 20 ஆண்டுகால ஆட்சியின் தொடக்கத்தில் வளர்ந்த பொருளாதாரத்திற்கு தலைமை தாங்கினார். அவரது முதல் பதவிக் காலம் அதிகரித்த தொழில்மயமாக்கல் மற்றும் வடக்கு லூசன் எக்ஸ்பிரஸ்வே மற்றும் மஹர்லிகா நெடுஞ்சாலை போன்ற நாடு முழுவதும் திடமான உள்கட்டமைப்புகளை உருவாக்கியது. வெளிநாட்டுக் கடனால் நிதியளிக்கப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான ஒரு தீவிரமான திட்டத்தைத் தொடர்ந்தார். இது அவரது முதல் பதவிக்காலத்தில் அவரைப் பிரபலமாக்கியது. இருப்பினும் இது பணவீக்க நெருக்கடியைத் தூண்டி இரண்டாவது பதவிக் காலத்தில் சமூக அமைதியின்மைக்கு வழிவகுத்தது. மார்கோஸ் தனது இரண்டாவது பதவிக்காலம் முடிவதற்கு சற்று முன்பு, செப்ரெம்பர் 23, 1972 அன்று பிலிப்பைன்ஸை இராணுவச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தார். 1973 இல் ஒரு மோசடியான வாக்கெடுப்பு மூலம் இராணுவச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. அரசியலமைப்பு திருத்தப்பட்டது. ஊடகங்கள் மௌனமாக்கப்பட்டன. அரசியல் எதிர்க்கட்சிகள், முஸ்லிம்கள், கம்யூனிஸ்டுகள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் மற்றும் சாதாரண குடிமக்களுக்கு எதிராக வன்முறை மற்றும் ஒடுக்குமுறை பயன்படுத்தப்பட்டது. அவரது ஆட்சியை ‘அரசியலமைப்பு சர்வாதிகாரம்’ என்று முத்திரை குத்தினார். 20 ஆம் நூற்றாண்டின் மிகவும் சர்ச்சைக்குரிய தலைவர்களில் ஒருவரான மார்கோஸின் ஆட்சி அதன் ஊழல், ஊதாரித்தனம் மற்றும் மிருகத்தனம் ஆகியவற்றால் பிரபலமடைந்தது. பாரிய ஏமாற்றுதல், அரசியல் கொந்தளிப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றின் குற்றச்சாட்டுகள் பெப்ரவரி 1986 இல் மக்கள் அதிகாரப் புரட்சிக்கு வழிவகுத்தது. அது மார்கோஸை அதிகாரத்திலிருந்து நீக்கியது. அத்துடன் மார்கோஸ் குடும்பம் பிலிப்பைன்ஸிலிருந்தே துரத்தப்பட்டது.

நாடுகடத்தப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, மார்கோஸ் குடும்பம் மீள பிலிப்பைன்ஸிற்குத் திரும்பியதுடன், உடனடியாக அரசியல் செயற்பாடுகளிலும் இணைந்து கொண்டது. மார்கோஸின் மனைவி இமெல்டா மற்றும் மகள் இமி உட்பட அவரது குடும்பத்தின் மற்றைய உறுப்பினர்களும் பிலிப்பைன்ஸூக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டதிலிருந்து பல்வேறு அரசியல் அலுவலகங்களை வகித்துள்ளனர். இமெல்டா 1992 இல் மீண்டும் வந்து ஒரு வருடம் கழித்து ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டார். அத்துடன் பாங்பாங் வெளிநாட்டில் இருந்த நேரத்தைத் தவிர்த்து, 23 வயதிலிருந்தே கிட்டத்தட்ட தொடர்ந்து பதவியில் இருக்கிறார். ஜனாதிபதிப் பதவியை பெறுவது என்பது அவர் வாழ்நாள் முழுவதும் தயாராகிக் கொண்டிருந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

பாங்பாங்கின் அரசியல் நீண்ட வரலாற்றை கொண்டது. தந்தை மார்கோஸின் சர்வாதிகார ஆட்சிக்காலத்திலே மாகாணங்களின் துணை ஆளுநர் மற்றும் ஆளுநர் பதவிகளை வகித்துள்ளார். 1980 ஆம் ஆண்டில், 23 வயதான பாங்பாங் இலோகோஸ் நோர்ட்டின் துணை ஆளுநரானார். அந்த நேரத்தில் பிலிப்பைன்ஸை இராணுவச் சட்டத்தின் கீழ் ஆட்சி செய்த அவரது தந்தையின் கிலுசாங் பாகோங் லிபுனான் கட்சியின் கீழ் போட்டியின்றி அதிகாரத்தைப் பெற்றார். பின்னர், அவர் 1983 இல் இலோகோஸ் நோர்ட்டின் ஆளுநரானார். மக்கள் சக்தி புரட்சியால் அவரது குடும்பம் அதிகாரத்தில் இருந்து வெளியேற்றப்படும் வரை அந்தப் பதவியை வகித்தார். 1989 இல் அவரது தந்தையின் மரணத்திற்குப் பிறகு, ஜனாதிபதி கொராசன் அகினோவின் அனுமதியுடன் பிலிப்பைன்ஸூக்குத் திரும்பியவர், 1992 முதல் 1995 வரை இலோகோஸ் நோர்ட்டின் இரண்டாவது காங்கிரஸ் மாவட்டத்தின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1998 இல் மீண்டும் இலோகோஸ் நோர்ட்டின் ஆளுநராகப் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் 2007 முதல் 2010 வரை தனது முந்தைய பதவிக்குத் திரும்பினார். பின்னர், 2010 முதல் 2016 வரை நேஷனலிஸ்டா கட்சியின் கீழ் செனட்டரானார். பாங்பாங் 2016 தேர்தலில் துணை ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டார். 263,473 வாக்குகள் மற்றும் 0.64 சதவீத வித்தியாசத்தில், கேமரைன்ஸ் சுர் பிரதிநிதி லெனி ராப்ரெடோவிடம் தோல்வியடைந்தார். இதற்குப் பதிலடியாக, ஜனாதிபதி தேர்தல் தீர்ப்பாயத்தில் தேர்தல் எதிர்ப்பைத் தாக்கல் செய்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணங்களான நீக்ரோஸ் ஓரியண்டல், இலோய்லோ மற்றும் கேமரைன்ஸ் சுர் ஆகியவற்றின் பைலட் மறு எண்ணுதலின் விளைவாக, ராப்ரெட்டோ 15, 093 கூடுதல் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றார்.

2021 இல், பாங்பாங் 2022 தேர்தலில் பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாகப் போட்டியிடுவதாக அறிவித்தார். 2016 ஆம் ஆண்டு துணை ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றவரையே முதன்மை போட்டியாளராக எதிர்கொண்டு பாங்பாங் வெற்றியை உறுதி செய்துள்ளார். இவ்வெற்றியின் பின்னால் பாங்பாங்கின் அரசியல் நகர்வுகளே பிரதான நிலை பெறுகிறது. மார்கோஸ் குடும்பம் கடந்தகால துஷ்பிரயோகங்களுக்கு மன்னிப்பு கேட்கவில்லை. அல்லது தேசிய பணப்பையில் இருந்து திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட புதையலை திரும்பக் கொடுக்கவில்லை. பாங்பாங்க்கு எதிரான தேர்தல் பிரச்சாரங்களில் கடந்தகால குடும்ப குற்றச்சாட்டுகள் முதன்மை பெற்றிருந்தன. எனினும், முன்னைய மார்கோஸ் சகாப்தத்தின் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூறலுக்காக பிரச்சாரம் செய்த தரப்பினருக்கு பாங்பாங்கின் வெற்றி ஒரு அதிர்ச்சியூட்டும் அடியாகவே அவதானிக்கப்படுகிறது.

பாங்பாங்கின் இவ்வெற்றிகளுக்குப் பின்னுந்தலாக சமூக ஊடக செயற்பாடுகளே செல்வாக்கு செலுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். பாங்பாங் சமூக ஊடக பிரச்சாரத்தூடாக கடந்த காலங்களை மறுசீரமைத்துள்ளார். பழைய மார்கோஸ் சகாப்தத்தை இராணுவச் சட்டத்தின் காலம் என்று மறுபெயரிடுவதற்கு சமூக ஊடக பிரச்சாரம் இருந்தது. அதன் பயங்கரமான மனித உரிமை மீறல்கள், ஊழல் மற்றும் பொருளாதாரச் சரிவு ஆகியவற்றுடன் குற்றமற்ற செழிப்பின் பொற்காலமாக அக்காலம் காணப்பட்டதாகச் சித்தரிக்கப்பட்டது. இது குறைந்தது ஒரு தசாப்தத்திற்கு முன்பு தொடங்கியது. நூற்றுக்கணக்கான, ஏமாற்றும் வகையில் திருத்தப்பட்ட வீடியோக்கள் யூடியுப்பில் பதிவேற்றப்பட்டன. பின்னர், அவை அனுதாபமான பேஸ்புக் பக்கங்களில் மறுபதிவு செய்யப்பட்டன. மில்லியன் கணக்கான பிலிப்பைன்ஸ் வாசிகளை, அவர்கள் வீழ்ச்சியடைந்த பின்னர் மார்கோஸ்களை இழிவுபடுத்துவது நியாயமற்றது என்றும் நிகரற்ற பேராசையின் கதைகள் உண்மையற்றது என்றும் அவர்கள் நம்ப வைத்தனர். “இந்த வீடியோக்களில் பொய்கள் மற்றும் திரிபுகளின் ஸ்பெக்ட்ரம் உள்ளது” என்று பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக தகவல் தொடர்பு ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த பாத்திமா காவ் கூறுகிறார்.

எனவே, பிலிப்பைன்ஸின் அண்மைய வரலாறு இலங்கையருக்கும் எதிர்காலத்துக்கான பல செய்திகளை சொல்வதாகவே காணப்படுகின்றது. இவ்சர்வதேச அனுபவத்தினூடாக இலங்கையர்கள் தமது அரசியல் செல்நெறியை சரியாக நெறிப்படுத்துவார்களா என கோட்டா கோ கம போராட்டக்காரர்களினதும் மைனா கோ கம போராட்டக்காரர்களினதும் போரட்ட வரலாறு எந்த திரிபுகளுமின்றி எதிர்காலத்தில் நிலைக்க வாய்ப்பாக அமையும். மாறாக எதிர்காலத்தைச் சரியாக நெறிப்படுத்த தவறுவார்களாயின் 36 ஆண்டுகளின் பின் பிலிப்பைன்ஸில் சர்வாதிகாரி மார்கோஸின் வாரிசுகளின் அரசியல் மீள துளிர்விட்டது போன்றே இலங்கையிலும் 2022 இல் இளைஞர் போராட்டங்களால் விரட்டப்பட்டவர்கள் மீளவும் தங்களை புனிதர்களாக அடையாளப்படுத்தி ஆட்சி அதிகாரத்தை அலங்கரிப்பதற்கான வாய்ப்புகளே உருவாகக்கூடியதாகும். ■

சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம்

22

சுயாதீன கல்வி மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 13

பகுதி - 01

இலங்கையின் தமிழர் பிரதேசங்களின் கல்வி வளர்ச்சியை/வளர்ச்சி வீதங்களை அதிகரித்து உச்ச அடைவு மட்டங்களை நோக்கி அதிக மாணவர்களை நகர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான பல விடயங்களை சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் எனும் கட்டுரைத் தொடர் வெவ்வேறு தளங்களில் நுணுக்கமாகப் பேசி வந்திருக்கிறது.

அந்த வகையில், நீண்டகால அடிப்படையில் தமிழ் மாணவர்களின் பிரச்சினைகளை அணுகி அதற்கான நிரந்தரத் தீர்வுகளை உருவாக்கும் வகையில், உருவாக்கப்பட வேண்டிய சுயாதீன கல்விக் கட்டமைப்பு மற்றும் தேசிய ரீதியில் உருவாக்கப்பட வேண்டிய தமிழ் மொழிமூல தேசிய கல்வி நிறுவனம் (ITME-Institute for Tamil Mediam education) ஆகிய விடயங்களை ஆராய்கிறது இந்தக் கட்டுரை. இந்தக் கட்டுரையும் கள யதார்த்தங்களை நேரடியாகப் பேச இருப்பதால், சுயவிருப்பு வெறுப்புக்களை விடுத்து எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கான பயணம் என்ற சிந்தனைப்பாங்குடன் கருத்துகளை உள்ளீர்த்து வாசிக்குமாறு வாசகர்கள் பணிவோடு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்!

இன்றைய நிலையில் தமிழர் பிரதேசங்களின் கல்வி நிர்வாகம் இரண்டு இடங்களில் அதிகார/நிர்வாக ரீதியாக மட்டும் நகர்த்தப்படுகிறது. அதாவது,

1.கல்வித்திணைக்களம்

2. கல்வி அமைச்சு-மாகாணக் கல்வி அமைச்சு

இவை இரண்டும் அரசியல் சார்ந்த நிர்வாக கட்டமைப்புகளே!

ஆனால், இன்றைய கள யதார்த்தத்தில் இவை இரண்டும் பல்வேறு செயற்பாடுகளில் ஒருவரை ஒருவர் அரவணைத்துக்கொண்டு செல்லும் சூழ்நிலைகளே காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை மாகாணசபையும் அரசியல் அலைகளுக்குள் முடங்கியிருந்ததாலும் சுயாதீனமாக நிர்வாகக் கட்டமைப்பான கல்வித் திணைக்களத்திற்கு அப்பால் சென்று பல பிரச்சினைகளை அணுக முடிவதில்லை. கல்வித்திணைக்களத்தாலும் எல்லாப் பிரச்சினைகளையும் அணுக முடிவதில்லை. பல பின்தங்கிய பிரதேசங்களின் கல்வி வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்து இருப்பதும் அதற்கு ஒரு காரணம். ஆக,

கல்வி வளர்ச்சிக்கான நீண்டகால அடிப்படையிலான திட்டமிடல்தான் நிரந்தர வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்ற வகையில் பல நடைமுறைச் சிக்கல்களை ஒரே தளத்தில் வைத்து அணுகவேண்டிய அவசியம் இருக்கின்றது.

எவ்வாறான சிக்கல்கள்/ பிரச்சினைகள் என்கிறீர்களா? உதாரணத்துடன் விளக்குகிறேன்.

எங்கள் பல பிரதேசங்களில் பாடசாலைக்கு

மாணவர்களை அனுப்பிவைக்கும் அளவிற்குக் கூட வசதியற்ற பொருளாதார நலிவான குடும்பங்கள் உண்டு. அவர்கள் பிள்ளைகள் முழுமையாகப் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடியாத நிலையில் இருப்பதோடு மட்டுமல்லாமல், குடும்பச் சூழல் காரணமாகப் பகுதிநேரமாக வேலை செய்யவேண்டிய சூழலையும் காண்கிறோம். வாழ்வாதாரத்துக்காக பாட்டியாருடன் சேர்ந்து கல் உடைத்து விற்று பிழைப்பு நடாத்தும் சிறுவர்களைக் கூட அண்மையில் சமூகவலைத் தளங்களில் அவதானித்திருந்தோம்.

அந்தச் சிறுவர்கள் எங்கள் இலவசக் கல்வித் திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டியவர்கள்தானே?? ஏன் கல்வித்திணைக்களத்தாலோ, மாகாணக் கல்வி அமைச்சுக்களாலோ அல்லது வேறு எந்த அரச நிர்வாகக் கட்டமைப்புகளாலோ அவர்கள் கவனிக்கப்படவில்லை?

இன்னுமொரு உதாரணம், போரின் வடுக்கள் காரணமாக கிட்டத்தட்ட 90000 பெண்தலைமைத் துவக் குடும்பங்கள் இருக்கிறார்கள் என்று அடிக்கடி பேசப்படுகிறது. அந்தப் பொருளாதாரத் தாக்கம் எங்கள் பிள்ளைகளின் கல்வி அடைவு மட்டங்களில் தாக்கம் செலுத்துகிறது என்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் ஆளுமை மிக்க பல பெண்கள் மிகத் திறமையாகக் குடும்பங்களை நடாத்தி வந்தாலும் தங்கள் பிள்ளைகள் கற்கவேண்டும் எனப் போராடி வந்தாலும் கணிசமான குடும்பங்கள் பொருளாதாரத் தாக்கங்களுக்கு உள்ளாகி இருப்பது உண்மை. ஆனால், இது தொடர்பாகப் பொதுப்படையாக பேசும் யாரும் அந்த 90000 பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தகவல்களைத் திரட்டி, அவர்களின் பிள்ளைகளின் விபரங்களைத் திரட்டி, பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளைக் கொடுப்பதற்குரிய பொறிமுறைகளுடன் தயாராக இல்லையே?

தனிப்பட்ட ரீதியில் சில அமைப்புகள், சமூகக் குழுக்கள் இவ்வாறான பிரச்சினைகளை அணுகினாலும் கல்வி நிர்வாகக் கட்டமைப்புக்குள் அது தொடர்பான திட்டங்கள்/ அணுகுமுறைகள் இல்லை. நேரடியாகச் சொல்வதானால் அந்த 90000 பெண்தலைமைத்துவக் குடும்பப் பிள்ளைகள் யார்? அவர்களின் கல்வி எந்த நிலையில் உள்ளது? என்ற விபரங்கள் யாரிடமும் இல்லை இது வடக்கு நிலவரம். கிழக்கில் பல பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பல உயர்மட்ட துறைசார் தலைவர்கள் சென்றது கூட இல்லை. அங்கு பின்தங்கி உள்ள பல பிரதேச பிரச்சினைகள் பொதுவெளியில் பேசப்பட்டது கூட இல்லை. இது கசப்பான உண்மை.

மலையக மாணவர்களின் கல்வி அரசியலுக்கும் உழைப்பு சுரண்டல்களால் உண்டான பொருளாதார நலிவுக்கும் இடையில் நசுக்கப்பட்டு உள்ளது. ஆனால், இன்று மலையகத்தில் கல்வி மறுமலர்ச்சி உருவாக உழைக்க பலர் முன்வந்திருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

மாணவர் இடைவிலகல்களைப் பாடசாலை வாரியாக ஆராய்ந்து தீர்வுகளை வழங்கும் பொறிமுறைகள் இருக்கின்றனவா? என்றால் அதுவும் இல்லை. ஆனால், பொதுவாகப் பேசிவிட்டு கடந்துவிடுகிறோம்.

இவ்வாறு ஏராளமான மாணவர்களின் பிரச்சினைகள் ஏன் நிர்வாகக் கட்டமைப்புகளால் அணுகப்படுவதில்லை?

1) அணுகப்படுவதற்கான சூழல் இல்லை.

2) அணுகப்படுவதற்கான விருப்பம்/முயற்சி எடுக்கப்படவில்லை

3) அரச நிர்வாகக் கட்டமைப்புகள் வினைத்திறனாக இயங்கவில்லை.

என்ற ஏதோ ஒரு முடிவுக்கே வரமுடியும்.

எது எப்படி இருப்பினும் எங்கள் மாணவர்களின் கல்வி உரிமை மறுக்கப்பட்டிருப்பதுதான் யதார்த்தம். ஆக இதை நாங்கள் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது. பொதுப்படையாகப் பேசிவிட்டு கடக்கவும் முடியாது.

இவ்வாறான பிரச்சினைகள் அணுகப்படுவதற்கான சூழலை ஏற்படுத்தவேண்டும். அதாவது, அவதானிப்பு வட்டத்திற்குள் அத்தனை மாணவர்களையும் உட்படுத்த வேண்டும் அல்லது அந்த அரச நிர்வாகக் கட்டமைப்புகளை வினைத்திறனாக இயங்க அழுத்தத்தை ஏற்படுத்தவேண்டும். ஆனால், ஏற்கெனவே ஊறிப் போன ஒரு கட்டமைப்பை மாற்றியமைப்பது அவ்வளவு இலகுவானதல்ல. இவ்வாறான பரந்துபட்ட அணுகுமுறைகளை (Wholistic Approches) அவ்வளவு இலகுவில் ஏற்கெனவே இருக்கும் பழைய கட்டமைப்புக்குள் (Traditional systems) நுழைத்துவிடவும் முடியாது.

ஆக, இந்த வேலையைச் செய்வதற்கு அரச நிர்வாகக் கட்டமைப்புகளை உள்ளடக்கிய சுயாதீன கல்விக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்பதே ஒரே வழி.

(23 ஆம் பக்கம் பார்க்க...)

திசை மாறும் அரசியல்

அ.நிக்சன்

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைகள் சர்வதேச மட்டத்தில் அதிகளவு பேசப்பட்டு முக்கியத்துவம் பெறுகின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும், சிங்கள பௌத்த தேசம் ஏதோவொரு வகையில் தன்னை மீளக் கட்டமைக்கின்றது.

பௌத்த தேசிய அரசியல் தலைவர்களிடையே வேறுபாடுகள் இருந்தாலும், இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் விடயத்தில் உடன்பாடாகிவிடுகின்றனர் என்பதற்கு கோட்டபாய ராஜபக்ஷ முன்னிலையில், ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியேற்றமை மாத்திரம் உதாரணமல்ல. 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான காலத்தில் இருந்து அந்த உதாரணங்களைக் காணலாம்.

இலங்கைத்தீவில் காலத்துக்குக் காலம் எழுகின்ற அரசியல் -பொருளாதார நெருக்கடிகள், விலைவாசி உயர்வுகளுக்கு எழுபது ஆண்டுகால இனப்பிரச்சினையே மூல காரணம்.

ஆனால், இந்த மூல காரணம் ஏற்க மறுக்கப்பட்டு, இலங்கை மக்களின் ஜனநாயகப் பிரச்சினை, மனித உரிமைப் பாதுகாப்பு விவகாரங்களாகச் சுருக்கப்பட்டுப் பின்னர் பௌத்த தேசியவாதத்தை மையப்படுத்திய இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புப் பாதுகாக்கப்பட்டு விடுகின்றமை வரலாறு.

மகாநாயக்க தேரர்களின் கடிதத்தின் அடிப்படையிலேயே இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பரிந்துரை ஒன்றை இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் தயாரித்திருந்தது.

அந்தப் பரிந்துரையில் இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் எதுவுமே முன் மொழியப்படவில்லை. மாறாக ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குரிய பரிந்துரைகள் மாத்திரமே விதந்துரைக்கப்பட்டுள்ளன.

ஆகவே, 1958 இல் கொழும்பில் ஈழத் தமிழின அழிப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், 2009 இறுதிப் போரும், அந்தப் போரின் பின்னரான பதின்மூன்று வருட கால அரசியல் சூழலிலும், சிங்கள பௌத்த தேசியவாதிகளுக்குள் அவ்வப்போது ஏற்படுகின்ற மோதல்கள், தமக்கெதிரான சிங்கள மக்களின் எழுச்சிப் போராட்டங்களுக்குள் சிக்குப்பட்டாலும், மகாநாயக்க தேரர்கள் அனுப்பும் ஒரு கடிதத்தோடு முரண்பாட்டில் உடன்பாடாக இணக்க அரசியலுக்குள் வந்துவிடுவர்.

அந்த முரண்பாட்டில் ஓர் உடன்பாட்டு அரசியல் தான் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றமை. அத்துடன் அமெரிக்க - இந்திய மற்றும் சீனப் புவிசார் அரசியல் போட்டிகளும் பௌத்த தேசிய வாத அரசியல் சிந்தனைகளின் போக்குக்கு ஏற்பவே, ஆதரவை வழங்கித் தமக்குரிய தேவைகளையும் பெற்றுக் கொள்ளுகின்றன.

கோட்டாவுக்கு எதிரான போராட்டங்கள் கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஜனநாயகப் போராட்டங்களை அடக்க முற்படக்கூடாது என்றே அமெரிக்கத் தூதரகம் அறிக்கை வெளியிட்டது. கண்டனமும் வெளியிட்டது. இந்தப் போக்கிலேயே தமிழ் தன்னார்வ நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கும் சில தமிழர்களும், வடக்குக் கிழக்கில் உள்ள புவிசார் சமூகங்களுக்குப் போதனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், கோட்டபாய பதவி விலக வேண்டும் என்றொரு வார்த்தை தூதரக அறிக்கைகளில் இல்லை. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள், தமது உள்ளக மோதல்களை எப்படியாவது முடி வுக்குக் கொண்டு வர வேண்டுமெனத் தூதரகங்கள் காத்திருப்பரே தவிர, தமது புவிசார் அரசியல் - பொருளாதாரத் தேவைகளை எப்படியும் எந்தவொரு சிங்களத் தலைவரிடமும் பெற்றுவிடலாமென அமெரிக்கா போன்ற வல்லரசுகள் இலகுவாக நம்புகின்றன.

அவர்களைப் பொறுத்தவரை இலங்கைத்தீவை சிங்கள இராமன் ஆண்டாலென்ன, சிங்கள இராவணன் ஆண்டாலென்ன எல்லாமே ஒன்றுதான்.

மக்களின் எண்ண ஓட்டங்களை மையமாக கொண்டு அதனைத் தனக்குச் சாதகமாக்கி வெற்றி பெறுகின்ற சிங்கள ஆட்சியாளர் ஒருவர், தான் வெற்றிபெற்ற பின்னர், மக்களின் கோபத்துக்கு உள்ளாகித் தோல்வி கண்ட ஆட்சியாளரை விசாரணை என்ற போர்வையில் காப்பாற்றி விடுகின்றார்.

17 வருட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இடம்பெற்ற படுகொலைகள், ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றை விசாரணை செய்து அனைவரையும் கைது செய்து சிறையில் அடைப்பேன் என்று மார்தட்டி 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்றும் உறுதியளித்திருந்தார்.

ஆனால், ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்று, ஆறு மாதங்களில் மீண்டும் போர் ஆரம்பித்தது. ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட படுகொலைகள், ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேயில்லை.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்ற ஆதங்கத்துடனேயே மக்கள் சந்திரிக்காவுக்கு வாக்களித்தனர். 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையான பதினொரு ஆண்டுகால ஆட்சியில் சந்திரிக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களை விசாரணைக்கு உட்படுத்தவேயில்லை.

இதுதான் வரலாறு. பின்னர் அடுத்த அரசியல் சுற்று எப்படி ஆரம்பித்தது என்றால், ஐக்கிய தேசியக் கட்சி தன்னை மீளவும் புதுப்பித்துத் தமிழ் மக்களின் மீட்பராகவும், சிங்கள மக்களின் புதிய ஆட்சியாளர்களாகவும் தன்னை வெளிப்படுத்தியது.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அனைத்துச் சிறிய கட்சிகளையும் உள்ளடக்கி ஐக்கிய தேசிய முன்னணியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார். அப்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் தோல்வியடைந்து எதிர்க்கட்சியாக மாறியது.

ஆனால், சந்திரிக்கா தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தார். நோர்வேயின் சமாதான ஏற்பாட்டு முயற்சி சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்த போதுதான் 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் அவர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே நோர்வேயின் ஏற்பாட்டுடன் விடுதலைப் புலிகளுடான பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

கொழும்பில் சிங்கள பௌத்ததேசிய இனவாத அமைப்புகளின் கடும் எதிர்ப்புகள், முரண்பாடுகள், இழுபறிகள் போன்றவற்றுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இடைக்கால நிர்வாகத்துக்கான பரிந்துரை ஒன்றை 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் விடுதலைப் புலிகள் கையளித்திருந்தனர். அப்போதுதான் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் இருந்து பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை சந்திரிக்கா தன்வசப்படுத்திக் கொழும்பில் பெரும் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தினார்.

இதனால் ரணில் அரசாங்கம் கவிழும் நிலைமைக்கு வந்தது. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. ஆனால், தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய மக்கள் முன்னணி தோல்வியடைந்து எதிர்க்கட்சியாக மாறியது. சந்திரிக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது.

நோர்வேயின் ஏற்பாட்டுடன் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி வடக்குக் கிழக்கு உள்ளிட்ட இலங்கைத் தீவின் கரையோர மாவட்டங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

தமிழர் தாயகப் பகுதிகளில் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதனால் நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க நோர்வே முயற்சி எடுத்திருந்தது. அமெரிக்கா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் அந்தப் பொதுக் கட்டமைப்புக்கு உதவியளிக்க முன்வந்தன. ஆனால், கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி உள்ளிட்ட சிங்கள அரசியல் கட்சிகள், பௌத்த குருமார் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் எதிர்ப்பைக் காரணம் காண்பித்துச் சந்திரிக்காவும் பொதுக் கட்டமைப்பு செயற்படுத்த மறுத்துவிட்டார். அதற்கு முன்னரே நிதி வழங்கும் நாடுகள் பட்டியலில் இருந்து அமெரிக்கா வெளியேறியது.

சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுக்கள் தீவிரமடையும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அல்லது சர்வதேச அரங்கில் சூடு பிடிக்கவுள்ள நிலையில், தமக்குள் மோதுப்பட்டுப் பின்னர் ஒரு புள்ளிக்கு வந்துவிடுவர்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதும், பௌத்த இனவாதச் செயற்பாடுகள் இலங்கை ஒற்றையாட்சி பாராளுமன்றத்திற் குள் மேலும் சூடுபிடித்தன. 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் பின்னரான சூழலில், 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், போரில் ஈடுபட்டு இன அழிப்புக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டார்.

இது பௌத்த தேசியவாதத்தை இன அழிப்புக் குற்றச்சாட்டில் இருந்து சர்வதேச அரங்கில் காப்பாற்றும் செயலாகவே அன்று ஈழத்தமிழர்களினால் விமர்சிக்கப்பட்டது. ஆனாலும் விரும்பியோ விரும்பாமலோ சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்க வேண்டிய கட்டாயச் சூழல் ஒன்றும் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்கு ஏற்பட்டது.

2014 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவி வகித்தவரும், இறுதிப் போர்க்காலத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய கூட்டு எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவியேற்றார்கள்.

இதே ஆண்டுதான் ஜெனீவா மனித உரிமைச் சபையில், ஈழத்தமிழர்கள் பற்றிய இலங்கை விவகாரம் தொடர்பான தீர்மானத்துக்கு இலங்கை அனுசரணை வழங்கியது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஒத்துழைப்பு வழங்கியது. அதாவது இன அழிப்புப் பற்றிய பேச்சுகள் சர்வதேச அரங்கில் இருந்து நீக்கம் செய்யும் சூழ்ச்சிகள் இடம்பெற்றன. ஈழத்தமிழர் விவகாரம் இலங்கை மக்களின் மனித உரிமைப் பிரச்சினையாக மட்டும் மாற்றப்பட்டது.

மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற உணர்வோடு வாக்களித்து மைத்திரிபால சிறிசேனவை மக்கள் ஜனாதிபதியாக்க அவரோ, 2018 இல் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அழைத்துப் பிரதமர் பதவி கொடுத்து பெரும் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தார். இச்செயற்பாடுகள்தான், 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட கோட்டபாய ராஜபக்ஷ வெற்றிபெற வசதியாகவும் அமைந்தது. ஜனாதிபதியாக அனுராதபுரம் விகாரையில் கோட்டபாய பதவியேற்றார்.

பாதுகாப்புச் செயலாளராக இருந்து போரை நடத்தித் தமிழர்களை வெற்றி கொண்டவர் என்ற பிரச்சாரத்துடன், 69 இலட்சம் பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளில் வெற்றிபெற்ற கோட்டபாய ராஜபக்ஷ குறிப்பிட்ட ஒரு சிலரைத் தவிர மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் எவருக்குமே அமைச்சுப் பதவியை வழங்கவில்லை. ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு 13 தீர்வல்ல என்று வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் ஏற்கெனவே நிராகரித்தபோதும், அது பற்றிக் கூட எதுவுமே பேசாதவொரு நிலையில். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு முடிவடைந்து ஒரு வாரத்துக்குள் பொருளாதார நெருக்கடிப் பிரச்சினைகள் எழுந்தன.

மக்கள் போராட்டம் ஆரம்பமானது. மகிந்த ராஜபக்ஷ பதவி விலகியதொரு நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது பிரதமராகப் பதவியேற்றுள்ளார். ஆகவே சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுக்கள் தீவிரமடையும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அல்லது சர்வதேச அரங்கில் சூடு பிடிக்கவுள்ள நிலையில், தமக்குள் மோதுப்பட்டுப் பின்னர் ஒரு புள்ளிக்கு வந்துவிடுவர். ■

சில நிகழ்வுகளின் அழைப்பிதழில் ஆரம்பமாகும் நேரம் பிற்பகல் 3 மணி 37 நிமிடமென இட்டிருப்பார்கள். ஏதோ சுப நேரத்தைத் தெரிவு செய்துள்ளனர். நாமும் அந்த நேரத்திற்கு வருகை தர வேண்டுமெனக் கணிசமானோர் வருவதைக் காணலாம்.

சில பொது நிகழ்வுகளில் முதலில் பேசக் கிடைப்பவர்கள் தமக்குத் தெரிந்த வித்துவம் எல்லாவற்றையும் கொட்டோ கொட்டென்று கொட்டிப் பின்னர் பேச வருபவர்களுக்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

ஓரிடத்தில் மின்சார இணைப்பைத் துண்டித்து மேடையிலிருந்து ஒருவரை இறக்குமளவுக்கு நிலைமை இருந்தது.

அதனால் பேச்சு மேடைகளில் அவையறிந்து நேரம் அறிந்து பேசக் கூடியவர்களை பிரமுகர்களாக அல்லது விருந்தினராக இணைத்தல் நன்று.

நேரத்தை மதித்தல் தொடர்

நிகழ்வும் ஒழுங்கும்

வேதநாயகம் தபேந்திரன்

நேரம் பொன்னானது. பெறுமதி மிக்கது. இழந்து போன ஒரு நிமிடத்தையோ மணித்தியாலத்தையோ அன்றைய நாளையோ ஒரு போதும் மீண்டும் பெறவே..... முடியாது. நேரத்தின் பெறுமதி உணர்ந்து வாழ்வைத் திட்டமிடும் மனிதர்களே வாழ்வில் வெற்றி பெறுகின்றனர். அந்த நாடுகளே வளர்கின்றன. உயர்கின்றன.

எமது நாடு பெருமளவுக்கு முன்னேறாததற்கு நேரத்தின் பெறுமதி தெரிந்த மனிதர்களின் தொகையும் குறிப்பாகத் தலைவர்களும் தொகையும் இருப்பதாகும்.

பொது நிகழ்வுகளில் ஏராளம் நேரத்தைத் தொலைத்துக் கொள்ளும் நிலையை அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றோம்.

அது ஒரு புத்தக வெளியீட்டு விழா. புத்தகம் வெளியிட்ட எழுத்தாளர் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். அவருக்கு மிக நெருக்கமான வட்டாரம் தவிர்ந்த ஏனையோர் வருகை தந்தனர். அவர் எதிர்பார்த்ததை விட வருகை தந்தோர் வீதம் மிகக் குறைவாக இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிகழ்வை ஒழுங்கு செய்தால் அந்த நேரம் வருகை தருபவர்களுக்கு உதவியாக இருக்கும் என அவரது உற்ற நண்பன் கூறியதை நினைத்துக் கொண்டார். வெளி மாவட்டத்திலிருந்து வந்த ஐந்து பேருக்காக காலை நேரத்தை ஒழுங்கு செய்ததையும் நினைத்துப் பார்த்தார். ஒரு ஐந்து பேருக்காகப் பெரும்பான்மையினரின் வசதியைப் புறக்கணித்து நிகழ்வு தோல்வி அடைந்ததை நினைத்துக் கவலைப்பட்டார்.

நிகழ்வு ஒன்றைத் திட்டமிடும் போது எத்தகைய விடயங்களைக் கவனிக்க வேண்டும் என்பதில் விடும் ஒரு தவறு கூட மொத்த நிகழ்வையும் தோல்வியடையச் செய்து விடும்.

நிகழ்வு ஒழுங்கில் முதலாவது விடயம் உரிய நாளும் நேரமும் ஆகும். நிகழ்வில் பங்குபற்ற உள்ள பெரும்பான்மையினருக்கு வசதியான நாளும் நேரமும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

பொதுவாக ஓய்வு நாட்களில் பிற்பகல் 3 மணிக்கு நிகழ்வை ஒழுங்கு செய்யும் போது பெரும்பாலானோருக்கு வசதியாக இருக்கும். ஏனெனில், காலை நேரத்தில் சொந்த வேலைகள், சமையல் போன்றவற்றில் பெரும்பாலானோர் ஈடுபடுவதால் பிற்பகல் நேரம் வசதியாக இருக்கும்.

சில இடங்களில் பிரதம விருந்தினரின் நேர வசதிக்காக நிகழ்வை ஒழுங்கு செய்திருப்பார்கள். அவர் ஒருவருக்காக ஏனையோரின் நேர வசதிகள் புறக்கணிக்கப்படும் போது நிகழ்வு முழுமையாக வெற்றியடையாது.

விவசாயக் கிராமங்களில் பொதுமக்களுக்கான நிகழ்வைத் திட்டமிடும் போது விதைப்பு, அறுவடைக் காலத்தினைத் தவிர்க்க வேண்டும். தமது வாழ்வாதாரத்தைத் தவிர்த்துப் பொதுமக்கள் வர மாட்டார்கள். அவர்களுக்குப் பொருத்தமான நாளையும் நேரத்தையும் குறித்து ஒழுங்குபடுத்தினால் நிகழ்வு வெற்றி பெறும்.

பெண்களுக்கான கூட்டங்கள், விழிப்புணர்வுகளைத் திட்டமிடும் போது மாலை நேரத்தைத் தெரிவு செய்வது நன்று.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளைச் சில கிராமங்களில் காலை நேரத்தில்தான் ஒழுங்கமைப்பார்கள். ஏனெனில், மாலை நேரத்தில் அங்கு அன்றாட உழைப்பாளிகள் சிலர் மதுபானம் அருந்தி விட்டு வந்து நிகழ்வைக் குழப்ப முற்படுவார்கள்.

எமது பிரதேசங்களில் ஒரு வழக்கம் உள்ளது. நிகழ்வு நடைபெறும் நேரம் பிற்பகல் 3 மணியென அழைப்பிதழில் இட்டிருந்தால் 3.30 மணிக்குத்தான் வருவார்கள். அரை மணித்தியாலம் பிந்தி வருதல் என்பது எழுதப்படாத ஒரு சட்டமாக ஆகி விட்டது.

ஆனாலும் நேர ஒழுங்கை இடைவிடாது கடைப்பிடிப்பவர்கள் யார் என்ன சொன்னாலும் உரிய நேரத்திற்கு நிகழ்வுகளுக்குச் சென்று விடுகின்றனர். அவர்களின் நேரமுகாமைத்துவத்திற்கு ஒரு சிலர்தான் மதிப்பளிக்கின்றனர்.

பான பண்புள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பாடசாலைகள் முதற்பங்கை எடுத்தல் வேண்டும்.

சில தனியார் பாடசாலைகள் குறித்த ஒரு ஆண்டின் பாடசாலை நாட்கள் எவை? எந்தெந்த நாட்களில் என்னென்ன நேரத்தில் நிகழ்வு ஆரம்பமாகும். நிகழ்வு நிறைவுறும் போன்ற விடயங்களை ஒரு நாட் குறிப்பாக அச்சடித்துக் கொடுத்திருப்பார்கள்.

அதன்படியே அந்த ஆண்டு முழுவதும் பாடசாலை நடைபெறும். அந்தப் பாடசாலைகளில் கற்று வெளியேறும் மாணவர்களும் நேரத்தைப் பொன் போன்றதாகக் கடைப்பிடிக்கின்றனர். அவர்களது ஆளுமைகள் காரணமாகப் பொதுச் சமூகத்தில் மிகவும் நேசிக்கப்படுகின்றனர்.

அது போன்றதொரு நிலையைச் சகல பாடசாலைகளின் மட்டங்களிலும் கடைப்பிடிப்பதன் மூலமாக ஆரோக்கியமான வளர்ச்சி மிகு சமூகக் கட்டமைப்பை உருவாக்கலாம்.

வாழ்க்கைச் சுற்றோட்டத்தில் பொது நிகழ்வுகளில் நேர ஒழுங்கும், முதன்மைப் பிரமுகர்களதும் ஒழுங்கும் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படாத காரணத்தினால்தான் பொதுமக்கள் இன்று பொது நிகழ்வுகள் தொடர்பாக அக்கறையற்ற நிலையிலுள்ளனர்.

நிகழ்வுகள், ஒழுங்குகள் தொடர்பாக முன்னோக்கிய செயற்பாடுகளைக் கட்டமைப்பதன் மூலமாகவே நீங்களும் முன்னேறுவீர்கள். நாடும் முன்னேறும்.

எமது வேதனைகள் அடுத்த பரம்பரைக்கு செல்லக் கூடாது

சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சதாலட்சுமி

இருநூறு ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட மலையக மக்கள் இன்று வரையில் தமக்கான உரிமைகள், அடிப்படைத் தேவைகளுக்காகப் போராட வேண்டிய நிலைமையிலேயே உள்ளனர். அனைத்து தேவைகளுக்கும் அடிப்படை விடயமாகப் பொருளாதாரம் காணப்படுவதால் மலையக மக்களுடைய பிரச்சினையாக ஆயிரம் ரூபாய் சம்பளம் பற்றி பெரும்பாலும் பேசப்படுகின்றது.

கடந்த முப்பது வருடங்களாக பெருந்தோட்டத் தொழிலாளியாக வேலை செய்யும் மாத்தளை மாவட்ட, செம்புவத்த தோட் டத்தைச் சேர்ந்த சதாலட்சுமி மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் தோட்டத் தொழிலாளிகளின் பிரச்சினைகள் தொடர்பில் தீம்புனலுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.

சுமார் முப்பது வருடங்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளராக வேலை செய்கின்றேன். அன்றிலிருந்து இன்று வரை எனது குடும்பத்தின் நிலைமையிலும் எமது கிராமத்தின் நிலைமையிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. காலை 7 மணியளவில் வேலைக்குச் சென்று மாலை 5 மணிக்கு வீடு திரும்ப வேண்டும். இதற்கிடைப்பட்ட நேரத்தில் உடலளவிலும் மனதளவிலும் பெரும் துன்பத்தை எதிர்நோக்குகின்றோம்.

ஒரு நாளைக்கு கட்டாயம் 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும். ஆனால், தேயிலைச் செடிகளுக்கு ஒழுங்காக உரம் போடுவது இல்லை. தேயிலை மலை முழுவதும் காடாக உள்ளது. மேலும், இந்தத் தேயிலை மலைகளில் பாம்பு, பூரான், அட்டை போன்றன இருக்கின்றன. இவை இருப்பது தெரியாமல் தேயிலை மலைகளில் இறங்கி வேலை செய்து பல தொழிலாளிகள் பாம்பு கடித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தேயிலை மலைகளை தோட்ட நிர்வாகமும் அரசாங்கமும் முறையாகத் துப்பரவு செய்வதில்லை. இதனால் கொழுந்து குறைவாகவே இருக்கின்றது. இருப்பினும் கொழுந்து இல்லாத மலைகளிலும் 20 கிலோ எடுத்தால் தான் ஒரு நாளுக்கான முழுமையான சம்பளம் கிடைக்கும். இவ்வாறு துப்பரவில்லாத தேயிலை மலைகளில் குளவிக்கூடுகள், பாம்பு, அட்டை என அனைத்திற்கும் பயந்தபடியே முழு நாளும் அந்தத் தேயிலை மலையில் நின்று கொழுந்து பறிக்க வேண்டும்.

இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் வேலை செய்வது மட்டுமல்லாமல் உணவு உண்பதற்கும் நிம்மதியற்ற நிலையிலேயே வாழ்கின்றோம். மழைக்காலங்களிலும் நனைந்து கொண்டு உணவருந்த வேண்டிய அவல நிலைமையே எமக்குள்ளது.

தேயிலை மலைக்கு 7 மணிக்குச் செல்ல வேண்டும். அதிகாலை 4 மணியளவில் எழுந்து எமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கான தயார்ப்படுத்தல்களைச் செய்ய வேண்டும். வெயில், மழை எனப் பாராமல் ஒருநாள் முழுவதும் நின்று பல கஷ்டங்களுக்கு மத்தியில் வேலை செய்தாலும் எமக்கான அதிகூடிய சம்பளம் 700 ரூபாயாகத்தான் உள்ளது. இன்று வரையில் எமக்கான சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தருமாறு எங்கள் குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது. அதற்காகப் பல்வேறு போராட்டங்களைச் செய்தோம். நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடியவர்களாகத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றோம். இருப்பினும் எமக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை.

பல போராட்டங்களுக்கும் முயற்சிகளுக்கும் பின்னர் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளம் என அறிவிக்கப்பட்டது. அந்த ஆயிரம் ரூபாய் சம்பளம் எமக்கு எவ்வித மகிழ்ச்சியையும் தரவில்லை. சம்பளம் மாத்திரம் ஆயிரம் ரூபாயாக உயரவில்லை, ஒரு நாளைக்கான தேயிலைக் கொழுந்து ராத்தல் 20 கிலோவாக மாற்றமடைந்தது, தேயிலை மலைகள் துப்பரவு செய்யப்படாமல் காடுகளாக்கப்பட்டன. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்தது, பல காரணங்களைக் கூறி எமது சம்பளத்தில் காசுகள் கழிக்கப்பட்டன. ஆயிரம் ரூபாய் சம்பளம் அது எமக்கு மேலும் நஷ்டத்தையே ஏற்படுத்தியது.

இதற்கு ஏற்றாற்போல் கொரோனாத் தொற்று நோய் பரவலடைந்தது. இதனால் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது எமது குடும்பத்தில் குறைந்தது 5 பேர் வசிக்கின்றனர். அனைவருக்கும் இரு அறைகளே உள்ளன. இதில் திருமணமான மருமகள், மருமகன் என அனைவரும் ஒன்றாக வசிக்க வேண்டிய நிலையே உள்ளது. இவ்வாறான சூழலில் ஊரடங்கு சட்டத்தால் ஆண்கள் வெளியில் சென்று வேலை செய்ய முடியவில்லை. எமது தோட்டத்திற்குள் எவ்வித வேலை வாய்ப்புகளும் கிடைக்கவில்லை. இந்நிலையில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து அதில் கிடைக்கும் சம்பளத்திலே குடும்பத்தில் அனைவரும் சாப்பிட்டோம்.

எமது வறுமை நிலை அறிந்தும் எமக்கு யாரும் உதவ முன்வரவில்லை. மாறாக தோட்டத்தில் வழங்கப்பட்ட வேலையும் நிறுத்தப்பட்டது. ஒரு வாரத்திற்கு மூன்று நாள் என்ற அடிப்படையில் வேலை வழங்கப்பட்டது. இதனால், ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியின்றி கஷ்டப்படும் நிலை எமக்கு ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் வேறு கிராமங்களுக்கு வேலை தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டது. எமது கிராமத்தைப் போன்று அந்தக் கிராமத்திலும் பல இன்னல்களை எதிர்நோக்கினோம். ஒருநாள் கூலியாக 600 ரூபாய் கிடைத்தது. சில சந்தர்ப்பங்களில் வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் வேலைத்தளங்களில் புறக்கணிக்கப்பட்டோம்.

மலையகத்தில் இருப்பதால் நாங்கள் மாத்திரமல்ல எமக்குப் பிறந்த குழந்தைகளும் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். பாடசாலைக்கு சுமார் 05 கிலோ மீற்றர் தூரம் தினமும் நடந்து செல்ல வேண்டும். பாடசாலை காலை 7 மணிக்கு ஆரம்பிப்பதால் ஒரு மணித்தியாலத்திற்கு முதலே நடந்து செல்ல ஆரம்பித்து விடுவார்கள். மேலும், தினமும் நடந்து செல்லும் களைப்பில் படிப்பதில் அவர்களால் அக்கறை செலுத்த முடியாத நிலையும் ஏற்பட்டது. கொரோனாப்

பரவலின் போது தொலைபேசி வசதிகள் எமது பிள்ளைகளுக்கு கிடைக்கவில்லை. இதனால் ஒன்லைன் மூலமான கற்கைகளை மேற்கொள்ளச் சிரமப்பட்டனர்.

இவை மட்டுமன்றி எமது ஊருக்கான பாதைகள் ஒழுங்காகப் புனரமைக்கப்படவில்லை. இதனால், பஸ் போக்குவரத்து சேவைகளும் வழங்கப்படவில்லை. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள், வைத்திய தேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என அனைத்து விடயங்களுக்கும் நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. எமது ஊரின் இயற்கை வளத்தால் 2015 ஆம் ஆண்டு சுற்றுலாத்துறையாக உருவாக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் வருகையால் 2015 ஆம் ஆண்டு தனியார் பஸ் சேவை வழங்கப்பட்டது. இருப்பினும் பாதை ஒழுங்காகப் புனர் நிர்மாணம் செய்யப்படாமல் பஸ் சேவைகளும் ஒழுங்கற்றதாகவே காணப்பட்டது.

இவ்வாறு வாழ்க்கையில் ஒவ்வொரு தேவைகளையும் போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமையே எமக்கும், எமது பிள்ளைகளுக்கும் உள்ளது. எமக்கான உரிமைகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. சுமார் முப்பது வருடங்களாக ஒரே வீட்டில் வசிக்கின்றோம். ஆனால், அந்த வீடுகள் எமக்குச் சொந்தமானவை இல்லை. எமக்கென்று எந்த நில உரிமையும் இதுவரை காலமும் வழங்கப்படவில்லை.

எத்தனை ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் எமது நிலை மாறவில்லை இதுவரை காலமும் நாட்டுக்காக உழைத்தோம், இனியும் நாட்டுக்காகத்தான் உழைக்கப்போகின்றோம். எமது உழைப்பிற்கான ஊதியத்தை வழங்க வேண்டும். இதனால் பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிக்கக்கூடிய பலம் எமக்குக் கிடைக்கும். உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும் போது எமது அடிப்படைத் தேவைகள், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை, இதர தேவைகளை நிறைவேற்ற முடியும்.

சம்பளத்தை உயர்த்திக் கேட்டுப் போராடும் போது விலைவாசிகளை உயர்த்துவதால் ஆயிரம் ரூபாய் கிடைப்பதில் என்ன பயன்? தேயிலை மலைகளைத் துப்பரவு செய்து பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் 20 கிலோ அல்ல எம்மால் 30 கிலோ என்றாலும் கொழுந்து பறிக்க முடியும். அதற்கு முதல் தேயிலைச் செடியில் கொழுந்து காணப்பட வேண்டும். எமது மலையகப் பிள்ளைகள் இவ்வளவு சிரமத்திற்கு மத்தியில் தமது கல்வியில் முன்னேற்றம் அடைந்து தற்போது பல பட்டதாரிகள் உருவாகியுள்ளனர். எமது மலையகத்தில் இவ்வாறு பல பிரச்சினைகள் உள்ளன இவை எம்மோடு முடிந்துவிட வேண்டும். எமது எதிர்கால சந்ததியினருக்கு இவ்வாறான ஒரு நிலை ஏற்படக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு பெருந்தோட்ட தொழிலாளராக மலையக மக்கள் பொருளாதார ரீதியில் மட்டுமல்லாமல் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை, பாதை ஒழுங்கின்மை, வைத்திய தேவைகள் மற்றும் அடிப்படை வசதிகளற்ற வர்களாக பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குவதை இவருடைய நேர்காணல் ஊடாக எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. ■

தாட்சாயணி எனும் தனித்துத் தெரியும் திசை

தாட்சாயணியின் அண்மைக் கால படைப்புகள் மீதான ஓர் பார்வை

புதுப்புனல் – 30

புலோலியூர் வேல்நந்தன்

தீம்புனலின் புதுப்புனலில் இவ்வாரம் அறிமுகம் காண இருப்பது தாட்சாயணியின் அண்மைக் காலப் படைப்புகள். ஈழத்து படைப்பிலக்கிய வெளியில் பெண் படைப்பாளிகளது பங்களிப்பும் மகத்தானது ஆயினும், அவர்களிடம் ஒரு இலக்கிய நீட்சியை ஆண்களைப் போன்றதொரு வரிசையை இனங்காட்டல் என்பது இன்றுவரை சவால் மிக்கதொன்றாகவே விளங்குகிறது. ஆயினும் குந்தவை, கோகிலா மகேந்திரன், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியன், குறமகள், தாமரைச் செல்வி, ஆதிலட்சுமி சிவகுமார், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், மண்டூர் அசோகா என அங்கும் ஒரு வரிசையை இனங்காட்ட முடிகிறது. இந்த வரிசையில் இன்றைய தலைமுறைக்குரிய பெண்படைப்பாளுமையாக விளங்கி சிறப்புப் பெறுபவரே பிரேமினி என்ற இயற்பெயரையும் தாட்சாயணி என்ற புனைப்பெயரையும் உடைய பெண் படைப்பாளுமை ஆவார்.

இவர் சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகக் கொண்டவர். சங்கானை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலராக கடமையாற்றுபவர். உதயன் “சஞ்சீவி” மூலம் ஈழத்துப் படைப்பிலக்கியத் துறையில் அறிமுகம் கண்டவர். வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும் இலக்கிய உலகிலும் இடையறாது இயங்கிக் கொண்டிருப்பவர். அவ்வகையில் இதுவரை இவரது ஏழு சிறு கதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவ்வகையில் ஒரு மரணமும் சில மனிதர்களும், இளவேனில் மீண்டும் வரும், தூரப்போகும் நாரைகள், அங்கயற் கண்ணியும் அவள் அழகிய உலகமும், ஒன்பதாவது குரல், வெண்சுவர், ராணியம்மா என்பனவே அவையாகும். இவற்றை விட இவரிடம் மறைந்துள்ள கவி மனத்தின் சாட்சியாக யாருக்கோ பெய்யும் மழை.. என்ற இவரது கவிதைத் தொகுப்பும் வெளிவந்துள்ளது.

கடல் பதிப்பக உரிமையாளர் விஜய் மகேந்திரனின் பங்களிப்பும் இத் தொகுப்புக்கு வளம் சேர்க்கின்றன. இதில் 2019 இற்குப் பின்னரான மூன்றாண்டுகளில் தன்னால் எழுதப்பட்ட பன்னிரண்டு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறும் கதாசிரியர் இத் தொகுப்பைத் தன்னுடைய தாய் தந்தைக்கு சமர்ப்பித்துள்ளார்.

அவ்வகையில் இத்தொகுப்பில் வெண் சுவர், இருத்தலின் வலி அல்லது இன்னொரு பக்கம், அம்மாவின் தோழன், இரண்டு கடிதங்கள், கத்தரிப்பூக் கிழங்கு, சாயம், சுடு வெயில், தனிமைப்படல், தாழமுக்கம், நட்சத்திரங்களாய் ஒளிரும் வகுப்பறை, புளிப்பின் சுவை, பெண்மையின் தவறோ ஆகிய கதைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் சில கதைகள் பெண்மையின் அவலங்களைப் பேசுவன வேறு சில கதைகள் கொரோனாக்கால அனுபவங்களைப் பேசுவன. ஏனைய கதைகளும் வேறுபட்ட தளங்களில் பெண்மையின் அனுபவங்களைப் பேசுகின்றன. வெண்சுவர் என்ற கதை மயூரிகா வைகுந்தன் என்ற இளம் தம்பதியை மையப்படுத்தி குடும்பம் சார்ந்து அவர்கள் எதிர்கொள்ளும் குறிப்பாக மயூரிகா எதிர்கொள்ளும் பொருளாதார, உளவியல் நெருக்கடி பற்றிப் பேசுகிறது. வித்தியாசமான எடுத்துரைப்பு முறையுடன் இக்கதை சொல்லப்பட்டுள்ளது. இருத்தலின் வலி என்ற கதை போராளிகளாக இருந்து போர் முடிந்த பின் திருமணம் செய்து வாழும் இருவரது வாழ்வியல் நெருக்கடி பற்றி குறிப்பாக சன்னங்களோடு வாழும் நிலை பற்றி உடல் மரத்துப் போன நிலை பற்றி, இன்னொரு துணை நாடும் மனம் பற்றிப் பேசுகிறது. அம்மாவின் தோழன் என்ற கதை மகரகம ஆஸ்பத்திரியில் சாகும் தறுவாயில் இருந்த அம்மா தனக்குள் இரகசிமாய் வைத்திருந்த தனது நிறைவேறாத காதல் கதையை மகளுக்குக் கூறுவதாய் அமைகிறது. சங்கீதமே அவர்களின் காதலுக்கான ஆதாரமாய் அமைந்ததும் தங்களுக்கான பெயர் வைப்பதற்கும் அதுவே காரணமாய் அமைந்தமையும் இறுதியில் செத்த வீட்டில் அவரே வந்து சுண்ணப்பாடல் பாடுவதும் என மனித மனங்களின் மெல்லுணர்வைப் பேசும் கதையாக அமைந்து சிறப்புப் பெறுகிறது. இரண்டு கடிதங்கள் என்ற கதை கடித வடிவில் அமைந்து விவாத வடிவில் இரண்டு சம்பவங்களை மையப்படுத்தி கைத்தொலைபேசி அழைப்புக்களால் சீரழிக்கப்படும் பதின்ம வயதுப் பெண்களது வாழ்வை அதன் மீதான கரிசனையை, பெண் சிசுவை உயிரோடு தாட்ட செயலைப் பேசுவதாக அமைகிறது.

கத்தரிப்பூக் கிழங்கு என்ற கதை முற்பாதியில் ஒரு சிறுவர் கதைப்போக்கில் அமைந்து பிற்பாதியில் நெருக்கடியான காலத்திலும் உதவி செய்வதற்காக ராசவெள்ளிக் கிழங்கை லஞ்சம் பெறும் அரச அலுவலர்களின் போலிமுகத்திரையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. பல கதைகளில் வீட்டுத்திட்டம் அதுசார்ந்த அனுபவங்களும் பேசப்பட்டுள்ளன.

தனிமைப்படல், நட்சத்திரங்களால் ஒளிரும் வகுப்பறை, தாழமுக்கம் ஆகிய கதைகள் கொரோனாக் காலத்தின் தனிமைப்படுத்தல் வாழ்வு, சூம் வகுப்பு, வேலை இழந்த நிலை போன்ற வெவ்வேறுபட்ட அனுபவங்களைப் பேசும் கதைகளாய் அமைந்து ஒரு காலகட்டப் பதிவாய் சிறப்புப் பெறுகின்றன. எல்லாக் கதைகளையும் சொல்வதற்கு இப்பக்கம் இடம் தராமையால் அடுத்து நாம் தாட்சாயணியின் யாருக்கோ பெய்யும் மழை என்ற கவிதைத் தொகுதி பற்றி நோக்குவோம். தாட்சாயணி உதயன் சஞ்சீவி காலத்தில் இருந்து பல கவிதைகளை எழுதி வந்துள்ள போதும் பிற்பட தன்னை ஒரு சிறுகதைப் படைப்பாளியாக அடையாளப் படுத்தியதன் விளைவாக கவிதை எழுதுவதைக் குறைத்துக் கொண்டார். ஆயினும் அவர் எழுதிய கவிதைகளை தேடித் தொகுக்க இக்கொரோனா காலம் அவருக்கு உதவியது என்ற வகையில் “யாருக்கோ பெய்யும் மழை” என்ற தலைப்பில் தனது கவிதைகளைத் தொகுத்து ஜீவநதி வெளியீடாக அண்மையில் வெளிக் கொணர்ந்துள்ளார். கல்வயல் குமாரசாமிக்கு இத் தொகுப்பை அவர் சமர்ப்பணம் செய்துள்ளார். இத் தொகுப்புக்கான முன்னுரைக் குறிப்பொன்றை பொருள் புதிது சுவை புதிது என்ற தலைப்பில் சோ.ப எழுதியுள்ளார். என்னுரையாக கவிஞர் தாட்சாயணி தனது கவிதைப் பயணம் பற்றி குறிப்பிடுகிறார்.

இக்கவிதைத் தொகுப்பில் மலர், முகை, மொட்டு, அரும்பு என்ற பிரிப்பில் 94 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பி.பி.சி இளம் கவிஞர் போட்டியில் ஆறுதல் பரிசு, கம்பன் கழக கவிதைப் போட்டிப் பரிசில், இலங்கை வானொலி இதயசங்கமம் நிகழ்ச்சி என தனக்குள் இருந்த கவிதைக்கான அங்கீகாரத் தடங்களை நினைவில் கொள்கிறார். வகை மாதிரிக்காக இவரது சில கவிதைகளை மட்டும் எடுத்துக் காட்டலாம் என எண்ணுகிறேன்.

“யுகமொன்றின் கடைசி இழையில்
அந்தநாள் தொங்கிக் கொண்டிருந்தது.
அந்த நாளை சிலுவையில் அறைந்த போதுதான்
ஓராயிரம் உயிர்களின் அணுக்கள் தோறும்
வலியின் குருதி படிந்தது...”

என அந்த நாள் என்ற தலைப்பிலான கவிதை அமைகிறது. மற்றொரு கவிதை யுத்தத்தின் கோர முகத்தை இப்படிக் கூறுகிறது.

தீண்டுவாரற்றுக் கிடக்கும் சடலங்கள் பற்றி
நீங்கள் யாரேனும்
ஒரு கணமாவது நினைத்துப்
பார்த்ததுண்டோ...?

(23 ஆம் பக்கம் பார்க்க...)

பெருமளவிற்கு பெண் அவலம், பெண் உலகம் என்பதே இவரது படைப்புக்களின் அடிநாதமாக விளங்குகிறது. அவ்வகையில் அண்மையில் வெளியீடு கண்டுள்ள இவரது மூன்று பிரதிகளான வெண்சுவர் சிறுகதைத் தொகுதி, ராணியம்மா சிறுகதைத் தொகுதி, யாருக்கோ பெய்யும் மழை கவிதைத் தொகுதி ஆகியன குறித்த அறிமுகத்தைத் தருவதாகவே இவ்வாரப் புதுப்புனல் அமைய இருக்கிறது.

முதலில் கடல் பதிப்பக வெளியீடாக அழகிய அட்டை வடிவமைப்புடன் அண்மையில் வெளிவந்துள்ள இவரது வெண்சுவர் என்ற சிறுகதைத் தொகுதியை நோக்கின் இதுவரை ஈழத்து வாசகர்களாலேயே அறியப்பட்டிருந்த இவரது கதை உலகம், வெண்சுவர் என்ற இத்தொகுப்பு மூலம் கடல் பதிப்பக வழி தமிழ்நாட்டு வாசகர்களும் தாட்சாயணியை அறிந்து வியக்க வழி சமைத்துள்ளது. அவ்வகையில் லார்க் பாஸ்கரனின் அட்டை வடிவமைப்பும் சரவணன் மாணிக்கவாசகத்தின் குறிப்புரையும்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முதற் தடவையாக கொழும்பிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களும் மட்டக்களப்பில் முஸ்லிம்களும் அனுஷ்டித்தனர்.

மக்களை அச்சுறுத்தும் இரகசியக் கமராக்கள்

க.கரிகரன்

கமரா தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்ட சமயத்தில் அது மக்கள் அனைவரையும் அதிகமாகவே கவர்ந்தது. கூடவே அவற்றின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து இப்போது அறிவியல் வளர்ச்சியால் கமராக்களில் பல விதமான முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். அதேபோல ஆரம்ப காலத்தில் பெரிய அளவில் இருந்த கமராக்கள் இப்போது எளிதில் கண்டுபிடிக்க முடியாத மிகச் சிறிய அளவுகளில் கூடக் கிடைக்கின்றன.

கொலை, திருட்டு, சட்ட விரோத சம்பவங்கள் பலவற்றைத் தடுக்கவும் அந்தக் குற்றங்களில் ஈடுபடுவோரை அடையாளம் காணவும் வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வங்கிகள், ஏ.ரி.எம் மையங்கள் எனப் பல இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள் நிறுவப்படுகின்றன. இப்படி கண்காணிப்புக் கமராக்களை வைத்து அவை செயல்படும் இடங்களை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில், கண்காணிப்புக் கமரா உள்ளது எனும் வாசகங்கள் எழுதப்பட்ட அறிவிப்புப் பலகை வைக்க வேண்டும்என்பது சட்டமாக உள்ளது. அறிவிப்புப் பலகை இல்லாமல் எந்த ஒரு இடத்திலும் கமரா நிறுவுவது சட்ட விரோதமானது.

சில கமராக்கள் நடமாடும் சத்தம் கேட்டால் மட்டும் தானாக இயங்கி காட்சிகளைப் பதிவு செய்யும்.

குறிப்பாக, ஹோட்டல் அறைகள், விருந்தினர் இல்லம், தங்கும் விடுதிகள் உள்ளிட்ட தங்கும் அறைகளிலோ குளியலறை, உடை மாற்றும் அறைகளிலோ கமரா வைக்கக் கூடாது. ஆனால், சிலர் தீய எண்ணத்துடன் கமராக்களை இரகசியமாகப் பொருத்திவிடுகின்றனர். ஏனெனில், இது போன்ற கமராக்கள் குறைந்த விலையில் எளிதில் கிடைக்கின்றன. மேலும், இவற்றைப் பொருத்துவதும் எளிமையாக உள்ளது. இரகசிய கமராக்களைப் பயன்படுத்தி பெண்களைத் தவறாகப் படம் எடுத்து அவர்களை மிரட்டி பணம் பறிக்கிறார்கள் அல்லது இணையத் தளங்களில் வெளியிடுகிறார்கள். இது போன்ற கமராக்களால் அதிகம் பாதிக்கப்படுவது இளம் வயது பெண்கள் என்பதால் விளைவுகள் மோசமாகிவிடுகின்றன.

இந்தக் குற்றங்களைச் செய்பவர்கள் பலர் கைது செய்யப்பட்டாலும் கூட தொடர்ந்து இந்தக் குற்றங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதனால் இரகசிய கமராக்கள் எங்கெல்லாம் வைக்கப்பட்டாலும் அவற்றை எப்படி கண்டுபிடிப்பது என்பது குறித்த விழிப்புணர்வு மிக அவசியம்.



இரகசியக்கமராக்கள் அளவில் மிகச் சிறியது என்றாலும் காட்சிகளைத் துல்லியமாகப் படம்பிடிக்கும் படி தான் தயாரிக்கப்படுகின்றன.

சில கமராக்கள் இயங்க மின்சாரம் தேவை. அதே சமயம் வயர் இல்லாமல் இயங் கும் கமராக்களும் உள்ளன. அவை பற்றரியின் உதவியுடன் இயக்கப்படுபவை. காந்தத்தின் உதவியால் இந்தக் கமராக்கள் குறிப்பிட்ட இடத்தில் பொருத்தப்படும்.

Wifi தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன கமராக்களும் உள்ளன. இதனால் Wifi மூலம் நேரடியாக செல்போனுடன் தொடர்புபடுத்தி பார்க்க முடியும்.

வெளிச்சத்தில் மட்டும் அல்ல, இருட்டிலும் கூட செயற்பாடுகளைப் பதிவு செய்யும் கமராக்களும் உள்ளன.

எப்படிப்பட்ட இருட்டிலும் படம் பிடிக்கக்கூடிய நவீன அகச்சிவப்பு கமராக்களையும் அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

பொருத்தப்படும் இடங்கள்

இரகசிய sssகமராக்கள் குளியலறை, படுக்கை அறை, உடை மாற்றும் அறை ஆகியவற்றில் உள்ள கடிகாரம், பூந்தொட்டிகள், துணிகளைத் தொங்கவிடும் ஸ்ராண்டுகள், திரைச் சீலை, சோப்பு டப்பாக்கள், பொம்மைகள், ஹோட்டல் பணியாளர் அணியும் கோட் பட்டன்கள் என எங்கு வேண்டுமானாலும் பொருத்தப்பட்டு அங்கு நிகழ்பவற்றைப் படம்பிடிக்கலாம். சில ஹோட்டல்களில் தண்ணீர் குழாய்கள் திருத்தும் இடங்களில் கூடப் பொருத்தலாம்.

கவனம்

பெண்கள் பழக்கமில்லாத வெளியிடங்களில் தங்கும் போது முதலில் அங்குள்ள பொருட்களை நன்கு ஆராயவேண்டும். முக்கியமாகப் படுக்கை அறை, குளிக்கும் இடம் ஆகியவற்றை நோக்கியுள்ள அனைத்து இடங்களையும் முதலில் கவனமாகப் பார்க்க வேண்டும். அறையின் மேற்கூரையின் மூலைகளில் ஏதாவது பொருட்கள் இருக்கிறதா, துளை ஏதேனும் உள்ளதா என்று கவனிக்கவும். அப்படி துளை இருந்தால், அதனுள்ளே ஏதாவது உள்ளதா என்று பார்க்கவும்.

தேவையில்லாமல் கம்பியோ/ வயரோ இருந்தால், அது எங்கே போகிறது என்பதைக் கண்டுபிடிக்கவும். இது கூட இரகசிய கமரா இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்கலாம்.

அதன் பிறகு அறையில் உள்ள விளக்குகள் எல்லாவற்றையும் அணைத்து விட்டு அறையைச் சுற்றி கவனமாகப் பார்க்க வேண்டும். இரகசிய கமராக்களில் உள்ள சிவப்பு அல்லது பச்சை நிற எல்.இ.டி விளக்கு ஒளிரும் என்பதால், இருட்டில் அது இருக்கும் இடத்தை எளிதாகக் கண்டறிய முடியும்.

கண்ணாடிகள்

துணிக்கடைகளில் உடை மாற்றும் அறைகளில் பெரிய பெரிய கண்ணாடிகள் இருப்பதை கவனித்திருப்போம். இது போன்ற கண்ணாடிகளிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். உங்கள் கை விரலை கண்ணாடியின் மீது வைக்கும்போது, விரலுக்கும் கண்ணாடியில் தோன்றும் விம்பத்திற்கும் இடையே சிறு இடைவெளி இருந்தால் அது சாதாரண கண்ணாடி. இடைவெளி இல்லை என்றால் கண்டிப்பாகப் பிரச்சினை இருக்கிறது என்று அர்த்தம். இரகசிய கமராக்கள் என்ற ஆபத்தையும் தாண்டி கண்ணாடியின் பின்பக்கம் வழியாக வேறு ஒருவரால் கண்காணிக்கப்படும் ஆபத்தும் இருக்கலாம்.

ஒரு வழியாக மட்டுமே பார்க்கக்கூடிய ஒருவழி ஆடி கண்ணாடிகளில் வெள்ளி முலாம் கண்ணாடியின் பின்புறம் பூசப்பட்டிருக்கும் என்பதால் விரல் வைத்து பார்க்கும் போது சிறு இடைவெளி இருக்கும். இருவழி ஆடி கண்ணாடிகளில் வெள்ளி முலாம் கண்ணாடிகளின் மேற்பரப்பில் பூசப்பட்டிருக்கும் என்பதால் இடைவெளி இருப்பதில்லை.

அதே போல வழக்கத்தை விட அறையில் விளக்கு வெளிச்சம் அதிகமாக, கண்ணைக் கூசும் அளவில் இருந்தால், அங்கு இருப்பது இருபக்க கண்ணாடியாக இருக்க அதிக வாய்ப்பு உள்ளது. ஏனென்றால், வெளிச்சம் குறைவாக இருக்கும் போது இத்தகைய கண்ணாடி வழியாகத் தெளிவாக ஊடுருவிப் பார்க்க முடியாது. அறையின் விளக்குகளை அணைத்து விட்டு கண்ணாடியில் டார்ச் லைட் அடித்து கவனமாகப் பார்த்தும் கண்ணாடி மேல் முகத்தை வைத்து உற்று பார்ப்பதன் மூலமும் யாரேனும் கண்காணிக்கிறார்களா? எனக் கண்டுபிடிக்கலாம்.

ஸ்மாட்போன் மூலம் கண்டுபிடிப்பது எப்படி?

இந்த டிஜிட்டல் உலகில் இரகசிய கமராக்களை எங்கு வேண்டுமானாலும் மறைத்து வைக்கமுடியும்.

அப்படி வைக்கப்பட்டுள்ள கமராக்களை ஸ்மாட்போனைக் கொண்டே கண்டுபிடிக்கலாம். குறிப்பிட்ட இடத்தினுள் உள்நுழைந்ததும் அனைத்து மின் விளக்குகளையும் அணைத்து விட்டு, கதவுகள் மற்றும் ஜன்னல்களை அடைத்து விட்டு உங்கள் ஸ்மாட் போனில் உள்ள கமராவை செயற்படுத்துங்கள். இருட்டில் புகைப்படம் எடுக்கும் போது வரும் பிளாஸ் (Flash) வெளிச்சத்தை ஒவ் செய்து விட்டு அறையில் உள்ள சகல இடங்களையும் புகைப்படம் எடுங்கள். குறிப்பாக, மறைவான இடங்களை மிகவும் கவனமாக எடுக்கவேண்டும். பின்பு எடுத்த புகைப்படத்தை கவனித்தால் இரகசிய கமரா அறையினுள் பொருத்தப்பட்டிருப்பின் அது இருட்டு புகைப்படத்தில் சிவப்பு நிறப் புள்ளிகளாகத் தெரியும். இதை வைத்து அறையினுள் இரகசிய கமராக்கள் பொருத்தியுள்ளதை அறியலாம்.

இதே போல அறை முழுவதும் இருட்டாக்கி விட்டு அறையை ஸ்மாட்போனில் வீடியோ எடுங்கள்.

பின்னர், அதைப் பாருங்கள். எந்த இடத்திலாவது சிவப்பு அல்லது வெள்ளை நிற ஒளி வந்தால் கமரா இருக்கிறது என்று உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்.

ஸ்மாட்போனில் யாரிடமாவது பேசிக் கொண்டே அறை முழுவதும் மெதுவாக நடந்து செல்லுங்கள். திடீரென இரைச்சல் சத்தம் அல்லது கிறீக் என்ற சத்தம் கேட்டால் அருகே இரகசிய கமரா போன்ற எலக்ட்ரானிக் பொருட்கள் இருக்கிறது என்று உணர்ந்து கொள்ளலாம்.

துணிக்கடையின் உடை மாற்றும் அறைக்குள் நுழைவதற்கு முன்னதாக ஸ்மாட்போனிலிருந்து போன் செய்து பாருங்கள். பின்னர், அந்த அறைக்குள் சென்றவுடன் மீண்டும் போன் செய்து பாருங்கள். பல முறை முயற்சித்தும் போன் போகவில்லை என்றால் கண்டிப்பாக அந்த அறையில் இரகசிய கமரா வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

மொபைல் செயலிகள்

இவற்றின் குறுக்கீடு காரணமாக உங்களுடைய செல்போன் சமிக்ஞைப் பரிமாற்றங்கள் தடை செய்யப்படுவதால்தான் போன் செய்ய முடிவதில்லை. தற்போதைய டிஜிட்டல் யுகத்தில் இது போன்ற கமராக்களைக் கண்டுபிடிக்கப் பல்வேறு மொபைல் செயலிகள் (Apps) உள்ளன. Anti Spy camera, RadarBot, iAmNotified, Spy camera detector, DontSpy எனப் பல செயலிகள் உள்ளன. ■

யாழ்ப்பாணத்து நவீன கவிதைகளில் உவமை

ம.பிரசாலினி

ஆரம்ப காலத்திலே ஓசை மரபுகளினை அடிப்படையாகக் கொண்டு கவிதைகள் எழுதப்பட்டன. எக்ஸ்ரா பவுண்ட், வொல்ட் விட்மன், டி.எஸ் எலியட் போன்றோர் யாப்புகளில் இருந்து கவிதைகளை விடுவித்தனர். யாப்பில் இருந்து விடுதலை பெற்ற கவிதைகள் புதுக் கவிதைகள் எனப்பட்டன. உருவ மாற்றத்ததைத் தொடர்ந்து உள்ள

டக்கத்திலும் மாற்றம் நிகழ்ந்தது. நவீன கவிதைகள் பிறந்தன. நவீன கவிதையின் முன்னோடியாகத் தமிழிலே பாரதியார் சுட்டப்படுகின்றார்.

"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது சொற் புதிது சோதி மிக்க நவ கவிதை" என்று பாரதியார் சுய பெருமை பேசியுள்ளார். நவீன கவிதைகளில் மரபு வழிப்பட்ட உவமைகளோடு வித்தியாசமான உவமைகளையும் காண முடியும். அந்த வகையில் யாழ்ப்பாணத்திலே அண்மைக் காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளில் நான் வாசித்த நவீன கவிதைகளில் உவமை குறித்த நுனிப்புல் மேய்கிறேன்.

"நான் நாயாகவும்
நாய் நானாகவும் இருக்கும்
மிகப் பிந்திய நிமிடங்களில்
நாய்களின் அதியுன்னத இசையை
என் புலன்களால் வேட்டையாடத் தொடங்கினேன்
நாய்களைப் போலவே அலைகிறது
என் அதியுன்னத இசை"

"புனிதத்தின் இசையை வேட்டையாடும் நாய்" என்ற தலைப்பிலமைந்த கவிதையில் சித்தாந்தன் மேற்கூறிய உவமையினைப் பயன்படுத்துகிறார். அதிகாரம் உருவாக்கிய புனிதமும் ஏதோ ஒரு கட் டத்தில் உடைபடும் : சாதாரண மக்களினுடைய வாழ்க்கையும் என்றோ ஒருநாள் நிச்சயம் தலைகீழாக மாறும். இயல்பினைக் காவு கொடுத்த வாழ்வின் மாயச் சதுரங்கத்தை, அனுபவ வரிகளால் சித்தாந் தன் "நாய்களைப் போல அலையும் அதியுன்னத இசை என உவமிக்கிறார்.

சக்கர வியூகம் என்ற தலைப்பில் த.அஜந்தகுமார் எழுதிய கவிதையின் வரிகள் பின்வருமாறு அமைகின்றன.

"சுபத்திரையின்
கண்கள் எங்கோ
பிரிக்க முடியாதவாறு நிலை குத்திவிட்டன
அர்ஜுனனின் வில்லைப் போலவே
உடலும் மனமும் வளைந்து விட்டது"

சமூக வலைத்தளங்களில் ஒன்றான முகநூல் வாழ்வினை த.அஜந்தகுமார் சக்கர வியூகம் எனக் குறிப்பிடுகின்றார். அர்ஜுனனின் மகனான அபிமன்யு சக்கர வியூகத்தில் அகப்பட்டே இறந்தான். அவனுக்கு சக்கர வியூகத்தை உடைத்தெறிந்து வெளியேறத் தெரியவில்லை. ஆனால் முகநூலில் தமது வாழ்வைத் தொலைத்த மனிதர்களுக்கு, சக்கர வியூகத்தை உடைக்கும் வழி தெரியும். ஆனாலும் அதற்குள்ளேயே சிக்கிக் கொள்கின்றனர். "அர்ஜுனனின் வில்லைப் போலவே" உவமை சிறப்பாக அமைந்துள்ளது.

"இருண்ட வானம்
தனது இரகசியங்களைத்
தன்னுள்ளே
புதைப்பதைப் போல
அழகின்
அத்தனை இரகசியங்களையும்
நீ உன்னுள்ளே
புதைக்கிறாய்" என்று "பூக்களின் சுய மரணம்" கவிதையில் யாத்ரிகன் குறிப்பிடுகிறார்.

பிறிதொன்றோடு போராடித் தோற்றுப் போன வெட்கத்திலே பூக்கள் தற் கொலை செய்வதாக யாத்ரிகன் குறிப்பிடுகின்றார். இக் கவிதையில் அழகின் அந்தரங்கத்தினைச் சொல்ல அழகான உவமையினை விளம்புகின்றார்.

ரஜிதா இராசரத்தினம் எழுதிய "கான வேட்கை" என்ற கவிதையிலும் நல்லதொரு உவமையினைக் காண முடிகிறது.

"நெடுநாளாய் நீங்கியிருந்த தலைவன்
அருகே வருகையில்
வெடுக்கென நாணி மலரும் அனைத்தும் போல்
வான தேவன் தூது வருகையில்
துளிர் விடும் மரங்களும்"

நீண்டகாலப் பிரிவின் பின் தலைவனைச் சந்திக்கும் தலைவியிடம் துளிர் விடும் நாணத்தினை, வான தேவனின் வருகையில் துளிர் விடும் மரங்களுடன் ஒப்பிடுகின்றார்.



"எந்தத் தூண்டிலிலும் சிக்காமல்
காலங்காலமாக தப்பிக்கின்ற
நீலம் போல
அர்த்தம் சுவறி ஈரலிக்கும்"

'உனக்குப் பிடித்த பெயர் ஒன்றைச் சூட்டிக் கொள்' என்ற தலைப்பிலமைந்த கவிதையில் இ.சு. முரளிதரன் மேற் குறிப்பிட்ட வரிகளை எழுதியுள்ளார். வலையிலும் தூண்டிலிலும் மீன்கள் சிக்கும் ஆனால் கடலின் நீலம் ஒரு போதும் சிக்காது. அது நழுவிச் செல்லும் கவிதையின் அர்த்தங்களுக்கு கவிஞர் கடலின் நீலத்தை உவமிக்கிறார். கவிதை உருவாக்கம் பற்றிய கவிதையாகவே இது அமைந்துள்ளது.

சி.ரமேஷ் எழுதிய "அவல நாடகத்தின் கடைசி அத்தியாயம்" என்ற கவிதையிலும் சிறந்த உவமையினைக் காணலாம்.

"ஒப்பனையற்ற வெளிரிச் சிறுத்த
என் தேகம்
குடுவைக்குள் நிறைந்திருக்கும்
வைனைப் போலக்
காயங்களால் படிந்திருந்தது"

இவ்வரிகளில் போர் குறித்த அவலத்தை கவிஞர் கூறுகின்றார். யுத்தத்தின் துன்பம் ஒவ்வொரு மனிதனின் அகத்தையும் வேரோடு சிதைக்கிறது. போரால் பாதிக்கப்பட்ட கவிஞனின் மனம் வைனுக்கு உவமானமாக அமைகிறது. பழங்களின் சிதைவே "வைன்" என உருப் பெறுகிறது. வைனும் காயங்கள் சுமந்ததுதான் என்பதைச் சிறப்பான உவமையால் கவிஞர் வலியுறுத்துகிறார்.

"ஓவியத்தின் கோடுகளின் நீளும் வாழ்ந்து போன வனின் குறிப்பு" என்ற கவிதையில் தானா விஷ்ணு சிறப்பான உவமையினைச் சொல்லியுள்ளார்.

"வாழ்வின் மீதான வேணவாவினை
நிர்க்கதிக்குள்ளாக்கும் போர் மீது கவிகிறது
மீள மீள எனது சாபம்
ஒரு குடுகுடுப்பைக்காரனின் வார்த்தைகள் போல"

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒருவன் இழந்து போன வாழ்வின் இனிமை மீளத் திரும்புமா? என ஏங்குகிறான். போர் இருள் சூழ்ந்த நிலையில் இளமைக் காலத்தின் ஒளியை விரும்புகிறான். திரும்பத் திரும்ப அனுபவிக்க வேண்டிய கொடூரத்தை தானா விஷ்ணு குடுகுடுப்பைக்காரனின் வார்த்தைகள் போல என்று உவமிக்கின்றார்.

"உறைந்து போன கண்கள்" என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் துவாரகன் சிறந்த உவமை ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

"சொற்கள் செத்துப் போன
கணங்கள் அவை
குப்பையில் தூக்கி வீசப்பட்ட
ஒரு பொம்மையைப் போலவே"

சுருட்டுப்புகையோடு கதை பேசுகின்ற "சொக்கன் அண்ணா" என்பவர் பனையால் விழுந்து இறந்து போன நேரத்திலே, கண்கள் மட்டும் திறந்திருந்தன. ஒவ்வொரு மரணத்திலும் கண்களின் மொழியினைக் கவிஞர் துவாரகன் உணர்கிறார். வார்த்தைகள் மரணித்த அந்த நேரத்தை "குப்பையில் தூக்கி வீசப்பட்ட ஒரு பொம்மை" என உவமிக்கின்றார்.என்னைக் கவர்ந்த நவீன கவிதைகளில் உவமை என்ற உத்தி எவ்வாறு அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளேன். பல தரப்பட்ட உணர்வுகளை உவமை என்ற உத்தியூடாக இந்தக் கவிஞர்கள் சிறப்பாகவே வெளிப்படுத்தியுள்ளனர். ■



தெரிந்த சினிமா தெரியாத சங்கதி 19

ரமணி

நாடக உலகில் இருந்து சினிமாவுக்குச் சென்று கலக்கியவர்களில் எம்.ஆர்.ராதாவும் ஒருவர். தமிழ்ச் சினிமாவில் கதாநாயகனுக்குக் கொடுத்த அதே மரியாதை எம்.ஆர்.ராதாவுக்கும் கொடுக்கப் பட்டது.

எம்.ஆர்.ராதாவின் தாயார் திட்டி விட்டதால் வீட்டைவிட்டு ஓடி சென்னை எழும்பூர் ரயில்வே ஸ்ரேஷனில் சுமைதூக்கும் வேலையை எம்.ஆர்.ராதா முதலில் பார்த்து வந்தார். அந்த நேரத்தில் தான் "ஆலந்தூர் டப்பி ரங்கசாமி நாயுடு" என்கின்ற நாடக முதலாளியுடன் அறிமுகம் கிடைத்தது. எம்.ஆர்.ராதாவின் வேலைத் திறமையைப் பார்த்த ரங்கசாமி நாயுடு அவரைக் கூட்டிக்கொண்டு சிதம்பரத்திற்கு பயணம் செய்தார். ரயில் கிளம்புவதற்கு முன்னால் எம்.ஆர்.ராதாவுக்கு நடிக்கும் ஆர்வம் இருக்கிறதா என்பதையும் உறுதி செய்து கொண்டார்.

பின்னர், நாடகக் குழுவில் ராதாவையும் சேர்த்துக் கொண்டார் ரங்கசாமி நாயுடு. அங்கு நடிப்பதற்கு ராதாவுக்குப் பல வேஷங்கள் தரப்பட்டன முக்கியமாக வயிற்றிற்கு சோறு கிடைத்தது. அரிச்சந்திரன் நாடகத்தில் லோகிதாசனாக வந்து "அம்மா பசிக்குது அப்பா பசிக்குது" என்று அழுது நடித்தார். அடுத்து நல்லதங்காள் நாடகத்தில் ஏழு குழந்தைகளில் ஒருவராக இருந்து கிணற்றில் விழுந்து சாகும் வேடம் போட்டு நடித்தார். ஒரு நாள் ராதாவின் பெற்றோர் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அவருக்கு நடிப்பின் மீது இருந்த அந்த ஆசை அவரை விட்டுப் போகவில்லை. பின்னர், மறுபடியும் வீட்டை விட்டு வெளியேறியவர் கூடவே தன்னுடைய தம்பியையும் மைசூருக்கு கூட்டிச் சென்றார். அங்கு சாமுண்ணா ஐயர் நாடகக் கம்பனி இருவருக்கும் நடிக்க வாய்ப்பு கொடுத்தார்கள். அங்கே நாடகம் நன்றாக நடிக்கவில்லை என்றால் அடி உதை தான் கிடைக்கும். இதையெல்லாம் அவருடைய தம்பியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, அதனால் நாடகக் கம்பனியை விட்டு தம்பி வெளியேறி விட்டார். எம்.ஆர்.ராதா நாடகம்தான் தன்னுடைய வாழ்க்கை என்பதில் தெளிவாக இருந்தார். அத்தகைய தெளிவுதான் இன்றைக்கு அவரை தமிழ் திரையுலகம் கொண்டாடுகிறது.

பின்னர், ஜெகன்நாதன் ஐயர் நாடக கம்பனியில் வேலை கிடைத்து மதுரை ஸ்ரீ பால மீன ரஞ்சனி சங்கீத சபாவில் எம்.ஆர்.ராதாவுக்கு நடிக்க அடுத்த வாய்ப்புக் கிடைத்தது. திரைப்படத் துறையில் பெரும்புகழ் பெற்ற பலரையும் உருவாக்கி விட்ட அந்தக் கம்பனி தான் எம்.ஆர்.ராதா என்கின்ற பெரிய கலைஞரையும் செதுக்கியது. இவருடைய நடிப்புத் திறமையைப் பார்த்த கம்பனி முதலாளி எம்.ஆர்.ராதாவைத் தன்னுடைய அன்புக்கு பாத்திரம் ஆக்கிக்கொண்டார். வெறும் நடிகராக இருந்த எம்.ஆர்.ராதா அப்பொழுது ஓட்டுநர், மெக்கானிக், எலக்ரீசியன் உள்ளிட்ட பல வேலைகளை எல்லாம் ராதாவிடம் நம்பிக் கொடுத்தார் முதலாளி. 5 ரூபாய் சம்பளத்தில் தொடங்கிய எம்.ஆர்.ராதாவின் நாடக வாழ்க்கை அப்பொழுது 25 ரூபாயாக உயர்ந்தது.

இப்படிப் போய்க் கொண்டிருந்த பயணத்தில் திடீரென ஒரு நாள் அதிர்ச்சி காத்திருந்தது. அரசாங்கம் போட்ட "தமாஷா வரி" அதாவது (Entertainment Tax) எல்லாம் கட்ட முடியாது எனச் சொல்லிவிட்டு கம்பனியைக் கலைத்து விட முடிவு செய்கிறார் ஜெகநாதன் ஐயர். பிறகு கம்பனியின் நிர்வாகம் அனைத்தும் நாகலிங்கம் செட்டியார் என்பவர் கையில் சென்றது. முதலாளி மாறினாலும் எம்.ஆர்.ராதா கம்பனியிலேயே தொடர்ந்தார். நாடகக் கம்பனி ஒரு முறை ஈரோட்டுக்குச் சென்றது. அங்கதான் ராதாவுக்குப் பெரியாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை மீது எம்.ஆர்.ராதாவுக்கு ஈர்ப்பு ஏற்படத் தொடங்கியது அதன்பிறகுதான். அந்த இடத்தில் ரவுடிகள் சிலரிடம் கைகலப்பு ஏற்பட்டதன் காரணமாக ராமலிங்க செட்டியார் ராதாவைச் சென்னைக்கு அனுப்பிவைத்து விட்டார்.

அப்போது "பொன்னுசாமி பிள்ளை" என்பவர் புதிய நாடகக் கம்பனி ஒன்றை ஆரம்பித்திருந்தார். ராதாவின் வருகை அவரை உற்சாகத்தின் உச்சியில் கொண்டு போய் நிற்கவைத்தது. உடனே அவரிடம் போய் பேசி கம்பனியில் சேர்ந்து விடுகிறார். அங்கு தான் அவருக்கு மனேஜர் பொறுப்புக் கிடைத்தது. இந்த சமயத்தில்தான் எம்.ஆர்.ராதாவுக்கு திருமணத்திற்கு பெண் பார்க்கத் தொடங்குகின்றனர். ஆனால், யாரும் இவருக்குப் பெண் கொடுக்க முன் வரவில்லை. காரணம் கூத்தாடிகளுக்கு எல்லாம் பொண்ணு கொடுக்க முடியாது என அனைவரும் மறுத்தனர். பின்னர், மனேஜர் பதவியை வைத்து விழுப்புரத்தைச் சேர்ந்த சரஸ்வதி என்ற பெண்ணை ராதா திருமணம் செய்து கொள்கிறார்.

எம்.ஆர். ராதா சுயமரியாதை கொண்டவர்.

இவர் நாடகம் நடிக்கும்போது இவருக்கு என்று தனி ரசிகர் பட்டாளம் உண்டு. இவர் நடிக்கும் நடிப்பை திரும்ப நடிக்கச் சொல்லி பலர் கேட்பார்கள். அப் பொழுது அவர் நடிக்க மறுத்துவிடுவார். காரணம், பாராட்டுகிறார்கள் என்பதற்காக ஒரு காட்சியை மீண்டும் நடிக்க முடியாது என்று மறுத்து விடுவார். விளைவு கம்பனி முதலாளிகளுடன் மோதல் உருவா னது. பிறகு டி.ஆர். மகாலிங்கம் உள்ளிட்ட தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து ஒரு தனி நாடகக் கம்பனி உருவாக்குகிறார். அந்தச் சமயத்தில் எம்.ஆர்.ராதாவுக்கு சினிமாவில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ராஜசேகரன் என்கின்ற பெயரில் சண்டைக் காட்சிகள் நிரம்பிய படத்திற்கு ஒன்று தயாராகிக் கொண்டிருந்தார். நாடகங்களில் சிறந்த அனுபவசாலியான இவருக்குத் திரைப்படம் எந்தவொரு சவாலையும் கொடுக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பிறகு படத்தின் இயக்குநருடன் புரிந்துணர்வு இல்லை, அதன் காரணமாக அந்த படம் அவருக்கு நன்றாக அமையவில்லை. முதல் படத்தில் எப்படி இருந்தாரோ அதே போல கடைசி வரை இருந்தார் எம்.ஆர்.ராதா. தன்னுடைய கொள்கையிலிருந்து மாறவில்லை. பொதுவாக நாடகத்தில் நடிப்பவர்கள் ரசிகர்களை மட்டுமே பார்த்துப் பேச வேண்டும். எந்த ஒரு காரணத்திற்கும் திரும்பி நின்றபடி பேசக்கூடாது அந்த மரபை அடியோடு உடைத்தெறிந்தார் எம்.ஆர்.ராதா. ஒரு நாடகக் காட்சி ஒன்றில் முழுக்க முழுக்க முதுகைக் காட்டி நின்றபடியே வசனம் பேசினார். அப்போது அவருடைய முதுகுக்குப் பதிலாக அவருடைய சுருள் முடி நடித்தது ரசிகர்களைக் கொண்டாட செய்தது. அந்த நாடகத்தை அரங்கத்திற்கு வந்து பார்த்துவிட்டு, தான் பணியாற்றிய பத்திரிகையில் பாராட்டி எழுதினார் ஒரு அரசியல் தலைவர் அவர்தான் அண்ணா என்கின்ற சி.என்.அண்ணாதுரை.

எம்.ஆர். ராதா நடித்த முதல் படம் 'ராஜ சேகரன்ய (1937)', கடைசிப் படம் 'பஞ்சா மிர்தம்ய (1979)', சினிமா வாய்ப்பு கிடைத்ததும் பலரும் நாடகத்தை விட்டுவிடுவார்கள். ஆனால், சினிமா - நாடகம் இரண்டையும் விடாமல் வைத்திருந்தவர் இவர் மட்டும்தான்!

உலக பாட்டாளி மக்களே ஒன்று சேருங்கள் என்று சொல்லி, அரிவாள் சுத்தியல் சின்னத்தைக் காட்டுவதைத் தனது ஆரம்ப கால நாடகங்களில் வழக்கமாக வைத்திருந்த ராதா, அதன் பிறகு திராவிடர் கழகக் கொடியையும் பெரியார் படத்தையும் காட்டி விட்டுத்தான் நாடகத்தை ஆரம்பிப்பார்!

ரத்தக்கண்ணீர் நாடகம் 3 ஆயிரத்து 21 நாட்களும் தூக்குமேடை நாடகம் 800 நாட்களும் லட்சுமி காந்தன் நாடகம் 760 நாட்களும் நடைபெற்றன

ப்ளைமௌத், அம்பாஸடர், இம்பாலா எனப் பல பல கார்களை வைத்திருந்தார். இம்பாலாவில் ஒரு நாள் எருமை மாட்டுக்கு வைக்கோல் எடுத்துச் சென்றதைப் பார்த்துப்பலரும் ஆச்சர்யப்பட்டார்கள்.

'நமக்குப் பயன்படுறதுக்குத்தானப்பா கார். தகரத்துக்கு கலர் பெயின்ட் அடிச்சதுக்காக, தலையிலயா தூக்கிட்டுப்போக முடியும்? என்று கேட்டார்!

நாடகம் நடந்துகொண்டு இருக்கும்போது செருப்பு, கல், அழுகிய முட்டை போன்றவை எதிரிகளால் வீசப்படுவது வாடிக்கை அந்தப் பொருட்களை மறுநாள் கண்காட்சியாக வைப்பார். 'நேற்று பேடிகள் விட்டுச் சென்ற சாமான்கள் என்று அதில் எழுதிவைப்பார்!

எம்.ஜி.ஆரை 'ராமச்சந்திரா என்றும் சிவாஜியை 'கணேசா' என்றும் அழைப்பார். மற்ற நடிகர்களை எல்லாம் வாடா, போடாதான்!

இவரது நாடகங்களைத் தடை செய்வதற்காகவே காங்கிரஸ் ஆட்சி நாடகத் தடைச் சட்டம் கொண்டு வந்தது. அந்தச் சட்டம் விவாதத்துக்கு வந்தபோது டவுசர், பணியனோடு சபை வளாகத்துக்குப் போய் விட்டார். ஒரு நாடகத்தைத் தடை செய்தால், அதையே பெயர் மாற்றி மறுநாள் போடுவார்!

என்.எஸ். கிருஷ்ணனைச் சுடுவதற்காக உளுந்தூர் பேட்டையில் கள்ளத் துப்பாக்கி வாங்கினார். விஷயம் தெரிந்து, 'நண்பன் கையால் சாகக் கொடுத்து வைத்திருக்கணும்' என்று என்.எஸ்.கே சொன்னதும் மனம் மாறி கட்டி அணைத்தார் ராதா. திருப்பதி கோயிலுக்கு குண்டு வைக்கப் போய் வெடி மருந்தைக் காயவைத்து, அது வெடித்துச் சிறுவிபத்தான சம்பவமும் உண்டு!

எம்.ஜி.ஆரை அவரது ராமா வரம் தோட்டத்தில் சுட்டு, தானும் சுட்டுக்கொண்டதாகப் பதிவான வழக்கில் ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை தரப்பட்டது.

'நண்பர்கள் ரெண்டு பேரும் துப்பாக்கியை வெச்சு விளையாடிக் கிட்டோம். என்னடா துப்பாக்கி கண்டு

பிடிக்கிறானுங்க. நானும் சாகலை... ராமச்சந்திரனும் சாகலை. இதுல எல்லாமா டூப்ளிகேட் வர்றது? என்று அதற்கும் காமெடி விளக்கம் கொடுத்தார்!

நான்கரை ஆண்டு காலம் சென்னை மத்திய சிறையில் இருந்தார் அவர் மீது ஆர்வம்கொண்ட வராகக் காட்டிக் கொண்ட கைதி ஒருவர், ஒரு நாள் சமையல் செய்து கொடுத்தார். ராதா வளர்த்த பூனை அதை முதலில் சாப்பிட்டதும் சுருண்டு விழுந்து செத்துப்போனது. ஆய்வுக்கு அனுப்பப்பட்ட அந்த உணவில், விஷம் கலக்கப்பட்டு இருந்தது பின்னால் தெரிய வந்தது!

'அடியே காந்தா... ஃபாரின்ல நீராவியில் கப்பல் விடுறான்... நீங்க நீராவியில புட்டு செஞ்சு வயித்துக்குள்ள விடுறீங்கள்,

'ஊருக்கு ஒரு லீடர்... அவனவனுக்கு ஒரு கொள்கை. அவனவனுக்கு ஒரு பட்டினிப் பட்டாளம்... நான்சென்ஸ், இப்படி ராதாவின் வார்த்தைகளைவைத்தே மிமிக்ரி நடிகர் ஆனவர்கள் அதிகம்!

இராமாயணத்தை அதிகபடியாகக் கிண்டலடித்தவர். 'கீமாயணம்' என்று நாடகம் போட்டார். ராமன் வேடத்தில் இருக்கும் போதே கைது செய்தார்கள். பக்தர்கள் மனம் புண்படுகிறது என்று வழக்குப் போட்டார்கள். மனம் புண்படுபவர்கள் யாரும் வர வேண்டாம்' என்று விளம்பரம் கொடுத்தார்!

■

யாழ் சத்யா

தொடர் கதை

கல்யாணக்கனவு

கனவு 24

வைஷாலியை அவளது வீட்டில் இறக்கி விட்டு விட்டுத் தனது வீட்டிற்குத் திரும்பிய சஞ்சயனிற்கு, இத்தனை வருட தனது மனக் கவலையை உயிர்த் தோழியிடம் பகிர்ந்து இருந்ததில் கொஞ்சம் மனம் ஆறுதல் அடைந்திருந்தாலும் அவளின் வாழ்வு சீரற்றுப் போனதன் காரணம் புரியாமல் இதயம் கனத்தது.

உடை மாற்றி விட்டு அடுத்த நாள் வேலைக்குரிய சில ஆயத்தங்களைச் செய்வதற்காக மடிக் கணணியை உயிர்ப்பித்தவன் புகைப்படங்கள் இருந்த போல்டரைத் திறந்து பார்த்தான். அதில் ரலன்ட் ட்ரிப் என்றிருந்த போல்டரைத் திறந்தவன் அவற்றில் இருந்த புகைப்படங்களை ஒவ்வொன்றாகப் பார்க்க ஆரம்பித்தான்.

ரலன்ட் ரியூசன் சென்டரால் சுற்றுலா சென்ற போது எடுத்த புகைப்படங்களை ஸ்கான் செய்து கணணியில் ஏற்றி வைத்திருந்தான். நல்லூருக்கு முன்னால் அனைவரும் நின்று எடுத்த குழுப் புகைப்படங்கள், கசூரினா கடற்கரையில் விளையாடும் போது எடுத்த புகைப்படங்கள், முரளிதரன் பிறந்தநாள் கொண்டாடிய போது எடுத்த புகைப்படங்கள் என்று அனைத்தையும் பார்த்த போது அவன் நினைவுகள் அன்றைய நாளை நோக்கிச் சென்றது.

ஆண்களும் பெண்களுமாக இவர்கள் வகுப்பைச் சேர்ந்த முப்பது மாணவ, மாணவிகள் அனைவரையும் ஒரு மினிபஸ்சில் ஏற்றி அழைத்துச் சென்றிருந்தனர். நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக அந்தக் காலத்தில் சுற்றுலா செல்வது என்றாலே ஒரு அரிதான விடயம். அப்படியிருக்கும் போது மாணவர்களின் கொண்டாட்டத்திற்குக் குறைவேது?

நல்லூர் கந்தசுவாமி கோவிலிற்குச் சென்று வழிபட்டு விட்டுப் பின்னர், காரைநகர் சிவன் கோவிலையும் வணங்கி கசூரினா கடற்கரையை அடைந்தனர். கடற்கரையைக் கண்டதுமே மாணவர்கள் தத்தமது நண்பர் குழுக்களோடு விளையாட ஆரம்பிக்க சஞ்சயன் பொறுப்பாய் கூட்டி வந்த ஒரு ஆசிரியரிடம் சென்று முரளிதரனின் பிறந்தநாள் பற்றிய விபரம் சொல்லி கேக் வாங்கி வந்திருப்பதைக் கூறினான்.

அவரும் மாணவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் கூடச் செய்து முரளிதரனை அழைத்து கேக்கை வெட்டச் சொன்னார். மாணவர்கள் வட்டமாகக் குழுமி நின்று பிறந்தநாள் வாழ்த்துப் பாட, சஞ்சயன் கேக்கைக் கைகளில் ஏந்தி வைத்திருக்க முரளி மெழுகுதிரியை ஊதி அணைத்து கேக்கை வெட்டி அருகில் நின்றிருந்த நண்பர்களுக்கு ஊட்டினான்.

உண்மையில் கேக்கை வாங்கிக் கொண்டு வந்து சஞ்சயனிடம் கொடுத்திருந்த வைஷாலியோ தனக்கும் இதற்கும் எதுவித சம்பந்தமும் இல்லாத தொனியில் சற்று எட்டவே நின்றாள் எனலாம். முரளி கேக்கைக் கொண்டு வந்து இவளிடம் நீட்டிய போதும் மற்றைய மாணவர்களைப் போலவே பிறந்தநாள் வாழ்த்து கூறி விட்டு சிறு துண்டொன்றை எடுத்துக் கொண்டாள். ஆனால், இத்தனைக்கும் முரளியின் கண்களை நோக்கவில்லை. அவனைக் கவனமாய் தவிர்த்தாள்.

கேக் வெட்டி முடிய மறுபடியும் மாணவர்கள் கடலில் கால் நனைப்பதும் பந்து விளையாடுவதும் ஓடிப் பிடித்து விளையாடுவதுமாக இருந்தார்கள். பத்துப் பத்து மாணவர்களாய் அரை மணி நேரம் கடலிற்குள் மோட்டார் படகொன்றில் வேறு கூட்டிச் செல்ல மாணவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

சில மாணவர்கள் படகில் சென்றிருக்க வைஷாலி தனது நண்பிகளோடு சேர்ந்து கரையில் நின்று அலைகள் வரும் போது கரைக்கு ஓடுவதும் அலைகள் உள்ளே செல்ல கடலை நோக்கி ஓடுவதுமாக விளையாடிக் கொண்டிருந்தாள். சிறிது தூரத்தில் பட்டுப் போயிருந்த ஒரு சவுக்கு மர அடி மரத்தில் ஒற்றைக் காலை பின்புறமாக ஊன்றி அந்த அடிக் கட்டையில் சாய்ந்தவாறு நின்று வைஷாலியையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் முரளிதரன்.

இதனை அவதானித்தபடியே அவனிடத்தில் வந்த சஞ்சயன், வண்ணக் காகிதத்தில் அழகாய் பொதி செய்யப்பட்ட ஒரு பரிசுப் பொதியை முரளியிடம் கொடுத்தான்.

“ஹப்பி பேர்த்டே நண்பா...! சின்ன கிவ்ட் ஒன்று...”

“தாங்ஸ் சஞ்சு...!”

கூறிக் கொண்டே மனதில் உதித்த ஆவல் முகத்தில் தெரிந்திடாது மிகக் கவனமாய் அந்தப் பரிசுப் பொதியைப் பிரித்துப் பார்த்தான் முரளிதரன்.

சொந்தமாகத் தயாரித்த ஒரு பிறந்தநாள் வாழ்த்து அட்டை ஒன்றில் முத்து முத்தான கையெழுத்தில் பிறந்தநாள் வாழ்த்துகள் என்று எழுதியிருந்ததே தவிர யார் என்ற விபரம் இல்லை. அத்தோடு இவர்கள் மூன்றாம் வகுப்பில் நடித்த அந்த ஆங்கிலப் பாடல் காட்சியொன்றின் புகைப்படம் ஒன்று அழகான போட்டோ பிரேமில் போடப்பட்டிருந்தது. வைஷாலியும் முரளிதரனும் நடுநாயகமாக நின்றிருக்க சஞ்சயனும் மற்றைய நண்பர்களும் இவர்கள் இருவரின் பின்னாலும் நின்றிருந்தார்கள்.

அந்தப் புகைப்படத்தைப் பார்த்தவன் பார்வை உடனடியாக ஒரு நொடி வைஷாலி மீது படிந்து மீண்டது.

“ரொம்ப தாங்ஸ்டா சஞ்சு... ரொம்ப அழகான கிவ்ட் தந்திருக்கிறாய்... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.”

முரளிதரன் எங்கே முகத்தில் வீசி எறிந்து விடுவானோ என்று சிறு பயம் சஞ்சயன் மனதில் இருக்கத்தான் செய்தது. ஆனால், முரளிதரனின் இந்தப் பதிலில் வைஷாலி மீது அவனுக்கும் ஒரு ஈடுபாடு வந்து விட்டதை உணர்ந்து கொண்ட சஞ்சயன் மனது மகிழ்ச்சியில் பூரித்தது.

அன்றைய நாளின் பின்னர் முரளிதரன் வைஷாலியைப் பார்க்கும் பார்வையில் ஒரு மாற்றம் வந்தது.

ஒரு நாள் சஞ்சயனிடம் வந்தவன்,

“சஞ்சு...! உன்ர வீட்டை செல்வராஜா சேர் இங்கிலிஷ் கிளாஸ் வைக்கிறவர் எல்லோ... நானும் வரட்டே...”

கேட்டவனை அதிர்ச்சியுடனும் ஆச்சரியத்துடனும் பார்த்தான் சஞ்சயன். காரணம், முரளிதரனுக்கு ஆங்கிலத்தில் தொண்ணூற்றைந்துக்குக் குறைய புள்ளிகள் வந்ததாகச் சரித்திரம் இல்லை. அப்படியிருக்க இவனுக்கு எதற்கு தனிப்பட்ட வகுப்பு என்று எண்ணியவன் அதை வெளியே காட்டாமல்,

“அதுக்கென்ன முரளி... தாராளமாக வாடா...” என்றான். ஆனால், முரளிதரன் ஆங்கில வகுப்பிற்கு வர ஆரம்பித்தது வைஷாலி, சஞ்சயனுக்கிடையேயான ஒரு இடைவெளியை கொஞ்சம் கொஞ்சமாக உண்டு பண்ண ஆரம்பித்தது. அவர்கள் அன்பில் மாற்றமில்லாது இருந்தாலும் அவர்கள் பேசிப் பழகும் நேரம் வெகுவாகக் குறைந்தது. முரளிதரன் முன்னால் முன்பு போல இலகுவாக இருவராலும் பேசிக் கொள்ள முடிவதில்லை.

வைஷாலி தான் எடுத்த தீர்மானத்தை மீறாதவளாய் முரளியோடு எந்தப் பேச்சு வார்த்தையும் வைத்துக் கொள்வதில்லை. அவன் ஏதாவது கேட்டால் கூட இவள் ஒற்றை சொல்லில் பதிலளித்து விட்டு அமைதியாக இருந்து கொள்வாள். எதிரே அமர்ந்திருக்கும் முரளிதரன் பார்வை தன்னை அடிக்கடி துளைத்தெடுப்பதை முகத்தை நிமிர்ந்து பார்க்காமலேயே உணர்ந்து கொண்டாலும் வைஷாலி இன்னொரு தடவை முரளிதரனிடம் திட்டு வாங்கி அவமானப்படத் தயாரில்லை. அதனால் முரளிதரனோடு பழகும் விதத்தில் மிகக் கவனமாகத்தான் இருந்தாள். ஆனால், வைஷாலி முரளிதரன் வார்த்தைகள் தந்த அதிர்ச்சியில் கண்ணீர் விடும் நாளும் வந்தது.

பேதையவள் அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டாளா? இல்லை துவண்டு போனாளா?

அவள் கனவு நனவாகுமா...?

சில மாணவர்கள் படகில் சென்றிருக்க வைஷாலி தனது நண்பிகளோடு சேர்ந்து கரையில் நின்று அலைகள் வரும் போது கரைக்கு ஓடுவதும் அலைகள் உள்ளே செல்ல கடலை நோக்கி ஓடுவதுமாக விளையாடிக் கொண்டிருந்தாள். சிறிது தூரத்தில் பட்டுப் போயிருந்த ஒரு சவுக்கு மர அடி மரத்தில் ஒற்றைக் காலை பின்புறமாக ஊன்றி அந்த அடிக் கட்டையில் சாய்ந்தவாறு நின்று வைஷாலியையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் முரளிதரன்.

சிறுகதை

மைனா

ஆதவன்

உணவகத்தின் நிர்வாகியும் பலதடவை அவரின் எண்ணுக்கு அழைத்தும் பயனில்லை. வேலைக்கு வரவில்லை என்றால் முதலே சொல்லும் அம்மணி பெனி விடுப்பு எடுக்கும் தகவலை யாருக்கும் செல்லவில்லை. இது புதிதாக இருந்தது. நிர்வாகியும் வேலைசெய்பவர்களும் அவரை பரிவுடன் நடத்துவார்கள். ஆனால், அம்மணி பெனி பெரியளவில் அவர்களைக் கண்டு கொள்ளமாட்டார். தானுண்டு தன் வேலை என்று வந்து போவார்.

நிர்வாகியும் ஒரு உதவியாளரை அழைத்துக் கொண்டு அவரின் வீட்டுக்கு விரைந்தார். ஓரறை வீடுகளுள்ள அடுக்குமாடிக் கட்டடம். முதியவர்களுக்கு பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது.

அம்மணி பெனியின் வீடு ஐந்தாம் மாடியில் இருந்தது. வாசலுக்கு அருகில் செந்நிறப் பெட்டியில் புத்தர் சிலை நின்று வழிபடும் உயரத்தில் வைத்து அலங்காரம் செய்திருந்தாலும் புதிதாக சாம்பிராணிக் குச்சி பற்ற வைத்த அடையாளம் இல்லை. வெறும் சாம்பல் படையாகக் கிடந்தது.

வெளிக்கதவைத் தட்டிப் பார்த்தார்கள் எந்தப் பதிலும் வரவில்லை. இருவரும் ஆளையாள் பார்த்தனர். முகங்களில் கலவரம் தொற்றிக்கொண்டது. ஏற்கெனவே தனிமையில் தங்கியிருந்த சில முதியவர்கள் இறந்த சம்பவங்கள் அவர்களுக்கு வந்திருக்கலாம். கடந்த நான்கு நாட்களாக அம்மணி பெனி வேலைக்கு வராததால் சந்தேகம் இன்னும் வலுத்தது.

நிர்வாகி கைபேசியை எடுத்து அவசர தொடர்பு இலக்கத்துக்கு அழைப்பை எடுத்தார். அவரின் உள்மனம் ஏதும் தப்பாக நடக்கக் கூடாது என்று வேண்டிக்கொண்டது.

சிங்கப்பூரில் அங் மோ கியோ அவென்யூ 3 இல் உள்ள உணவகம். பரபரப்பான காலையில் எழுபத்தைந்து வயது அம்மணி பெனி சாப்பாட்டு தட்டுகள் தேநீர் குவளைகளை எடுத்துக்கொண்டும் மேசையில் கொட்டியிருந்த உணவுகள் தேநீரக் கறைகளை துடைப்பது என்று பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார். ஓரமாக கப்புகளில் பொருத்தி இருந்த காற்றாடிகளும் அவருக்குப் போட்டியாக சுழன்று இரண்டு புறமும் பக்கவாட்டில் அரைவட்டமாகக் காற்றை ஊதிக் கொண்டிருந்தது. நேற்றும் இன்றும் இதுவரை அதன் தொந்தரவு இல்லாமல் இருப்பது அவருக்கு ஏதோ மாதிரி உறுத்தியதை உணர்கிறார். அவரின் சுருக்கம் விழுந்த சருமம் பல கரும் பொட்டுகளாக மறைகளை தாங்கியிருந்தது. முழங்காலுக்குக் கீழே கால்கள் வெளிச் சென்று உள்வளைந்து இருந்தது நடக்கும் போது சற்று இழுத்து நடந்தார். வழமையாக வரும் வாடிக்கையாளர்களில் சிலர் அவருடன் மனம் விட்டுப் பேசியிருப்பதால் அவர்களைப் பார்த்து புன்முறுவல் செய்யவும் மறக்கவில்லை.

சுற்றும் முற்றும் பார்வையை சுழற்றிக் கொண்டே தனது வேலையைப் பார்த்தார். நேற்று நிம்மதியாக இருந்தது. கடந்த சில மாதங்கள் வளர்ந்த உறவு என்பதை விட உபத்திரம்தான். இன்று ஏனோ அதை இழந்தது போல ஏக்கம் துளிர்விட தொடங்கி விட்டது. தொடர் தொந்தரவுகளும் நம்மையறியாமல் அதன் மேல் பாசத்தை வளர்ப்பது போல அவரின் நிலை. பலவருடங்கள் நெருக்கத்திற்கும் அன்புக்கும் ஏங்கிய ஜீவன் அல்லவா? அவருக்கு இப்போ ஏதோ ஒன்றைப் பறி கொடுத்த உணர்வு. புது உறவை இலகுவில் இழப்பதை விரும்பவில்லை. உள்ளம் பரிதவித்தது. கடவுள் மேலும் தன்னைச் சோதிப்பதாக எண்ணித் திட்டினார்.

சில மாதங்களுக்கு முன் ஒரு கால் முறிந்த மைனா ஒன்று இந்த இடத்தில் தென்பட்டது. அதன் கூட்டத்தை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும். தனி மைனா பார்ப்பது சகுனப்பிழை என்று ஒரு நம்பிக்கை பலரிடம் இருக்கு. இது தனியாகவே உணவகம் அருகில் காத்திருந்தது. அதுவரை உணவுக்கு அலைந்து திரிந்ததற்கு இந்த வாய்ப்பு பெரிய சந்தோஷம். சோடி மைனாவும் அதை உதாசீனம் செய்திருக்க வேண்டும்.

ஒவ்வொருதரும் சாப்பிட்டு முடியும் வரை காத்திருக்கும். அவர்கள் எழுந்ததும் எக்கித் தாவி பறந்து மேசையில் விழுந்ததும், தட்டில் இருந்த மிச்சத்தையும் கொத்தித் தின்ன அவசரப்படும். முதல் தரம் தின்னும் போது அம்மணி பெனி துவாயால் அடித்தது நினைவுக்கு வரும். எதிர்பாராமல் விழுந்த அடியில் முறிந்த காலுடன் அந்த மைனா நீண்ட தூரம் போகாமல் அங்கேயே தங்கிவிட்டது.

முடிந்த வரை விரைவாக உண்ணத் தொடங்கிடும். அப்போது சிதறும் உணவுகள் மேசையிலும் தரையிலும் கொட்டுவது அம்மணி பெனிவுக்கு மேலும் சினத்தைக் கொடுக்கும். அவரின் கோபம் கட் டுக் கடங்காமல் பெருகி “ஓ ஓ” என்ற உரத்த குரலில் கலைப்பது வாடிக்கையானது. இந்தச் சத்தம் புதிதாக சாப்பிட வருபவர்களைத் திடுக்கிட வைக்கும். சிலர் அவரில் பரிதாபப்பட்டு தாமும் சேர்ந்து கத்திக் கூப்பாடு போடுவது அந்த இடத்தை கலகலப்பாக்கும்.

மற்ற மைனாக்களுடன் ஒப்பிடும் போது முறிந்த காலை இழுத்துத்தாவும் இந்த மைனாவை இலகுவாக அடையாளம் கண்டு கொண்டார். தான் அடித்ததால்தான் அதற்கு இந்த நிலமை என்பதை அவர் அறியவில்லை போலும். ஆனால், தொடர்ச்சியாகத் தரும் தொந்தரவு இன்னும் அதிகமாகியது. எப்படி தடுப்பது என்று தெரியாமல் முழித்தார்.

அதன் தாக்குதலின் போக்கு வேறு மாறிக்கொண்டிருந்தது. உணவுத் தட்டுக்களை எடுத்து மீதம் உள்ளதை ராக்கில் மாட்டியிருந்த நெகிழி பையில் போட்டு மேலே அடுக்கும்வரை பார்த்து அவர் மற்ற மேசைக்குப் போகும் வரை காத்திருக்கும். அவர் நகர்ந்ததும் வெடுக்கென்று பாய்ந்து மேலே அடுக்கிய தட்டுக்களில் உள்ள உணவுப்பருக்கைகளைக் கொத்தும்.

காவல்துறை அதிகாரிகள் வேகமாக கதவைத் திறந்து உள்ளே சென்றார்கள். படுக்கை அறை திறந்திருந்தது. சமையல் கட்டில் இருந்து பல கரப்பான் பூச்சிகள் குறுக்கும் மறுக்கும் ஓடியது நிர்வாகிக்கும் உதவியாளருக்கும் கிலியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவர்களின் கைகள் நடுங்கின. வீட்டில் எந்த நடமாட்டமும் இல்லை. அறையிலும் அவர் இல்லை. காவல்துறை அதிகாரிகளின் பார்வை இவர்கள் இருவர் மேலும் திரும்பியது.

“ஏன் நான்கு நாட்கள் வேலைக்கு வராத அம்மணி பெனி பற்றி முதலே அறிவிக்கவில்லை? மூத்த அதிகாரி கேட்டார்”. “வயதானவர் சில வேளைகளில் இரண்டு மூன்று நாட்கள் உடம்பு முடியாவிட்டால் விடுப்பு எடுப்பார்”

“உங்களுக்கு அறிவித்தாரா?” “இல்லை” இந்தக் பதிலைக் கேட்ட அதிகாரியின் முகம் மாறியது. கண்களில் கோபம் ஏறிக்கொண்டிருந்தது. மற்ற அதிகாரிகள் வீட்டை சல்லடை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அம்மணி பெனியின் உறவினர்கள் யாரையாவது தெரியுமா? அதிகாரி தொடர்ந்தார்.

“மகன் ஒருவர் இருக்கிறார் அவரின் கைபேசிக்கு காலையில் தொடர்பு கொண்டேன். அது அணைக்கப்பட்டிருந்தது.” “வேலை செய்யும் இடத்தில் அவருடன் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டதா?”

“இதுவரை அப்படி நடந்ததில்லை.”

“கடைசி நாள் ஏதாவது சம்பவம் நடந்த ஞாபகம் இருக்கா?”

“அப்படித் தெரியவில்லை” என்ற நிர்வாகி உதவியாளனைப் பார்த்து “உனக்கு ஏதாவது தெரியுமா” என்று கேட்டார். அவன் கொஞ்சம் தயங்கினான் பிறகு “ஆம் அன்றைக்கு வழமையா வீடு போகிற நேரத்தையும் தாண்டி நீண்ட நேரம் அங்கேயே இருந்தவர். முகம் சோபை இழந்திருந்தது அழுதிருப்பார் போல”

அவன் சொல்லி முடிக்கவும் காவல்துறை அதிகாரிக்கு ஒரு அழைப்பு வந்தது. ஓரமாகப் போய் ஏதோ பேசியவர் முகத்தில் மலர்ச்சி.

“பொருட்களை அந்தந்த இடத்தில் இருந்த மாதிரியே வைத்து விட்டு கதவைப் பூட்டி விடுங்கள்” என்று உத்தரவிட்டவர் நிர்வாகியிடம் திரும்பினார்.

“அம்மணி பெனி வைத்திய சாலையில் இருக்கிறார். வலது கால் எலும்பு முறிந்து விட்டது என்று அதற்கு சிகிச்சை எடுக்கிறார்”

இவர்கள் இருவரும் ஆளையாள் பார்த்தனர். அந்த நொண்டி மைனாவின் நினைப்பு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

பின்னேரம் உணவகத்தில் கூட்டம் அதிகம் இல்லை. சாவதானமாக அம்மணி பெனி உணவகத்தின் ஓரமாக புகைப்பிடிக்கும் கூடத்தை ஒட்டி அமர்ந்திருந்தார். வாயில் சிகரெட் ஒன்று அரைவாசி அளவில் புகைந்தது. மனத்தில் நொண்டி மைனா எங்கே போயிருக்கும் என்ற கவலை முகத்திலும் பிரதிபலிக்க சிகரெட்டை உன்னி இழுத்து பெருமூச்சோடு புகையை ஊதினார். கை விரல்களில் முதுமைக்கே உரிய சீரான சிறிய நடுக்கம்.

அப்போது அந்த கெட்ட வாடை சிகரெட் மணத்தை மீறி நாசிக்கு அடித்தது. இறந்த எலிகள் மணத்தை பலதடவை அருகில் மழைநீர் வடியும் வாய்க்காலில் இருந்து வந்ததை அறிவார். ஆனால் இந்த மணம் வித்தியாசமாக இருந்தது.

எழுந்தார், அருகில் இருந்த மரங்களின் அடியில் புத்தரையில் சருகுகளை காலால் தட்டித் தேடினார். அங்கே வரிசையாக பல சிறிய மரங்கள் இருந்தன. இடையில் சற்று பெரிய மரங்கள் குடை விரித்து நிழல் பரப்பி நின்றன.

காலில் ஏதோ தட்டுப்பட இலையான்கள் “கொய்” என்ற இரைச்சலுடன் பறந்து ஓட சிலதுகள் அவரின் முகத்தை நோக்கிப் பறந்து வந்தது. கைகளால் தட்டிவிட்டு மூக்கையும் வாயையும் பொத்தினார். எறும்புகள் மொய்த்த படி பாதி உடல் சிதைத்து கிடந்தது அந்த தொந்தரவு. அதையே பார்த்துக் கொண்டு நின்ற அம்மணி பெனியின் கண்கள் கலங்கியிருந்தது. இப்போது தனது மூக்கையும் வாயையும் மூட மறந்திருந்தார். ■

இந்திய கலைஞர்களுடன் கைகோர்த்த 'கனவு தேவதை'

ராசிக் நபாயிஸ்

இலங்கையின் முன்னணி யூடியுப் தளங்களில் ஒன்றான "ரெப் சிலோன்" பல்வேறு வர வேற்கத்தக்க பாடல்களைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. இவற்றுள் பல பாடல்கள் இன்று வரை ட்ரெண்டிங்கில் உள்ளது. அத்தோடு மில்லியன் கணக்கான பார்வையாளர்களையும் கடந்துள்ளது.

இதுவரை உள்ளூர் கலைஞர்களுடன் இணைந்து பயணித்த "ரெப் சிலோன்" முதன் முறையாக இந்தியக் கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காகக் கடந்த மார்ச் மாதம் இந்தியா சென்றனர். சூப்பர் சிங்கர் புகழ் மானசியுடன் இணைந்து பணியாற்றிய "கனவு தேவதை" என்ற பாடலினைக் கடந்த 10 ஆம் திகதி அன்று தங்கள் யூடியுப் தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

"கனவு தேவதை" என்ற தலைப்பிற்கு ஏற்றவாறு காதல், ஈழத்தின் அழகு, தமிழின் பெருமைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் இப்பாடலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் மிக அழகான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கர்னாடிக், மெலோடி, ரெப் ஆகிய மூன்றையும் ஒரே பாடலில் அடக்கிய வரிகள் இப்பாடலின் தரத்தை வெளிப்படுத்துகிறது. திசோன் விஜயமோகனின் இசை கேட்பதற்கு ரம்மியமாக உள்ளது. வாகீசன் இராசையாவின் அனல் பறக்கும் வரிகளை மானசி இனிமையான குரலில் பாடி உள்ளார்.

அட்விக் உதயகுமாரின் நடிப்புக் காட்சி மேலும் வலுவூட்டுகின்றது. இயக்கம், ஒளித்தொகுப்பு ரெஜி செல்வராசா.

ஒக்டபட்பானு பாடலுக்கான ஒலிக்கலவை பத்மயன். விளம்பர வடிவமைப்பு மற்றும் மேம்படுத்தல்களை மதுஸ் ஜே.எம் செய்துள்ளார். இப்படிப்பட்ட ஒரு பெரிய படைப்பினைச் செய்வதற்கு ஊன்று கோலாக தயாரிப்பாளர்களான கனடா தமிழ் பசங்க நிறுவனத்தின் தேனுசன், சிந்துசன் ஆகியோர் கைகோர்த்திருக்கிறார்கள்.

கனவு தேவதைப் பாடல் யூடியுப் தளத்தில் ஆறு நாட்களில் 71000 பார்வையாளர்களைக் கடந்து சமூக வலைத்தளங்களில் ட்ரெண்டிங்கில் உள்ளது.

நியூஸ்லாந்தில் தமிழருக்கு உயரிய விருது

நியூஸ்லாந்தின் உயரிய விருதொன்று தமிழர் ஒருவருக்குக் கிடைத்துள்ளது. தேசத்துக்குச் சேவையாற்றியவர்களைக் கௌரவிக்கும் வகையில் வருடந்தோறும் உயர்விருதுகள் அறிவிக்கப்படுகின்றன. சமூகசேவை, கல்வி, சுகாதாரம், அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலான பங்களிப்புக்களே இவ்வாறாகக் கௌரவிக்கப்படுகின்றன.

ஆக்லாந்து வாழ் தமிழரான ஜோர்ஜ் அருளானந்தம் ஆற்றுகின்ற சமூகப்பணிகளுக்காக, நியூஸ்லாந்தின் உயரிய விருதொன்று வழங்கி 2022 ஆம் ஆண்டில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நியூஸ்லாந்திற்கு தமிழர் புலம்பெயர ஆரம்பித்து சுமார் அரைநூற்றாண்டு கடந்திருக்கின்றது. கல்வி, பொறியியல், மருத்துவம், அரசசேவை எனப் பல்வேறு துறைகளிலும் தமிழரின் வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது. கவனிக்கப்படக்கூடிய சமூகமாக தமிழர் ஏற்றமடைகின்றனர். அந்தவகையிலேயே ஜோர்ஜ் அருளானந்தத்திற்கு அளிக்கப்பட்டுள்ள விருதும் கவனிப்பைப் பெறுகின்றது.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பூர்வீகமாகக் கொண்டவரே ஜோர்ஜ் அருளானந்தம். அவர் தனது ஆரம்பக்கல்வியைப் பாட்டனார் றப்பியல் சட்டம்பியாரால், ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னர், ஸ்தாபிக்கப்பட்ட ஆனைக்கோட்டை ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பித்தவர். உயர்கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பயின்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளமானிப் பட்டத்தையும் பாங்காக்கிலுள்ள, சர்வதேசப் புகழ்பெற்ற, ஏசியன் இன்ஸ்ரிரியூட் ஒவ்டெக்னோலாஜியில் பொறியியல் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர்.

சுமார் மூன்று சகாப்தங்களுக்கு முன்னர் நியூஸ்லாந்துக்குப் புலம்பெயர்ந்தவர். சமூகம் குறித்த சிந்தனை கொண்டவர். சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதற்குப் பங்களிப்புச் செய்யவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். அதனால் சமூகப்பணிகளில் ஈடுபடுபவர். புதிய தேசத்துக்கு புலம்பெயரும்போது வேலை தேடல், குடும்பம், வதிவிடம், பிள்ளைகளின் கல்வி எனப் பலமுனைகளிலே அதிககவனம் தேவைப்படுவதாகும். அத்தகைய சூழ்நிலையிலும் கூட, தானுண்டு தன்னுடைய குடும்பம் என ஜோர்ஜ் அருளானந்தத்தால் இருந்து விட முடியவில்லை.

1990களில் தாயகத்தில் காணப்பட்ட சூழலினால், பலர் நியூஸ்லாந்துக்கு அகதி அந்தஸ்துக் கோரி வந்தனர். அத்தகையோருக்கு வேண்டிய ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்தவர். அதனுடைய தொடர்ச்சியாக நியூஸ்லாந்து தமிழ் அமைப்புக்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டவர். நியூஸ்லாந்து தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை அலங்கரித்தவர்.

நியூஸ்லாந்து சிற்சபேசன்

நியூஸ்லாந்து அரசியல் சமூக மட்டத்தில் தமிழ் சமூகச் செயற்பாட்டாளராக நன்கு அறியப்பட்டவர். நியூஸ்லாந்து தமிழ்ச் சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும் என்னும் தீர்க்கமான பார்வை கொண்டவர். சமூகத்தின் அடையாளத்தைக் காத்திரமாகப் பேணுவதற்கு மொழி அவசியம் என்பதை உணர்ந்தவர்.

அதனால், தமிழ்க் கல்வியை வழங்கக்கூடிய வாரஇறுதிப் பாடசாலைகளின் அவசியத்தை உணர்ந்து செயற்பட்டவர்.

தமிழ் சமூகத்தில் மட்டுமன்றி, நியூஸ்லாந்தின் பரந்துபட்ட சமூக மட்டத்திலேயும் பரவலான செயற்பாடுகளிலே ஈடுபடுபவர். காத்திரமான பங்களிப்புக்களை வழங்குபவர். அந்த வகையிலே, சமூக சேவைக்கான உயரிய விருது வழங்கி ஜோர்ஜ் அருளானந்தம் கௌரவிக்கப்பட்டுள்ளமை சாலப் பொருத்தமானதாகும்.

இக்பால் அலி





தமிழுக்கு அணி சேர்க்கும் குமரிவேந்தனின் நூல்

கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா) எழுதிய "மொழி, பண்பாடு, வரலாறு, மீட்பு, காப்பு, வளர்ப்பு" என்னும் நூல் சமீபத்தில் வெளியிடப்பட்டது. தமிழர்களுடைய மொழி வளர்ச்சியையும் பண்பாட்டையும் வரலாற்றையும் உரிய முறையில் வளர்த்தெடுப்பதோடு அதனைச் சரியான முறையில் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழ் மொழியின் வளர்ச்சியில் பாரிய விளைவுகளையும் பின்னடைவுகளையும் சந்திக்க நேரிடுமென கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார். தமிழ் மொழியின் ஆதி மூலமான " கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தமொழி" என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளோடு தமிழ் மொழியின் வரலாறு முதன்மையான நிலையில் உள்ள போது தமிழ் மொழியில் கலப்படம் பெற்றிருக்கும் ஏனைய மொழிச் சொற்களை எல்லாம் அறவே ஒழித்து விட்டு உயிர் வாழ்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் குரல் எழுப்பியுள்ளார்.

தமிழுக்கு உரித்தான சிந்துவெளி அகழ்வில் கண்டெடுத்த தமிழர் பண்பாட்டியல் விழுமியங்களில் நகை அணிதல், பெண்கள் குங்குமம் வைத்தல், ஆண்கள் சந்தனம் வைத்தல், பெண்கள் சேலை அணிதல், ஆண்கள் வேட்டி சால்வை அணிதல், வீட்டில் கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், கோலாட்டம், கும்மி உறவு முறை, திருமணம், விரதம், கோயில் சமயக் கிரியைகள் என இன்னும் எத்தனையோ பல்வேறுபட்ட பாரம்பரிய கலாசாரப் பண்பாட்டு அம்சங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தத் தவறினால் தமிழ் மொழியை வளர்ப்பதில், காப்பதில், மீட்பதில் கடுமையான விளைவுகள் ஏற்படுமெனவும் தூய தமிழ் மொழி கலப்பட மொழிக்குள் சிக்குண்டு இருப்பதிலிருந்து மீட்கின்ற தற்போதைய முயற்சிகள் சீர்குலைய நேரிடும் என்றும் தமது நூலில் கலாபூசணம் குமரிவேந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்..

தனித் தமிழ் சொற் பயன்பாடும் வடமொழிக் கலப்பில்லாத தமிழைக் கடைப்பிடிப்பதில் பெரியார். ஈ.வே.ரா, அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி போன்ற பலர் தூய தமிழை வளர்ப்பதில் அதிகம் உழைத்தார்கள். அதே போன்று மறைமகள் அடிகளின் மகள் நீலாம்பிகை அம்மையார் தனது திருமணத்தை பிறமொழிக் கலப்பின்றி தூய தமிழில் பேசும் ஒருவரையே தான் மாலையிட்டு கணவராக ஏற்பதாக அறிவித்து அப்படியே செய்து காட்டினார். இப்படி ஆரவாரத்தோடும் ஆசீர்வாதத்தோடும் வளர்ந்த தமிழ்த் தேசியம் வீழ்ச்சியின் நிலைமைக்குச் சென்ற விடயம் தொடர்பில் ஆய்வு செய்தல் மற்றும் அதிகம் கலந்துரையாடுவது அவசியம். அதிகம் பிறமொழிச் சொற்களைக் கலத்தல், பிறமொழிச் சொற்களைப் பேசி தமிழ் மொழிச் சொற்களை மறத்தல், மேற்கத்திய கலாசார மோகத்தால் தமிழ் பண்பாட்டு அம்சங்களைக் கைவிடுதல், தூய தமிழை வளர்ப்பதற்கான புதிய செயற்றிட்டங்கள் எதுவும் இல்லாமல் தமிழ் வீழ்ச்சி கண்டு கொண்டே செல்லுகின்றது. தூய தமிழ் மொழியை நேசிப்பவர்களால் தாங்க முடியாதளவுக்கு இருக்கிறது. "இலங்கை இந்திய மண்ணின் தொல் குடிகள் தமிழர்களே. அவர்களின் மொழியே உலகின் முதல் மொழி" என்பதை ஞானப் பிரகாசர் தேவநேயர் உறுதி செய்துள்ள பல விளக்கங்கள் முன் வைக்கப்பட்ட பொழுதும் தூய தமிழ் மொழியை பிறமொழிக் கலப்பின்றி முன்னெடுக்க முடியாத நிலையே இன்று வரை காணப்படுகிறது என்று நூலாசிரியர் குமரிவேந்தன் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மொழி தொண்மை வாய்ந்தது. இலக்கிய இலக்கணம் மிக்கது. எழுத்து, சொல், வசனம், ஓசை, இசை முதலிய தன்மையைக் கொண்டனவாக இருப்பது பற்றி எம்மால் பேச முடிகிறது. ஆனால், தமிழுக்கு அழகைத் தருவது தூய தமிழ், பண்பாடு, வரலாறு, மீட்பு, காப்பு, வளர்ப்பு முதலியவை தமிழர்கள் மத்தியில் எந்த நிலையில் உள்ளது என்று என எவராவது விளக்கம் கேட்க முற்பட்டால் அவர்களுக்கு திருப்திகரமான விடையளிப்பது சற்று சிரமமானதாகவே இருக்கும்.

பிறமொழிக் கலப்பில் உருவான ஆக்கங்கள் விதந்து பாராட்டப்படும் சந்தர்ப்பங்கள் அதிகளவு செல்வாக்குச் செலுத்துவதால் தூய தமிழை நேசிப்பவர்களின் செல்வாக்கு சிறப்பாகத் தென்படாது. பிறமொழிக் கலப்பு பற்றி ஆய்வாளர்களிடையே மாறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுவது என்பது ஒன்றும் அதிசயமல்ல. எனினும், தூய தமிழ் பற்றார்களும் ஆய்வாளர்களும் தூய தமிழின் பாதுகாப்புத் தன்மை பற்றிய மதிப்பீடொன்றை உருவாக்கவே கலாபூசணம் குமரிவேந்தன் தம் எழுத்துகளின் ஊடாக முயன்று வருகின்றார் எனலாம்.

தமிழ் நாட்காட்டியை வெளிக்கொணர்தல் அல்லது தூய தமிழைப் பிரகடனப்படுத்துதல் என்பதனை முன்னெடுப்பதிலுள்ள சிரமத்தின் காரணமாகவே "தூய தமிழ்தான் தமிழர்களின் கலாசாரப் பண்பாட்டை பாதுகாக்கும் தன்மையைக் கொண்டுள்ளது" என்று வலியுறுத்திக் கூறிச் செயற்பட்டாலும் தூய தமிழ் அல்லது தூய தமிழின் பண்பாட்டை மேலோங்கச் செய்வதில் அவரின் கருத்துகளின் கூற்றிலிருந்து தூய தமிழ் பற்றிய பேரெழுச்சியை உருவாக்குவதிலுள்ள சிரமமும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

குமரிவேந்தன் தம் எழுத்து மூலமான விழிப்புணர்ச்சி நடவடிக்கைகளின் மூலம் தமிழ் கலாசாரத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றார் என்று குறிப்பிடலாம். தமிழ் இலக்கிய எழுத்துலகப் பயணத்திலும் செயற்பாட்டிலும் தமிழ் பண்பாட்டியல் கலை கலாசார அம்சங்கள் முழுவதிலும் பொறுப்புற வைப்பதற்காகவும் அதனுடைய செயற்றிறனின் மதிப்பாய்வுகளைக் கோருவதற்காகவும் தூய தமிழ் மொழி வளர்ப்பாளர்கள், தூய பண்பாட்டாளர்கள், புத்துயிர்ப்பு பெறுவதற்கான வழிகளை வழங்கும் முன் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வலியுறுத்துகின்ற முக்கியமான தகவல்களைக் கொண்ட ஓர் ஆய்வு நூலாகப் புலப்படுகிறது.

"வைதீகவேத மதமும் வடமொழியாக பாதக மொழியை முன்னிலைப்படுத்தியதால் தமிழ் மொழி கலப்பு மொழியானது" என இந்நூலில் சுட்டிக் காட்டும் கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் தமது நூலின் அட்டைப் படத்தில் மொழி, பண்பாடு, வரலாறு, மீட்பு, காப்பு, வளர்ப்பு ஆகியவற்றுக்கும் அரும்பணியாற்றி உயிர் நீத்த பெரியார்கள் பற்றிய முழுமையான பார்வையொன்றையும் இந்நூல் தர முயல்கிறது.

இந்நூலின் முன்னுரையில் "நூலின் முதன்மைப் பொருள் மொழிதான். எனவே, மொழி சார்பான ஒரு வரலாற்றுப் பார்வையைக் கொண்டதாகும். சிந்துவெளி நாகரிகத்தின் அன்றைய போரில் ஆரியரோடு சேர்ந்து கொண்டு ஆரியத் தமிழராக மாறி எடுப்பார் கைப்பிள்ளைகளான தமிழர்களால் ஏற்பட்ட இழிவுகளும் வரலாற்று வழுக்களும் இடர்பாடுகளை மிகவும் தெளிவாகவும் யதார்த்தமாகவும் நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்" என்று பிரபல்யமான எழுத்தாளர் வளவை வளவன் சுட்டிக் காட்டியுள்ளார்.

கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குநர் வண.முனை.து.சி.யோசுவா அடிகளாரின் கவி வாழ்த்துரையில்,

தூய தமிழ் ஒலிக்கு வழியாகி
தமிழர் வாழ்வுக்கு அரணாகி
இனமான உணர்வுக்குத் துணையாகி
தமிழ் மொழிப் பேச்சுக்கு சுவையாகி
பாரெல்லாம் தமிழ் மணம் வீச காற்றாகி
மங்காத பேரொளி ஒளிர்ந்திட விழியாகி
உன் தமிழ் பணி தொடர்ந்திட
காலம் உனக்கு வாய்க்கட்டும்..

என்ற கவிவரிகளில் நல்லாசி வழங்கியுள்ளார் கவிஞர் வண.முனை.து.சி.யோசுவா அடிகளார் திருகோணமலை மோனாள் பள்ளி முதல்வர் கலாபூசணம் சோ. இராசேந்திரம், (தாமதைத்தீவான்), முல்லைக் கலைக்கோ. புலவர் வள்ளுவதாசன் (நா.சிவராசா) ஆகியோர் கவிவாழ்த்துகளை வழங்கியுள்ளனர். ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மேனாள் துணை முதல்வர் முனை, பண்டிதர் செ.திருநாவுக்கரசு நூலாசிரியர் பற்றிக் குறிப்பிடுகையில் "அவரது நூல்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இந்நூல்கள் அவரது உசாத்துணைத் தேடலையும் பிரஞ்ஞ பூர்வமான தரிசிப்புக்களையும் தமிழ் ஆர்வத்தையும் உணர்ந்து கொள்ள வழிவகுத்துள்ளது. பாவாணர் வழிநின்று மொழிநூல் அகழாய்வு செய்த திறத்தை அறியமுடிகிறது." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனை பேராசிரியர் சி.சிவலிங்கராசா நூலாசிரியர் பற்றிக் குறிப்பிடுகையில் குமரிவேந்தன் தமிழ் கூறும் நல்லுலகில் நன்கு அறியப்பட்டவர். ஆய்வு நெறிமுறை வழுவாது இவர் எழுதிய நூல்கள் காலம் கடந்தும் பேசப்படும்" என்று பின் நூல் அட்டைக் குறிப்பில் நூலாசிரியர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

306 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 15 தலைப்புக்களிலும் உபதலைப்புக்களிலும் இவ்வாய்வு நூல் ஆக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி இலங்கை குமரித் தமிழ்ப் பணிமன்றம் இந்த நூலைக் காலத்தின் தேவையென அறிந்து வெளியிட்டிருக்கிறது. தமிழ் மொழியின் வரலாற்று ஆய்வுக்கு சிறந்த மூல நூலாகக் கருதப்படும். தூய தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் பற்றாளர்களோடு சரிநிகர் சமமாக சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று துடிக்கும் இளம் ஆய்வாளர்களுக்கும் இந்த நூல் நல்ல கருத்துக்கருவியாக விளங்கும் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய சிறந்த நூலாகும். ■

நினைவேந்தல் அடக்குமுறைகளும்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
கொல்லப்பட்டவர்களுக்கும் அவர்கள் மேற்கொள்கின்ற நினைவேந்தல் என்பது பயங்கரவாதச் செயற்பாடாகவே பேரின ஆட்சியாளர்களினால் கருதப்படுகின்றது. பேரின மக்கள் மத்தியில் பயங்கரவாதச் செயற்பாடாகவே பிரச்சாரப்படுத்தப்பட்டு வந்துள்ளது. பேரின ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் அத்துடன் நின்றுவிட வில்லை. அதனை ஒரு பிரிவினைவாத அரசியல் செயற்பாடாகவே உருவகப்படுத்தப் பட்டிருக்கின்றது.

இது ஓர் இனத்திற்குரிய அடிப்படை உரிமை மீது மேற்கொள்கின்ற அப்பட்டமான அத்துமீறலாகும். அப்பட்டமான அடக்கு முறை. ஆட்சியாளர்களின் கொடுங்கோன் மைச் செயற்பாடு. அந்த வகையிலேயே 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்த நாள் தொடக்கம் யுத்தத்தில் உயிரிழந்த தமது குடும்ப உறுப்பினர்களையும் உறவினர்க ளையும் அவர்களின் இரத்த உரித்துடையவர்க ளும் ஏனையோரும் கூட்டு நினைவேந்தல் செய்வதை ஆட்சியாளர்கள், குறிப்பாக ராஜ பக்ஷாக்கள் தடை செய்தே வந்துள்ளார்கள்.

நினைவேந்தல் என்பது பயங்கரவாதச் செயற்பாடா.....?

அந்தத் தடை என்பது சாதாரணத் தடையல்ல. பயங்கரவாதிகளாகத் தங்களால் பிரகடனம் செய்த விடுதலைப்புலிகளை நினைவுகூர்வதாகக் கூறி, அதன் மூலம் பயங்கரவாதத்தை மீண்டும் உயிர்ப்பிப் பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக் குற் றம் சுமத்தினர். நாட்டில் மீண்டும் பயங்கரவா தத்தை உருவாக்குவதற்கான முயற்சியே அந்தக் கூட்டு நினைவேந்தல் என வியாக்கியானம் செய்தனர். அத்துடன் பயங்கரவாதத்திற்கு உயிரூட்டுவது நாட்டின் மிகக் கொடுமையான சட்டமாகிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்ட னைக்குரிய குற்றம் என்றும் அரசாங்கம் அறிவித் திருந்தது.

எனினும், பல்வேறு அடக்குமுறைகள், அச்சுறுத் தல்களுக்கு மத்தியிலும் தமது உரிமைகளை விட்டுக் கொடுக்காத வகையில் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவர்கள். அவற்றில் கலந்து கொண்ட வர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களைப் படையினர் கைது செய்தனர். பயங்கரவாதத் தடைச் சட்ட விதிகளின் கீழ் அவர்கள் கடுமையான விசார ணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டு இம்சிக் கப்பட்டனர். ஒரு சிலர் நீதிமன்ற வழக்கு விசார ணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்து கொள்ளச் செல்கின்ற சமூகத் தலைவர்கள், சமூக முக்கியஸ்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகளையும் பெயர் குறிப்பிட்டு பட்டியலிட்டு, நீதிமன்றங்களில் தடை உத்தரவு பெற்று பொலிஸார் செயற்பட்டனர். முள் ளிவாய்க்கால் நினைவு தினமாகிய மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பிரதேசம் எங்கும் படையினர்





குவிக்கப்பட்டு இறுக்கமான கண்காணிப்பு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. விசேட வீதிச் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு மக்களின் நடமாட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்டன.

முள்ளிவாய்க்கால் பிரதேசம் மட்டுமல்லாமல் வெளிமாவட்டங்களில் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்ட பொது இடங்களும் இத்தகைய இராணுவ கண்காணிப் புக்கும் பொலிஸாரின் தடை நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா நினைவேந்தல்: யுத்தம் முடிவுற்ற மறு ஆண்டாகிய 2010 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி முதன் முறையாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்யப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை அப் போதைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினராகிய ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியைச் சேர்ந்த சிவசக்தி ஆனந்தன் பல சமூக முக்கியஸ்தர் கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோருடன் இணைந்து ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இராணுவப் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு டன் கூடிய ஒரு பதற்றமான சூழலில் இந்த நினை வேந்தல் நிகழ்வை, வவுனியா புகையிரத வீதியில் அமைந்துள்ள சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டி ருந்தது. ஆனால், அன்றைய தினம் இறுதி நேரத்தில் அந்த மண்டபத்திற்கான நுழைவாயில் இழுத்து மூடப் பட்டது. இராணுவப் புலனாய்வாளர்களும் படை யினரும் அங்கு குவிக்கப்பட்டனர். நினைவேந்தல் நிகழ்வை நடத்தக் கூடாது என சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் அப்போதைய தலைவர் நா.சேனாதிராஜாவைப் படையினர் எச்சரித்தனர்.

வவுனியா நகரின் நுழைவாயில்கள் அனைத்தி லும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு காவல் கட மையில் ஈடுபடுத்தப்பட்டனர். இராணுவம் மற்றும் பொலிஸாரின் வீதிச் சுற்றுக்காவல் நடவடிக்கை களை அதிகரித்துப் பொதுமக்களை அச்சமடையச் செய்யும் வகையில் ஒரு பதற்ற நிலைமை உருவாக் கப்பட்டிருந்தது. ஆயினும் நினைவேந்தலை எப்படி யும் நடத்தி முடிப்பது என ஏற்பாட்டாளர்கள் தீர் மானித்தனர். சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்திற்குப் பதிலாக அந்த நிகழ்வை வவுனியா நகரசபையின் பழைய மண்டபத்திற்கு இடம் மாற்றினர்.

நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்ற வவுனியா நகரசபை மண்டபத்திற்கு பெரும் எண்ணிக்கையி லான புலனாய்வாளர்கள் வருகை தந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்களைப் படம் எடுத்தனர். வீடியோ காட்சிகளையும் பதிவு செய்தனர். மண்ட பத்தின் உள்ளே இராணுவப் புலனாய்வாளர்கள், வெளியில் எங்கும் இராணுவத்தினர். இதனால் படை யினர் என்ன செய்வார்களோ? என்னென்ன நடக்குமோ? என்ற பெரும் அச்சமடைந்த நிலையிலேயே அந்த நிகழ்வு நடந்தேறியது. முள்ளிவாய்க்கால் படுகொலை களுக்கு நீதி கோரி நடத்தப்பட்ட முதலாவது நிகழ்வு இதுவாகும்.

வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்று முள்ளி வாய்க்காலில் நினைவு முற்றம் அமைத்து நினைவேந் தல் செய்யும் வரையில் வவுனியாவில் நினைவேந்தல் நிகழ்வுகள் அச்சுறுத்தல்கள், உயிரச்சத்துக்கு மத்தி யில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது ஆரம்பத்தில் அரசியல் ரீதியாகத் தொடங் கப்பட்ட போதிலும் அது பின்னர் பொது நிகழ் வாக, பாதிக்கப்பட்ட மக்கள்சார்ந்த நிகழ்வாக மாறி யது முள்ளிவாய்க்கால் படுகொலைகள் குறித்து பொது வெளியில் பேச முடியாத, நினைவுகூற முடியாத இராணுவச் சூழலுக்குள் அந்த நினைவேந்தலை முன்னெடுப்பதற்குப் பொதுமக்களால் முடியா மல் இருந்தது. அதற்கு அப்போது அரசியல் கவ சம் ஒன்று அவசியமாகி இருந்தது.

ஆயினும் அந்த மானிடத்துக்கு எதிரான கொடுஞ் செயலை, மனித நேய அடிப்படையில் மனித உரிமை சார்ந்த நிலையில் மக்கள் மயப்பட்ட நிகழ்வாக அல்லாமல் அரசியல் இலாப நோக் கம் சார்ந்த ஒரு போக்கை அந்த நினைவேந்தல் கள் வெளிப்படுத்தி இருந்தன. அந்த நிகழ்வுக ளில் பாதிக்கப்பட்ட மக்களிலும் பார்க்க அரசி யல் தலைவர்களும் அரசியல் பிரமுகர்கள் மற் றும் அரசியல் கற்றுக்குட்டிகளுமே முக்கியமா கக் கலந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் இடம் பெற்றிருந்த இந்த அரசியல் சாய நிலைமைக்கு எதிராகக் குரல்கள் எழுந்தன. அது மக்கள் மயப் படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப் பெற்றது. அதன் விளைவாகவே ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறலா யின. பாதிக்கப்பட்ட மக்கள் அன்றைய தினம் மனமாற தமது துயரங்களை மடை திறந்த வெள்ளமாக வெளிப்படுத்தி சுடரேற்றி கொல் லப்பட்ட தமது உறவுகளின் ஆன்மாக்களுக்கு உளமார்ந்த அஞ்சலி செலுத்தினர்.

இந்த மனித நேய நிகழ்வுக்கு ராஜபக்ஷாக்கள் பயங் கரவாதமாக்கி தடைவிதித்து, அதற்கு அரசியல் சாயம்பூசினர். இது அவர்களின் தமிழினப் படுகொலை கொடூரப் போக்கின் வெளிப்பாடாக அமைந்திருந் தது. மானிடத்துக்கு எதிரான படுகொலைகளாக முள்ளிவாய்க்கால் கொடுங்கொலைகள் சித்தரிக்கப் பட்டாலும் அடிப்படையில் அதற்குத் தமிழ் மக்க ளின் அரசியல் அதிகார உரிமை சார்ந்த அரசியல் முகம் உண்டு. அதனை முள்ளிவாய்க்கால் நினை

வேந்தல்களின்போது விடுக்கப்படுகின்ற, விடுக்கப் பட்டுள்ள பிரகடனங்களில் காண முடியும்.

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் தமிழ் மக்க ளின் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான ஆட்சியாளர்களின் அராஜக நடவடிக்கைகளின் நீட் சியாகவே விளைந்தன. தமிழ் மக்களின் போராட் டம் அரசியல் உரிமை சார்ந்தது. அவர்களின் வாழ்வு ரிமையுடன் இணைந்தது. ஒரு நாட்டுத் தேசிய இனத் தின் இறைமையுடன் பின்னிப் பிணைந்தது. இதன் காரணமாகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பிரகடனங்களில் அரசியல் உரிமைகளுக்கான குரல் ஒலிக்கின்றது.

பதின்மூன்று வருடங்களாக முள்ளிவாய்க்கால் படுகொலைக்கான நீதி கோரிய குரல்களையும் நினை வேந்தல்களையும் பயங்கரவாதச் செயற்பாட்டின் ஓர் அம்சமாகவும் பிரிவினைவாதத்தின் ஒரு செயற் புள்ளியாகவுமே தென்னிலங்கை நோக்கி வந்தது. பதின்மூன்றாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்த லின்போது அந்த பேரினவாத அரசியல் உளவியலில் ஒரு உடைவேற்பட்டிருக்கின்றது. அதுவே, காலிமுகத் திடலைத்தழுவி, பாராளுமன்றத்தில் ஒளிர்ந்து, முன் னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் இல்லத்திலும் சுடர் வீசியுள்ளது.

இது தலைகீழ் மாற்றத்தின் ஒரு சிறிய அடையாள மேயாகும். இந்த நிலைமாற்றத்தை தென்னிலங்கை யில் சமூக மயமாக்க வேண்டும். மக்கள் மயப்படுத்த வேண்டும். அது வெறுமனே ராஜபக்ஷாக்களுக்கு எதி ரான அரசியல் மாற்றம், அரசியல் கட்டமைப்பு மாற் றம் என்ற குறுகிய வட்டத்திற்குள் குமைந்து போய் விடக் கூடாது. கோட்டா கோ கம என்ற ஆட்சி மாற்றக் கோரிக்கைக்கு தமிழ் மக்களின் ஆதரவைத் தேடுகின்ற ஓர் அரசியல் பிரச்சார நகர்வாக மட்டுப்ப டுத்தப்பட்டு விடக் கூடாது.

இது இந்தப் பதின்மூன்றாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வெளிப்படுத்தியுள்ள அரசியல், சமூக நிலையிலான ஒரு பாடமாகும். ■



வேண்டுகோள்

அனைத்து தமிழ் மக்களும் தமிழில் பேசி நேரடியாக நன்மையடைய வேண்டும் என்பதற்காகவே இத்தளம் முற்றிலும் இலவசமாக உருவாக்கப்பட்டுள்ளது. தயவு செய்து நியாயமானதும் உண்மையானதுமான விளம்பரங்களை மட்டுமே இங்கே பதிவிடுங்கள்

Mobile Apps

எங்களது iphone மற்றும் android Apps ஐ பதிவிறக்குவதன் மூலம் இலகுவாக உங்கள் விளம்பரங்களை பதிவேற்ற மற்றும் கையாள முடியும்.

பதிவிறக்க

சிலம்பு

எம்.பி பதவிக்காக முட்டி மோதும் அ.தி.மு.க தலைவர்கள்

தமிழகம் உள்ளிட்ட 15 மாநிலங்களில், 57 ராஜ்யசபா எம்.பிக்களுக்கான இடங்கள் காலியாக உள்ளன. தமிழகத்தில் காலியாக உள்ள 6 இடங்களுக்கான தேர்தல் ஜூன் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், விஜய குமார், நவநீதகிருஷ்ணன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.எஸ். பாரதி, ராஜேஷ்குமார் ஆகிய ஆறு பேரின் பேர் பதவி காலியாகிறது. தற்போது நடைபெறவுள்ள ராஜ்ய சபா தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நான்கு எம்.பிக்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இரண்டு எம்.பிக்களும் இடம் பெற உள்ளனர்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இரட்டைத் தலைமை வழி நடத்துவதால் கடும் போட்டி நிலவுகிறது. ப.எடப்பாடி பன்னீர்செல்வத்துக்கு விருப்பமான ஒருவருக்கும், ஓ.பன்னீர்செல்வத்தின் ஆசியைப் பெற்ற ஒருவருக்கும் எம்.பி பதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது. அந்த இரண்டு இடங்களுக்

காக மூத்த தலைவர்கள் துண்டு போட்டு காத்திருக்கிறார்கள்.

முன்னாள் அமைச்சர்கள் ஜெயகுமார், பொன்னையன், சி.வி.சண்முகம், கோகுலஇந்திரா, அமைப்பு செயலர் ஜே.சி.டி.பிரபாகரன், மருத்துவ அணி நிர்வாகி டாக்டர் அபரூபா சுனந்தனி, நடிகை விந்தியா போன்றவர்கள் எம்.பி,பதவி கேட்டு படையெடுக்கின்றனர். வன்னியர், யாதவர், கிறிஸ்தவர் சமுதாயத்திற்கு பிரதிநிதித்துவம் இல்லை என்ற நிலை நிலவுகிறது. எனவே, வன்னியர் சமுதாயத்தினர் மத்தியில் சி.வி.சண்முகம், ஜே.சி.டி., பிரபாகரன் யாதவர் சமுதாயத்தினர் மத்தியில் கோகுல இந்திரா, டாக்டர் அபரூபா சுனந்தனி ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவுகிறது. கிறிஸ்தவர், யாதவர் என்ற இரண்டு தகுதி அடிப்படையில் டாக்டர் அபரூபா சுனந்தனிக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்என கோரிக்கை விடப்பட்டுள்ளது. இவர் அரசியலுக்கு வரும் முன் அரசு டாக்டராக பணியாற்றினார்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் அரசியலுக்கு அழைக்கப்பட்டதால், அரசு டாக்டர் பதவியை இராஜினாமா செய்து விட்டு கட்சியில் இணைந்து பணியாற்றி வருவதால் அவருக்கு வாய்ப்பு தர வேண்டும் என, கட்சியின் இரட்டை தலைமையிடம் மருத்துவ அணி நிர்வாகிகள் தரப்பில் மனு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் நடிகை விந்தியாவும், சட்டசபை தேர்தலில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஜெயலலிதா உயிரோடு இருந்த போது, அவருக்கு எந்த தேர்தலிலும் போட்டியிட வாய்ப்பு வழங்காததால், அவருக்கு இந்த முறை வாய்ப்பு வழங்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது

பல பிரச்சினைகளின் மத்தியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்னேற முயற்சிக்கிறது. தேர்தல் கால கூட்டணிக் கட்சிகள் வெளியேறியதால் இரண்டு எம்.பிக்களைப் பெறும் சந்தர்ப்பம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

மாநிலத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சித் தலைமை வெளியிட்டுள்ளது. தி.மு.கவுக்கு கிடைக்கவுள்ள நான்கு இடங்களில் ஒன்றை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 2022 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஆறு மாநிலங்கள் உறுப்பினருக்கான தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கான நான்கு இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று இடங்களில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளராகத் தஞ்சை கல்யாணசுந்தரம், ராஜேஷ் குமார், கிரிராஜன் ஆகியோர் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஒரு ஆண்டு பதவி இருந்த நிலையில் இராஜினாமா செய்து விட்டு சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டார். அந்த இடத்துக்கு நடந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ராஜேஷ்குமார் தேர்வானார். மிகக் குறைந்த காலமே அவர் எம்.பியாக இருந்ததால், அவருக்குப் பதவி நீட்டிப்பு கொடுக்கும் வகையில் ஒரு இடத்தை அவருக்கு கொடுக்கலாம் என்று கூறப்பட்ட நிலையில், அவரை வேட்பாளராகத் தலைமை அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ராஜ்யசபா தேர்தலில் போட்டியிட்டு எம்.பியானவர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த கட்சி முன்னோடிகளில் ஒருவரான நாமக்கல் கே.ராமசாமியின் பேரன் கே.ஆர்.என். ராஜேஷ்குமார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராக இருந்து மறைந்த பேராசிரியர் அன்பழகனுக்கு மிக நெருக்கமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அத்துடன்திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்கு மிக நெருக்கமானவர் என்பதால் முதல் வாய்ப்பு கிடைத்தது. ஆனால், அவரது பதவிக் காலம் குறுகியதாக இருந்ததால் இப்போது மீண்டும் ராஜ்யசபா எம்.பி சீட் கிடைத்துள்ளது.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத்துறை செயலாளர் என்ற அடிப்படையில் கிரிராஜனுக்கு ஏற்கெனவே தேர்தல்களில் போட்டியிட தலைமை வாய்ப்பு வழங்கி இருந்தது. முதல்வர் மு.க.ஸ்டாலினின் கொளத்தூர் தொகுதி விவகாரங்களைக் கையாளக் கூடியவர். தற்போதைய அமைச்சர் சேகர் பாபுவுக்கும் மிக நெருக்கமானவர். இந்த அடிப்படையில் விசுவாசத்திற்கான பரிசாக மீண்டும் கிரிராஜனுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ராஜ்யசபா வேட்பாளர்கள் பட்டியலில் யூகத்தில் இடம்பெறாதவர் தஞ்சை சு.கல்யாணசுந்தரம். 1950 களின் இறுதியில் இருந்து கழகத்தின் தீவிரமான தொண்டராய் கட்சிப்பணி தொடங்கியவர். தமது 19 வயதில் ஆரியபடை வீடு ஊராட்சி மன்ற உறுப்பினரானவர். கும்பகோணம் ஊராட்சியின் முதல் பெருந்தலைவராக இருந்தவர் கல்யாணசுந்தரத்தின் தந்தை சுந்தரராஜ். தி.மு.கவில் பல்வேறு கட்சிப் பணிகளை ஆற்றியவர். 1989 இல் மூப்பனாரை எதிர்த்து பாபநாசம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். 1998 இல் தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டவர். தற்போது தஞ்சை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் பதவியில் இருந்து வருகிறார். சீனியர் கோட்டாவில் இம்முறை தஞ்சை சு.கல்யாணசுந்தரத்துக்கு வாய்ப்பு கிடைத்திருப்பது அவரது ஆதரவாளர்களை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது.

தமிழக பதவியை புதுமுகத்திற்கு வழங்க ராகுல் முடிவு செய்துள்ளார். ஆனால், சிதம்பரத்திற்கு வழங்க சோனியா விரும்புகிறார். ஒரு குடும்பத்திற்கு ஒரு பதவி என்ற தீர்மானத்தை, சிந்தனையாளர் மாநாட்டில் நிறைவேற்றி உள்ளதால், கார்த்தி சிதம்பரம் எம்.பியாக இருப்பதால், சிதம்பரத்திற்குப் பதவி கிடைக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. ‘டில்லியில் முகாமிட்டாலும், தனி விமானத்தில் பறந்து வந்தாலும், அவர்களுக்கு முன்னுரிமை கிடையாது உழைத்தவர்களுக்குதான் முன்னுரிமை வழங்கப்படும்’ என, ராகுல் ஏற்கெனவே கூறியிருந்தார். இந்நிலையில், தமிழகத்தில் யார் கட்சிக்காக உழைத்தனர் என்ற அறிக்கையை, மேலிடப் பொறுப்பாளர் தினேஷ் குண்டு ராவிடம், ராகுல் கேட்டுள்ளார்.

அவர் அளிக்கும் அறிக்கையைத் தொடர்ந்து, இறுதியாக வேட்பாளர் யார் என்பதை சோனியா, ராகுல் முடிவு செய்து, அறிவிக்க உள்ளனர். அவர்களின் அறிவிப்புப் பட்டியலில் சிதம்பரம் இடம் பெறுவாரா? அல்லது புதுமுகத்திற்கு வாய்ப்பா? என்ற கேள்வி அக்கட்சி வட்டாரங்களில் எழுந்துள்ளது. ■

04 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

தமிழகத்தில் போராட்டங்கள் நடைபெற்றன.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் கலந்துகொண்ட செங்கொடி அதைத் தொடர்ந்து, மூவர் விடுதலையை வலியுறுத்தி ஆகஸ்ட் 28 ஆம் திகதி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீக்குளித்து உயிரிழந்தார். இது தொடர்பாக செங்கொடி எழுதியிருந்த கடிதத்தில், "தோழர் முத்துக்குமாரின் உடல் தமிழகத்தை எழுப்பியதுபோல் என்னுடைய



அற்புதம்மாளின் அறவழிப்.....

இன்னும் ஓடுகிறேன் என ருவிட்டரில் பயோ வைத்துள்ள அற்புதம்மாள் இனி அதனை மாற்றிக் கொள்வார் எனத் தெரிகிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், மூவர் தூக்குத் தண்டனைக்கு எதிராகத் தீக்குளித்து உயிர் துறந்தனர். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து பேரறிவாளனை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், அவரது விடுதலைக்காக தனது உயிரையே நீத்த செங்கொடியின் தியாகத்தை பலரும் போற்றி வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஓரிக்கை பகுதியைச் சேர்ந்த செங்கொடி (21) மக்கள் மன்றம் என்ற அமைப்புடன் இணைந்து சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். மக்கள் பிரச்சினைகள் தொடர்பாகப் போராடுவது, விழிப்புணர்வு ஏற்படுத்துவது எனச் சமூகம் சார்ந்து அவர் இயங்கி வந்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட, பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் கருணை மனுக்கள் அப்போதைய குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டிலால் நிராகரிக்கப்பட்டு செப்ரெம்பர் 9 ஆம் திகதி மூவரையும் தூக்கில் போட திகதி குறிக்கப்பட்டது. இந்தத் தண்டனையை ரத்து செய்யக் கோரி

உடல் இந்த 3 தமிழர்களின் உயிரைக் காப்பாற்றப் பயன்படும் என்ற நம்பிக்கையுடன் செல்கிறேன். இப்படிக்கு தோழி செங்கொடி" எனக் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து மூவர் மரண தண்டனைக்கு எதிரான முன்னெடுப்பு தீவிரமடைந்து சட்டப் போராட்டம் மூலம் அவர்கள் தூக்கில் போடப்படுவது தடுக்கப்பட்டது. செங்கொடியின் மரணத்துக்குப் பின்னர் எழுவர் விடுதலை விவகாரம் பல தரப்பு மக்களையும் வேகமாகச் சென்றடைந்து.

இந்நிலையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையாகியுள்ள பேரறிவாளன் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, அரசின் ஆதரவையும் மக்கள் ஆதரவையும் எனக்குக் கிடைக்கச் செய்தது தங்கை செங்கொடியின் தியாகம்தான் என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

பெரறிவாளனின் விடுதலையில் தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒருமித்துக் குரல் கொடுத்தன. மாநில அரசின் குரலை அடக்குவதற்கு ஆளுநரை மத்திய அரசு கையாளாக வைத்திருப்பது வழமை. ஆளுநர் என்பவரின் அதிகாரம் என்ன என்பதை நீதிமன்றம் தெளிவாக வரையறுத்துள்ளது. பேரறிவாளனின் விடுதலை ஏனைய ஆறு பேரின் விடுதலையின் ஆரம்பப் புள்ளியாக உள்ளது. ■

தாட்சாயணி எனும்...

(11 ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாங்கள் அறிந்திருந்தோம்
யுத்தத்தின் அனல் மூண்ட நாட்களில்
துரோகத்தின் நிழல் மூடிய காலங்களில்...

சில ஹைக் கூ கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

வானத்தைப் பிரிய மாட்டாமல்
முகில்கள் விடும் கண்ணீர்
மழை!
கிணற்றுக்குள் பறக்கிறது
ஹெலி கொப்டர்
தும்பி

இப்படிப் பல கவிதைகள் இத்தொகுப்பை அலங்கரிக்கின்றன. இங்கு கையாளப்பட்டுள்ள கவிதையின் மொழி குறியீடாய், படிமமாய், எம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன.

அடுத்து நாம் அறிமுகம் செய்வது தாட்சாயணியின் ராணியம்மா என்ற சிறுகதைத் தொகுப்பாகும். இத்தொகுப்பில் ஒரு உறவின் வெட்டு முகம் தொடக்கம் கனவுகளின் கீதம் வரை பதினாறு கதைகள் இடம் பெற்றுள்ளன.

புதிய தரிசனம், ஞானம், மல்லிகை, வெளிச்சம், தாயகம், கலைமுகம், சுடர் ஒளி, நமது ஈழநாடு, சுதந்திரப் பறவைகள் ஆகிய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் இடம்பெற்ற சிறுகதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. வலி சுமந்த படைப்புகள் என்ற தலைப்பில் இத்தொகுப்புக் குறித்த அணிந்துரை ஒன்றை கலாநிதி.த.கலாமணி எழுதியுள்ளார். அவர் தம் உரையில் தாட்சாயணியின் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகளும் பெண்மையின் உணர்வுகளும் மேலோங்கி வெளிப்படும் இந்நூலிலும் கூட அது சாத்தியமாகியுள்ளது என்று கூறியுள்ளதுடன் உணர்வுச் சுழிப்புகளின் விபரிப்பினூடாக மனித மனம் படும் துயரங்களையும் பதைப்புக்களையும் இச்சிறுகதைகளில் தாட்சாயணி படம் பிடித்துக் காட்டியுள்ளார் என்றும் கூறியுள்ளார்.

இத்தொகுப்பில் உள்ள கதைகள் போரும் அழிவுப் பேரலையும் காதலின் பிரிவுத் துயரும் மனித வாழ்வில் ஏற்படுத்திய அவலங்களை கருப்பொருள்களாகக் கொண்டு புனையப்பட்டுள்ளன. எளிமையும் அதே நேரம் அழகியலைக் கைவிடாத புனைவு மொழியும் சிறு சம்பவங்களையும் சிறந்த கதையாக்கும் லாவகமும் இத்தொகுப்பின் வழியாகவும் வெளிப்படுவதையும் காணலாம். இவரது தொடர் இயக்கம் மகிழ்வை அளிக்கிறது. எதிர்காலத்தில் நாவல் ஆசிரியையாகவும் மிளிர வாழ்த்தி இவரது படைப்புகளை அறிமுகம் செய்வதில் தீம்புனலின் புதுப்புனல் அகமகிழ்கிறது. ■

சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம்

(07 ஆம் பக்கத்தொடர்ச்சி)

நான் இங்கு சொல்வது ஒன்றும் புதிய விடயம் அல்ல. தமிழ் பேசும் பிரதேசங்களின் கல்வி மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை இனங்கண்டு ஆய்வுகள் நடாத்தி, திட்டங்களை வகுத்து அரச நிர்வாக கட்டமைப்புகள் உள்நாட்டு, வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் உதவியுடன் திட்டங்களை நிறைவேற்றிய பல கட்டமைப்புகள் எங்கள் சமுதாயத்தில் இருந்திருக்கின்றன. அப்போதெல்லாம் நாங்கள் உச்ச நிலையில் இருந்திருக்கின்றோம். அவை மட்டும் காரணம் என்பதைவிட, அவையும் முக்கிய பங்கு வகித்திருக்கின்றன. பல கல்வியியலாளர்கள், துறைசார் வல்லுநர்கள் ஒருங்கிணைந்து செயற்பட்ட காலங்கள் இருந்திருக்கின்றன. உதாரணங்களைக் காட்டுகின்றேன்.

1972 இல் கண்டியில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களால் பேராசிரியர் துரைராஜா தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட "ஊற்று" என்ற அறிவியல் சஞ்சிகையில் பல துறைசார் வல்லுநர்கள் பங்கெடுக்க ஆரம்பித்து, பல பிரச்சினைகளை அணுகும் ஒரு சிந்தனைக்குளமாக (Think Tank) காலப்போக்கில் மாற்றம் பெற்றது. 1981 இல் "ஊற்று" ஒரு நிறுவனமாகப் பதியப்பட்டு பல்வேறு தளங்களில் சமூகப் பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்கான பணிகள் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட்டன. 70, 80 களில் பலருடைய அறிவுசார் சிந்தனை மாற்றங்களில் ஊற்று பங்களித்திருக்கிறது. 1990 வரை இந்த "ஊற்று" நிறுவன ஆய்வுப் பணிகளில் பல்வேறு கல்வியியலாளர்கள் இணைந்து பணியாற்றியமையை நூலக நிறுவன ஆவணப்படுத்தல்களில் இருந்து அறிய முடிகிறது.

பின்னர், யுத்தம் உக்கிரமாகிய பின் ஊற்று சஞ்சிகை வெளிவரமுடியாமல் போனதாகத் தெரிகிறது.

1990களின் பின்னர் ஆய்வகம், பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், கல்வி வளர்ச்சிக் கழகம் போன்றவை இந்தச் சுயாதீன பணியை செய்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால், கடந்த 15 வருடமாக இந்தப் பணி மிகப் பெரிய வெற்றிடமாக உள்ளது. அதன் பாதிப்புகளைத்தான் இன்று நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புகள் உதவத் தயாராக இருக்கின்றனர். ஆனால், பரந்துபட்ட அளவில் பிரச்சினைகளை இனங்கண்டு மூலோபாயமாகத் (Strategic Planning) திட்டமிட்டு வளர்க்கக்கூடிய பல புத்திஜீவிகளைக் கொண்ட சுயாதீன அமைப்பு தமிழ் பேசும் அத்தனை பிரதேசங்களையும் உள்ளடக்கி உருவாக்கப்படவேண்டியது அத்தியாவசியப் பணியாக உள்ளது. இது காலத்தின் தேவை.

இவ்வாறான அமைப்பை உருவாக்க பலர் இன்று முயற்சிகளை ஆரம்பித்திருந்தாலும் அவை குறுகிய நோக்கங்களுடன் சுருங்கிவிடக்கூடாது என்பதற்காக இவ்வாறான கட்டமைப்பு கொண்டிருக்க வேண்டிய பண்புகளை நேரடியாகப் பேசவேண்டி உள்ளது.

ஏனெனில், இதை உருவாக்க முயலும் போது பொதுவாக எங்கள் சமுதாயத்தில் இருக்கும் ஒரு முக்கிய பிரச்சினை தலைதூக்கும். அதுதான் பதவிகள்.

அத்தியாயம் தொடரும்...

சென்னை செஸ் ஒலிம்பியாட் தொடரில் ரஷ்யா பங்கேற்கத் தடை

44 ஆவது செஸ் ஒலிம்பியாட் தொடரில் ரஷ்யா பங்கேற்காது என்று தொடரை நடத்தக் கூடிய போட்டி இயக்குநரும் இந்திய செஸ் கூட்டமைப்பின் செயலாளருமான பரத் சிங் சௌகான் உறுதிப்படுத்தியுள்ளார்.

உலக நாடுகள் கொண்டாடும் சதுரங்கத்தின் உலகக் கோப்பை என வர்ணிக்கப்படும் செஸ் ஒலிம்பியாட் போட்டி முதல் முறையாகத் தமிழ்நாட்டில் நடைபெறவுள்ளது. சுமார் 200 நாடுகளைச் சேர்ந்த உலகின் மிகச் சிறந்த 2000ற்கும் மேற்பட்ட செஸ் வீரர்கள் ஒருங்கே சங்கமிக்கும் இந்த மௌன யுத்தம் ஜூலை 28 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை மாமல்லபுரத்தில் தமிழக அரசால் நடத்தப்படவுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போரால் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த இந்தத் தொடரில் ரஷ்யா பங்கேற்கத் தடை தொடரும் என இந்தப் போட்டியை நடத்தக்கூடிய இயக்குநரும் அகில இந்திய செஸ் கூட்டமைப்பின் செயலாளருமான பரத் சிங் சவுகான், உறுதிப்படுத்தி உள்ளார். மேலும், இதுவரை 137 நாடுகளைச் சேர்ந்த 250 ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதுவரை நடைபெற்ற 43 ஒலிம்பியாட் தொடர்களில் சோவியத் யூனியனாக 18 முறையும் ரஷ்யாவாக 8 முறையும் தங்கப்பதக்கத்தை வசப்படுத்தியுள்ளனர் ரஷ்ய வீரர்கள். மாமல்லபுரம் ஒலிம்பியாட் தொடரில் நடப்பு சாம்பியனான ரஷ்யாவிற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், இப்போட்டிக்கான தர வரிசையில் இந்தியா மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

சமீப காலமாக சீனாவில் கொரோனா பரவல் அதிகமாக இருப்பதால் சீன வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலையும் உருவாகி உள்ளது. இதுவரை சீன அணியும் செஸ் ஒலிம்பியாட் தொடரில் பங்கேற்க பதிவு செய்யவில்லை எனக் கூறுகிறார் போட்டியை நடத்தக்கூடிய மைதானத்தின் பொறுப்பாளரும் தமிழ்நாடு சதுரங்க சங்கத்தின் துணைத் தலைவருமான ஆனந்த் ராமன்.

செஸ் ஒலிம்பியாட் தொடரில் முதல் மூன்று இடங்களுக்குள் இந்திய அணி கோலோச்சுகிறது. அத்துடன் ஒன்லைன் செஸ் ஒலிம்பியாட்டில் தங்கம் மற்றும் வெண்கலப்பதக்கத்தையும் நேருக்கு நேர் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட்டில் ஒரு வெண்கலத்தையும் இந்திய அணி கைப்பற்றியுள்ளது. ■

பாலிவுட் நடிகராகிறார் ஷிகர் தவான்

இந்திய அணிக்கு ரி20 கப்டனாக ரோஹித் சர்மா இல்லாத போது நியமிக்கப்படலாம் என்ற அளவுக்கு தனது ரி20 ஆட்டத்தைத் தக்கவைத்துள்ள ஷிகர் தவானுக்கு சினிமாவிலும் களமிறங்கி அதிரடி காட்ட ஆசை பிறந்துள்ளதாக பாலிவுட் வட்டாரச் செய்திகள் கூறுகின்றன.

பாலிவுட்டில் உருவாகிவரும் படமொன்றில் ஷிகர் தவானும் இணைந்துள்ளாராம். அவர் தொடர்பான காட்சிகள் ஏற்கெனவே எடுத்தும் முடிக்கப்பட்டுவிட்டதாம். இதற்கு முன்னர் சந்தீப் பாட்டீல், சையத் கிர் மானி, கபில் தேவ் உள்ளிட்டோர் சினிமாவில் நடித்துள்ளனர். ஹர்பஜன் சிங் நடித்துள்ளார், அந்த வரிசையில் தற்போது ஷிகர் தவானும் பாலிவுட்டில் கலக்க முடிவு செய்துள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிரிக்கெட் வீரர் என்பதைத் தவிர, இந்திய கிரிக்கெட் அணியின் கப்பர் ஷிகர் தவான் தனது சமூக ஊடகங்களில் ஏராளமான ரசிகர்களைப் பின் தொடர்கிறார். ஷோலேயில் பிரபல வில்லன் அம்ஜத் கானின் பெயர் கப்பர் சிங், ஷிகர் தவானின் செல்லப் பெயரும் கப்பர்தான். ஷிகர் தவான் தனது சமூக ஊடகங்களில் ஏராளமான ரசிகர்களால் பின்தொடரப்படுகிறார்.

இது வெறும் கெஸ்ட் ரோல் இல்லை. தவனுக்கு இதில் கொடுக்கப் பட்டுள்ள ரோல் படத்தில் மிக முக்கியமான ஒன்று என்கிறது பிங்கி வில்லா செய்தி. இது தொடர்பாக விபரம் அறிந்த ஒருவர் ஊடகம் ஒன்றிற்குக் கூறும் போது, ஷிகர் எப்போதுமே நடிகர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பவர், அவருக்கு இந்த ரோல் வழங்கப்பட்டபோது அவர் மகிழ்ச்சியடைந்தார். ஷிகர் அந்த கதாபாத்திரத்திற்கு பொருந்துகிறார் என்று தயாரிப்பாளர்கள் உணர்ந்து சில மாதங்களுக்கு முன்பு அவரை அணுகினர் என்றார்.

முழுப் படத்திலும் ஷிகர் தவான் வருவாராம். ஆகவே, இது அவருக்கு முழு நீளத் திரைப் படம் ஆகும். கடந்த ஆண்டு அக்ஷய் குமாரின் ராம் சேது படத்தின் செட்களில் ஷிகர் தவான் காணப்பட்டதாகவும் பாலிவுட் வட்டாரங்கள் தெரிவித்தன. அப்போது அந்தப் படத்தில் ஷிகர் தவான் நடிக்கிறார் என்ற வதந்திகள் பரவின, ஆனால், ஷிகர் தவானும் அக்ஷய் குமாரும் தோஸ்த் என்பதால் அவரைச் சந்திக்கச் சென்றதாகக் கூறப்பட்டது. இப்போது முழுப் படத்தில் ஷிகர் தவான் நடித்துள்ளார். இவர் பகுதிகளுக்கான ஷூட் டிங் நிறைவடைந்துள்ளது. படத்தின் தலைப்பு உள்ளிட்ட பிற விபரங்களின் இரகசியங்கள் காக்கப்பட்டு வருகின்றன. ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 21.05.2022 அன்று வெளியிடப்பட்டது.